Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 58 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 அக்டோபர் 2023

## இந்திய – சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதியினை முறியடிக்க புறப்பட்ட தளபதிகளை சிறீலங்கா சிங்கள கடற்படை கைது செய்து யாழ். பலாலி படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டபோது 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 36ஆம் ஆண்டு வீரவணக்கம்




கப்டன் கரன்

கப்டன் பழனி

கப்டன் நளன்

கப்டன் ரகு

மேஜர் அப்துல்லா

கப்டன் மிரேஸ்

லெப். தவக்குமார்

லெப். அன்பழகன்

2ஆம் லெப். றெஜினோல்ட்

2ஆம் லெப். ஆனந்தகுமார்

விடுதலைப்போர் வரலாற்றில்
விதையான முத்துக்களே!
எதிரிக்கு புதிரான
எம்தமிழ்ப் புலிகளே!
ஆண்டுகள் பல கடந்தும்
மீண்டெழும் எம் இலட்சிய தீயில் - தமிழ்
ஆள்கின்ற செய்தியினை - உமக்கு
அணிவிப்போம் மாலையாக.

சங்கத்தமிழ்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**































விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203



# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




## கடற்புலிகள் மகளிர் சிறப்புத் தளபதி

# கடற்கரும்புலி லெப். கேணல் நளாயினி!

தமிழ்த் தேசிய இனத்தினது அரசியல் சுபீட்சத்திர்க்கான, ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் வரலாறு என்பது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வரலாறுதான்.

இந்தப் புதிய சரித்திரத்தின் கதாநாயகனாய் முன்னின்று, தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள், விடு தலைப் போராட்டத்தை நெறிப்படுத்தி நகர்த்திச் செல்கின்றார். தமிழீழ தனியரசை நோக்கிய இந்த நெடுவழிப்பதையில், பெரிய பெரிய கனவுகளோடு அவர் பிரசவித்த குழந்தைகளில் ஒன்றுதான் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்.

விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற பிரதான பரிமாணங்களில் ஒன்றான கடற்புலிகள் அமைப் பானது, எங்கள் சரித்திர ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கப்படவேண்டிய ஒரு அத்தியாயமாக ஆகி விட்டது.

வரலாற்றுத் தொடரோட்டத்தில், யுத்தம் ஊடறுத்துச் செல்லும் இன்றைய நாட்களைக் குறிக்கும் ஒரு காலத்தின் பதிவாகவும், கடற்புலிகள் மகிமையை பெற்றுவிட்டனர். சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது யுத்தத்தினூடு முன்னேறிச் சென்ற எங்கள் சுதந்திரப் போராட்டத்தை வளர்ச்சியின் இன்னொரு கட்டப் பரிமாணத்திற்கு உந்தித் தள்ளியவர்கள் கடற்புலிகள் என்றால், அது மிகையானதல்ல.

புரட்சியை அடிபணியச் செய்தல், அல்லது அழித்து ஒழித்து விடுதல் எனும் மூலோபாயத்ததுடன் தமிழீழத்தின் தொண் டைக்குழியை நெரிபதைப் பிரதான தந்திரோபாயமாகக் கொண்டு ஆகக் கடைசி வழியெனக் கருதி எதிரி வரைந்த போர் முறைத் திட்டமொன்றையும் எங்களது கடல் வேங்கைகள் தான் முறியடித்தனர்.

பொருத்தமானதாகவும், மிகச் சரியாகவும் கணிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில், கடற்புலிகள் அமைப்புக்குப் புத்துயிர்ப்புக் கொடுத்து யுத்த அரங்கில் மேடை ஏற்றியதன் மூலம் யாழ்ப் பாண முற்றுகையை உடைத்தேறிந்ததுடன், வரலாற்றில் சிறப்பான இந்தப் பாத்திரத்தை வகிக்கும் சர்ந்தப்பத்தையும் அவர்களுக்கு வழங்கிய பெருமை தேசியத்தலைவர் அவர் களையே சாரும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய தமிழர்களின் சரித்திரத் தில், சோழப் பேரரசன் ராஜராஜனின் கடற்படை அந்த மன்ன னுக்கு வெற்றிகளைப் பெற்றுக் குவித்துத் தந்து வரலாற்றைப் படைத்தது.

இன்று ...

தமிழினம் மீளவும் எழுட்சிகொண்டுள்ள சரித்திரத் திருப் பவேலையில், தமிழினப் பெருந்தலைவர் பிரபாகரனின் கடற் படை மீண்டுமோர் வரலாற்றைப் படைத்து முத்திரை பதித்து வருகின்றது. இக்காலத்தில் படைக்கப்படுகின்ற இந்தப் புதிய சரித்திரத்தில் முன்னைய எக்காலத்திலுமே இல்லாததாக ஒரு வரலாற்று அபூர்வம் பிறப்பெடுத்துள்ளது.

அதுதான் கடற்புலிகளின் பெண்கள் படையணியாகும்.







கடலோடிப்போன ஆண் உறவுகளைத் தேடி கரைகளில் கண் ணீர் வடித்து நின்ற எங்கள் பெண்டிரை கடலேறிச் சென்று களமாட வைத்துப் புதியதோர் காவியம் படிக்கச் செய்தார் எங்கள் தேசியத்தலைவர்.

ஆரம்பத்தில் சிலர் நம்பிக்கையீனப்பட்டார்கள். கடலும் பெண் களுக்கு சரிப்பட்டுவராத சமாச்சாரம் என்றார்கள். கடல்சார் நடவடிக்கைகளிலும், கடற்சண்டைகளிலும் மகளிரை ஈடுபடுத் துவது சாத்தியமில்லாத சங்கதி என்று கருத்துச் சொன்னார்கள்.

தேசியத்தலைவர் மட்டும் தளராதிருந்தார்.

அவரது சிந்தனையோட்டத்தில் முளைவிட்ட செயற் திட் டங்களை யெல்லாம் விடுதலைப்புலிகள் இயக்கம் வீரசாத னைகளாகப் படைத்த பழைய வரலாறுகளின் போது, வெளி ஆட்களுக்கு அவையெல்லாம் நம்புவதர்கரிய ஆச்சரியங்க ளாய்த் திகழ்ந்தன. அவற்றைப் போன்றதொன்று தான் கடற் புலிகளின் மகளிர் படையணியுமாகும்.

தேசியத்தலைவரது ஆழ்மனக் குகைக்குள்ளிருந்து உதய சூரியனாகப் பிரகாசித்த எண்ணக் கருவைச் செயற்பாட்டுச் சாத்தியமாக்கி தளபதி சூசையின் தோளுக்குத் தோல் தந்து நின்று பாடுபட்டு மகளிர் கடலைணியை வானுயரக் கட்டியெழுப் பிய அதன் முதற் சிறப்புத் தளபதி தான் லெப். கேணல் நளாயினி.

மகளிர் படையணியிலிருந்து கடற்புலிகளுக்கென வழங்கப்பட்ட 30 பேர் கொண்ட முதற் குழுவில் அவளோடு அங்கம் வகித்து, கடற்புலிகள் பெண்கள் படையணியின் மூலவேர்களுள் ஒன் றாக இயங்கி, அதனைத் திடகாத்திரத்தோடு வளர்த்தெடுக்க உரம் சேர்த்த இன்னொருத்திதான் மேஜர் மங்கை. இந்துமா சமுத்திரத்தின் அலை மலைகளைத் தாவிக் கடந்து, தமிழீழப் பெண்ணினம் சாதனை படைக்கவென அல்லும் பகலும் அயராது உழைத்த அந்த மேனிகள், இப்போது ஓய்ந்து விட்டன.

புதிய வரலாற்றின் அத்தியாயங்களாக... புதிய வழித்தடத்தின் சுவடுகளாக... புதிய மாற்றமொன்றின் திறவுகோல்களாக அவர்கள் கடற்தாயோடு கலந்துவிட்டார்கள்.

விண்மீன்களை வைத்துத் திசையறியச் சொன்னதிலிருந்து, கடலோடிச்சென்று களமாடக்கற்றது வரை, ஒன்றாகச் சோறு குழைத்து ஊட்டி வளர்த்தெடுத்து எம்மை ஆளாக்கிவிட்ட அந்த ஆசான்கள் ஆருயிர் நண்பிகள் அன்புக்கினிய எங்கள் தள பதிகள் இனி வரமாட்டார்கள். ஓயாது மூசிவந்து கரைகளில் மோதி அறையும் அலைகளைப்போல அவர்களது சுவடுகளில் ஆயிரமாயிரமாய் நாங்கள் தொடர்ந்து அணிவகுப்போம்.

கடற்புலிகளுக்கு வரும்போதே கரும்புலிகளாக வந்தவர்கள் அவர்கள்... வந்ததன் பின்பு கரும்புலிக் காவியத்தைக் கடலிலே தான் படைக்கவேண்டும் என்பது ஒரு ஆக்ரோசமான வேட்கை யாக அவர்களை ஆட்கொண்டது.

எதிரியை எதிர்கொண்ட ஒவ்வொரு கடற்சண்டைக் களத்திலும் மட்டுமல்ல, "சாகரவர்த்தனா"வைச் சாகடித்தும் அவர்கள் அதனைத்தான் சாதித்துப் போனார்கள். 'ஒப்பரேசன் தவளை'க் குப் படையெடுக்கும் வேளையில் பாமா சொல்லிவிட்டுப் போன வைகள் நளாயினியின் ஆழ்மனக் குகையில் பசுமையாய்த் தேங்கிக் கிடந்தன.

"தரைச் சண்டைகளில் நாங்கள் திறமையாகச் செயற்ப்பட வேண்டும் தான், ஆனால் நாங்கள் கடற்சண்டைக்குரிய வர்கள். நாங்கள் கடலிலே சாதிப்பது மட்டுமல்ல கடலிலேதான் சாகவும் வேண்டும். 'யாழ்தேவி'யில் சுகன்யாவை இழந்தது எனக்குள் துரதிஸ்டம். எனவே நீங்கள் திறமையாகச் சண்டை யிட்டு கவனமாகத் திரும்பி வாருங்கள்."

காவலரண் தொகுதி ஒன்றைத் தாக்கும் அணிக்குப் பொறுப் பாகச் சென்று வெடிபட்டு மருத்துவமனைக் கட்டிலில் சுயநினை



வற்றுக் கிடந்தது "பாமா... பாமா..." என்று நளாயினி கத்திக் கொண்டேயிருக்க பாமா எங்களைவிட்டும் அவளைவிட்டும் எட்டாத தூரத்திர்க்குப் போய்விட்டாள்.

காங்கேசன்துறையில் கண்காணிப்பு நிர்வாகக் கப்பலைத் தகர்க்க கடற்கரும்புலிகள் புறப்பட்டுப் போனபோது தானும் போக முடியவில்லையே என்ற ஆதங்கம் "நளாயினிக்கு" தன்னுடைய பிள்ளைகளுக்கு முன்பு தான் கரும்புலியாகப் போகவேண்டும் என்ற மன உணர்வோடு இருந்தவள்தானே அவள்.

திரும்பிவந்த தாக்குதல் அணிக்குள் அங்கையற்கண்ணி இல்லாததைக் காணநேர்கையில் அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நளாயினி உண்மையிலேயே வித்தியாசமானவள் தான். சிந்திப்பில் செயற்பாட்டில் சுறுசுறுப்பில் நினைத்ததைச் செய்து முடிக்கும் உழைப்பில் அவள் எங்களைவிட மேலோங்



கித்தான் நின்றாள்.

ஒரு மிதிவண்டிதானும் இல்லாமலிருந்த ஆரம்ப நாட்களில், மங்கையும் அவளும் ஒழுங்கைக்கு ஒழுங்கை நடையாய் நடந்தார்கள். வீதிவீதியாகத் திரிந்து, வீடுவீடாகக் கருத்துச் சொல்லி, புதிது புதிதாகப் பிள்ளைகளைச் சேர்த்து, கடற்புலிகள் மகளிர் அணியை உறுதியான ஒரு அத்திவாரத்தின் மீது அவர்கள் கட்டியெழுப்பினார்கள்.

பெரிய பெரிய கனவுகளெல்லாம் அவர்களது நெஞ்சுக் கூட்டுக்குள் புதைந்து கிடந்தன. "ஆண்போராளிகள் துணையின்றி கடலில் நாங்கள் தனித்து சண்டை பிடிக்க வேண்டும்" தங்களது கனவுகளையெல்லாம் நனவாக்க அவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. நளாயினிக்கும், மங்கைக்கும் உள்ளே ஒரு வேட்கை குடிகொண்டிருந்ததை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் கண்டோம்.

"ஆண் போராளிகளுக்கு நிகராக அல்ல. அவர்களைவிட மிகையாக நாங்கள் செய்து காட்டவேண்டும் , அவர்கள் சாதிப்பதை விட அதிகமாக நாம் சாதிக்க வேண்டும்." இந்த வைராக்கியம் தான் அவர்களுக்குள் இருந்து அவர்களை இயக்கியது. எங்களையும் இயக்குவித்தது.

தமது சொல்லாலும், செயலாலும் எப்போதும் எங்களுக்கு உறுதியூட்டிக்கொண்டு இருந்தார்கள். அலை குமுறும், ஆர்பரித்தெழும், கடற்கரைகளில் மூசி அடிக்கும். 'பெரிய கடலாக' இருந்த கடலைப்பார்த்து அச்சப்பட்டு நின்றோம் நாங்கள்.

ஒவ்வொருத்தராய்க் கடலில் இறங்கி மெல்ல மெல்லத் தவழவிட்டு, காலடித்து கையடித்து முக்குளித்து நிமிர்ந்த எங்களை திரும்பவும் தவழவிட்டு மீன்களுக்கு இணையான நீச்சல்க்காரர்களாக உருவாக்கிவிட்டவர்கள் அவர்கள்தான்.

உளம் தளராமல், மனம் குழம்பாமல் தன்னந்தனியாய்க்கூடக் கதைத்துத் தெளிவூட்டி, அன்போடு எங்களை அரவணைத்து நல்வழிப்படுத்திய தளபதி அவள். போகும் போதுகூட எங்கள் மனங்களில் எந்தச் சந்தேகத்தியும் அவள் கேள்விக்குறியாக விட்டுவிட்டுப் போகவில்லை. பூவரசங்குளம் சண்டையில் சன்னங்கள் துளையிட்ட ஆழமான வடுக்களைத் தாங்கியதால் நிரைகுறைந்து போயிருந்தது அவளது மேனி. எவ்வளவோ எல்லாம் சாதிக்கவேண்டும் என்ற அவளின் உணர்வின் வேகத்திற்கு, அந்த புண்பட்ட உடலால் ஈடுகொடுத்து இயக்க முடியவில்லை பாவம். என்றாலும் நளாயினி ஓய்ந்தாளில்லை. தன்னுடைய சக்திக்கு மீறியும் அவள் செயற்ப்பட்டாள். உடலை வருத்தி, வருத்தித்தான் உழைத்தாள்.

கடற்புலிகள் மகளிர் படையணி குறுகிய காலத்தில் கண்ட இந்தப் பெருகிய வளர்ச்சியானது அதனுடைய அடிவேரில் தன்னுடைய உயிரையே உருக்கிவார்த்த அவளது உழைப்பின் பெறுபேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

மேற்கில்...

இந்துமாசமுத்திரத்தின் தொடுவானத்தைச் செவ்வானமாக்கி விட்டு, சூரிய தேவன் ஆபிரிக்காவுக்குப் போய்விட்டிகிற அந்திப் பொழுது. கிழக்கு வேனில் நிலவு நங்கை இரவு உணவுக்குப் புறப்படுவாள். வளர்பிறையாய்... தேய்பிறையாய்... முழுநிலவாய் அவள் வருவாள். சில நாட்களில் வராமலும் விடுவதுண்டு.

ஆனால்...

நளாயினி கடலுக்கு வராமல் ஒரு நாளும் விடாள். 60 கடல் மைல் வேகத்தில் வீசும் கடற்காற்று சில்லிடும். நீர்பதம் செறிந்த உவர்க்காற்றின் வருடலில் மேனி சிலிர்க்கும். அமைதியாக, அல்லது ஆர்பரித்து அலைக்கரம் வீசி எங்கள் நீர் நங்கை நிலைமைகளோடு பாசம் பேசுவாள்.

உடலுறையும் அந்தக் குளிரில் நளாயினியும், மங்கையும் தோழிகளோடு கடலில் இறங்குவார்கள். பகலெல்லாம் எமக்கு பயிற்சி தந்து ஓயாமல் இயங்குகின்ற அவர்கள், இரவான பின்னர்தான் எம்மை ஓய்வாக உறங்கவிட்டு தமக்காகப் பயிற்சி எடுக்கக் கடலுக்குப் போவார்கள்.

கடல்சார்ந்த எந்த அறிவும் இல்லாமல் தான் அவர்கள் கடற்புலிக்கு வந்தார்கள். புதிய போராளிகளுக்குப் பயிற்சி வழங்கும்



அதேவேளையில் கடலுக்கு அவர்களும் புதியவர்களே..!

கனிந்து பழுத்த மீனவக் கிழவர்கள் கடலோரங்களில் குந்தியிருக்க, மெல்லக் கதை கொடுப்பாள் நளாயினி. பொக்கை வாய் திறந்து, தன வீரதீரங்களைப் பேசத் தொடங்கும். கடல்பற்றி, கடலின் சுழிகளைப் பற்றி, நீரோட்டங்கள் பற்றி, நடுக்கடல் மர்மங்கள் பற்றி ஆழ்கடல் இரகசியங்கள் பற்றி கிழவர்களது முதிர்ந்த அறிவினை அவள் உறிஞ்சிக் கறப்பாள். பின்னர் அவற்றை எங்களுக்குப் பருகத்தருவாள். பிள்ளைகளுக்கு எதையும் சொல்லிக் கொடுக்க முன்னர் அதனை நாங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லுவதோடு நில்லாமல், அவர்கள் செய்யவும் முனைந்தார்கள்.

மீனவர்களை வெல்லவேண்டுமென்று நளாயினிக்கு ஆசை. திரண்ட அலைகளோடு போராடி அவள் வழித்து நீந்துவாள். கைகள் சோறும். உடலியக்க சத்தியின் கொள்ளளவு குறையவும் அவள் தொடர்ந்து முன்னேறுவாள். கால்கள் சோரும். வல்லு இழந்த உடல், வலு நிறைந்த மனதோடு முரண்டு பிடிக்கும். மனந்தளராது நீந்திக் கடலலைகளை வெல்ல முயன்றும் முடியாமற் போய், உடல் துவண்டு களைத்தவளை நாங்கள்தான் கரை சேர்த்தோம் பலதடவைகள்.

அவள் பாவம். எவ்வளவு சுமைகளைத்தான் தனியொருத்தியாக அவள் தாங்குவாள்...? நிர்வாகத்தைக் கவனித்தாள். நிதியைக் கவனித்தாள். படைகளைக் கவனித்தாள். பயிற்சிகளையும் கவனித்தாள். அரசியலையும் கவனித்தாள். சண்டைகளையும் கவனித்தாள். எங்களது உணவைக் கவனித்து, உடைகளையும் கவனித்ததோடு ஒவ்வொரு பிள்ளையின் உள்ளத்தையும் கவனித்தாள்.

எல்லா இடங்களிலும் தானே நின்றாள். எல்லாப் பாரங்களையும் தானே சுமந்தால். நாளாயினையைப் பார்த்து நாங்கள் பிரமித்திருக்கின்றோம்.

# கடற்கரும்புலி மேஜர் மங்கை!



தேசியத் தலைவருடன் கடற்கரும்புலி மேஜர் மங்கை, லெப். கேணல் நளாயினி

எங்களது மகளிர் படையணி கடலில் வளர்ந்த ஒவ்வொரு துளிர்ப்பிலும் அவளது குருதியும் வியர்வையும்தான் கலந்திருக்கிறது. அவளை எக்காலத்திலும் நாங்கள் மறக்கவே முடியாது. பெண்கள் கடற்படையின் தோற்றமும் வளர்ச்சியும் அந்தத் தளபதியும் உயிரால் எழுதப்பட்ட வரலாறு. வல்வெட்டித்துறையில் ஆறுமுகசாமி ஐயாவின் 8 செல்வங்களில் இவள் 6வது குழந்தை. ஐந்தாண்டுகளுக்கு முன்பு கல்விப் பொதுத்தராதர உயர் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு இயக்கத்திற்கு வந்தபோது பெரிய வசதிகளைத் தூக்கி எரிந்துவிட்டுத்தான் அவள் புறப்பட்டாள்.

வீட்டுக்குப் போயிருந்த ஒரு பொர்ணமி நாளில் முற்றத்தில் அம்மாவின் மடியில் தலைசாய்த்துப் படுத்திருந்த பிள்ளையை ஆசையோடு வருடிவிட்ட அன்னையிடம்... அக்காவுக்குப் பத்து இலட்சம் கொடுத்து கலியாணம் செய்து வைத்தீர்கள் அம்மா, எனக்கு ஐந்து இலட்சம் இயக்கத்திற்கு கொடுக்க என்றாளாம். மிகச் சரியானவளாய் இனங்கண்டு கடற்புலிகளின் தொழில் நுட்பக் கல்லூரிக்கு மங்கையைப் பொறுப்பாக நியமித்தாள் நளாயினி.


சின்னப் பெண் குழந்தை. தத்தித் தவழ்ந்து மணல் அளைந்தது. அது வளர்ந்து பெரியவளாகிய பின்பு தரை உழுது, நெல் விதைத்து, உரம்போட்டு, வயல் பார்த்து, அறிவி வெட்டி, சூடடித்து, மூடைகட்டி, வீட்டுக்கு எடுத்து வந்து காசாக்குவது வரை எல்லாவற்றியும் தானே செய்தது என்றால் எவரும் நம்பமாட்டார்கள்.

அப்படிபட்டவளின் கையில் தொழில் நுட்பக் கல்லூரி. நெல் மணிகள் குலுங்கும் வயல் சேனையாய் அது செழித்தது. வடமராட்சியில் ஊரிக்காடு கிராமம். கணபதிப்பிள்ளை சோதி தம்பதிகளின் 9 குழந்தைகளில் இரண்டேபேர்தான் பையன்கள் கடைசித் தங்கைக்கு நேர் மேலே மங்கை.

குடும்பத்தின் வறுமை புத்திகூர்மையான அந்தக் குழந்தைக்கும் பக்கத்திலேயே இருந்த பள்ளிக்கூடத்திற்கும் இடையில் வேலிபோட்டது. தளர்ந்து போகவில்லைத் மங்கை. அந்த இழப்பால் இளகிப் போகாமல் இறுகியது நெஞ்சம். குடும்பத்தின் துயரமும் அவளை உந்தித்தள்ளியது.

அவள் வெளியில் வந்தாள். ஊரவருக்கு நிகராக அன்னவளும் வயலில் இறங்கினாள். குடும்பத்தின் துன்பச்சிளுவைக்கு அந்தப் பெண்குழந்தையும் தோள் கொடுத்தது. அவளது வியர்வை பாய்ந்தது சேறாகி வரலில் செழித்துக் குலுங்கிய நெல் மணிகள் அக்காவோருத்தியின் திருமணத்தின் போது கழுத்தில் சங்கிலியாய் மின்னியது முண்டாம்.

இப்போது அதைச் சொல்லிச்சொல்லித்தான் அம்மா அழுகிறாள். ஊருக்குள் யாருக்கும் உதவி என்றால் ஓடோடிச் சென்று ஒத்தாசை புரிந்துகொண்டிருந்தவள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாள் நாட்டுக்காகப் போராடப் புறப்பட்டு வந்தாள். அரசியல்




பணியில் மக்கள் அரங்கத்திலும் , படையியல் பணியில் யுத்த அரங்கத்திலும் கடமையாற்றிய அந்த வீராங்கனையை கடற் புலிகளின் அணி அலைகளின் மடியில் களமாட அழைத்தது.

கடற்புலிகளின் ஆரம்ப நாட்களில் அரியாலையிலிருந்து அராலி வரையான கரையோரப் பிரதேசத்தில் மங்கைக்கு அரசியல் வேலை. எங்கள் அன்புக்கினிய மக்களைப் பற்றியே அவள் எப்போதும் பேசிக்கொண்டிருப்பாள். அல்லல்படும் எம் மக்க ளது துன்பங்கள் தீரவேண்டும், துயரப்படும் எம் மக்களை நின் மதியோடு வாழவேண்டும். அடக்கப்பட்ட எம்மக்கள் சுதந்திர மாய் ஆளவேண்டும்.

ஆத்மார்த்தமான ஒரு தாகமாக அவளுக்குள் இவை ஊர்றேடுத்ததை நாங்கள் அறிவோம் . இந்த உள்ளக்கிடங்கை சொல்லாகவும் - செயலாகவும் அவளுக்குள்ளிருந்து வெளிப் பாடு கண்டது.

தட்டிக்கேட்க யாருமின்றி எம் மக்கள் நீட்டி நிமிர்ந்து படுக்க வேண்டுமானால் இம் மண்ணின் இளைய சந்ததி போராட்டத் தோடு அணி திரள வேண்டுமென்றாள், யுத்தத்தில் கலந்து அதனை விரைவாக வென்றெடுக்கச் சொன்னாள்.

படிப்படியாக மங்கை பெற்ற வளர்ச்சி, எங்களுக்கு அபாரமான தாகத் தெரிந்தது. ஐந்து கடல் மைல்கல் நீந்திக் கடந்து விடு வந்தவளுக்கு தலைவர் பரிசு வழங்கினார்.

ஆரம்பத்தில் எதுவுமே தெரியாதவளாய் மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு திரிந்தாள். நாளடைவில் எல்லாம் தெரிந்த அவளிடம் மற்றவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டு திரிந்தார்கள். யுத்தப்புயல் கிளாலிக் கடற்பரப்பில் மையம் கொண்டிருந்த வரலாற்றுக் காலத்தில் அலைகிழித்து விரைந்து பொறி கக்கிப் பகை விரட்டும் விசைப்படகுகளில் அவள் ஓட்டி, பின்பு சண்டைக்காரி, அடுத்து படகுத் தளபதி.

யாழ் நீரேரியிலிருந்து கடற் போர்க்களம் படிப்படியாக விரி வாக்கம் கண்டு, பெருங்கடலில் படர்ந்த போது எழுந்த தேவை யின் காரணமாக உகந்த வடிவங்களில் படகுகளை அமைக்க வென உருவாக்கப்பட்ட, படகுக் கட்டுமானத் தொழிட்சாலை மங்கையின் பணிப்பின் கீழ் இயங்கியது.

படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்களைக் கையாளும் தொழில்நுட்பப் பிரிவிற்கும், மண்டைதீவிலிருந்து இழுத்து வந்த நீருந்து விசைப்படகு 'ஒப்பறேசன் தவளை'க்குப் பிறகு 6 ஆக அதிகரித்த போது படகுகளின் உள்ளிணைப்பு இயந்திரங் களைக் கையாளவென உருவாக்கப்பட்ட தொழில்நுட்பப் பிரிவிற்கும் மங்கைதான் பணிப்பாளர்.

மன உறுதி விடாமுயற்சி தன்னம்பிக்கை. வகுப்பு எடுக்க ஆரம் பிக்கும் போது கரும்பலகையில் இப்படி எழுதித்தான். தொடங் குவாள்... உயரத்துக்கு அவளை உயர்த்திச் சென்றதும் இவை யேதான். ஒன்றாக நீந்தி... ஒன்றாக பயின்று... ஒன்றாக படகோடி... ஒன்றாகக் களமாடிய தன் தளபதியோடு எங்கள் படையணியை வளர்த்தெடுக்க எப்போதும் துணைநின்ற அந்த வீராங்கனை இறுதிப் பயணத்திலும் நளாயிநிக்குத் துணை யாகவே போய்விட்டாள்.

நளாயினிக்கும், மங்கைக்கும் உள்ளே நீருபூத்த நெருப்பாக ஒரு இலட்சியம் எப்போதும் கனன்று கொண்டே இருந்தது. ஒரு டோரா அடித்து மூழ்கடிக்க வேண்டுமென்று. ஆனால்... புவீந்திரன், மணியரசனும் பருத்தித்துறையில் "சுப்படோறா" வை நொறுக்கிவிட இவர்களது குறி, அதிகரித்த ஆவேசத்தோடு பெரிய கப்பல்களில் மீது விழுந்தது.

ஒரு தரையிறங்கு கலத்தை அல்லது ஒரு கட்டளைக் கப்பலை இல்லாமல் போனால் ஒரு கண்காணிப்புக் கப்பலை, இப்படியாக ஏதோ ஒரு பெரிய இலக்கை அவர்கள் தேடியலைந்தார்கள். சமுத்திர அலைகளின் மீது அவர்கள் விரித்து வைத்திருந்த மரண வலைக்குள் சிலாபத்துறைக் கரையிலிருந்து 15 கடல் மைல் தூரத்தில் விழுந்து சிக்கியது "சாகரவர்த்தனா".

தலையெடுக்கவிடாத தாக்குதல் மரண அடி வளைத்துத் தாக்கிய சண்டைப் படகுகள். அதன் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்த முயல இருண்ட வானில் சன்னங்களின் ஒளிக்கோடுகள். கிளாலி ஏரியில் எம்மக்கள் பார்த்த வர்ணஜாலங்கள், சிலாபத் துறைக் கடலில் அரங்கேறின. வேகங்கொண்டன வெடிகுண் டுப் படகுகள். குறுக்கும் நெடுக்கும் பாய்ந்த சன்னங்கள் இலக்கை இனங்காண்பதில் சிக்கலைத் தோற்றுவித்தன. சரி யாகத் தெரியாவிட்டால் இடிபடுவது எங்கள் படகாய்ப் போய் விடும். விரியும் படகிலிருந்து... நளாயினியின் குரல், உப்புக் காற்றில் அலைவரிசையாகி "றாடர்" நிலையத்திலிருந்த 'தொலைத்தொடர்பு சாதனத்தில்' ஒலித்தது.

"இரண்டு பக்கமும் வெளிட்சம் தெரியுது. 'இலக்கு' விளங் குதில்லை சரியான பாகையைச் சொல்லுங்கோ..."

திரும்பத்திரும்ப இதையே கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு துல்லியமான திசை வழியைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது "றாடர்" நிலையம்.

விசையைப் பெற்றது படகு... 40 கடல்மைல் கிட்டிய வேகம்.

அலைகள் அடிபணிந்தன.

"தொலைத்தொடர்பு சாதனம்" ஒலித்தது.

இலக்கு தெரியுது.



நல்லா கிட்ட வந்திட்டம்...

இடிக்கிறம்...

ஆவேசமாக நெருக்கம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

மங்கையும், நளாயினியும்.

மின்னலின் பிரகாசிப்போடு அணியத்தில் மோதிய முழக்கம் கடலில் இறைந்து அடங்கு முன்னர்...

கடையாலில் விழுந்தது அடுத்த இடி...!

அது... லக்ஸ்மனும், வாமனும்.

சகாரவர்த்னா கப்பல் ஒரு பக்கமாய்ச் சரிந்து மூழ்கிக் கொண் டிருந்த கப்பலின் மீது, தாவிப் பாய்ந்தனர் கடற்புலிகள்.

மூர்க்கத்தனமான தாக்குதல்...

துப்பாக்கிகளின் முரட்டுத்தனமான உறுமல்... !

"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிச மென்று சங்கே முழங்கு" செய்யுள் ஆக்கியவர் பாரதிதாசன்.

செய்து காட்டியவர் பிரபாகரன்.

கடலுக்குள் குதித்துக் கைகளைத் தூக்கியோரை, கப்பலில் எடுத்த "50 கலிபர்களோடு" கரைக்குக் கொண்டுவந்தனர் கடற்புலிகள்.

ஒருவர் கப்பலின் தளபதி அடுத்தவர் கப்பலின் துணைத் தளபதி.

போர்க்கைதியாய் உள்ள கொமாண்டர் சொன்னார்...

எனது 20 வருட படியில் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத நிகழ்வு, என் கண்களால் பார்த்த இந்தத் தற்கொடைத் தாக்குதல் தான்.

தேசியத்தலைவர் கூறினார்...

சிறீலங்கா கடற்படையின் ஒரு கப்பல் தளபதியை, தமிழீழக் கடற்படையின் ஒரு பெண் தளபதி சிறைப்பிடித்தாள். அவர் உயிரைக் காக்க சரணடைந்தார். இவள் வெற்றியைப் பெற உயிர் துறந்தாள்.


1994.09.19 அன்று நள்ளிரவில் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் எந்தவிதப் பிசகுமே இல்லாமல் செய்து பார்த்த பயிற்சிகளில் எந்த தவறுமே நேராமல் நளாயினியும், மங்கையும் இவர்களைத் தொடர்ந்து வாமனும், லக்ஸ்மனும் மோதியதில் "சாகர வர்த்தனா" மூழ்கத் தொடங்கியது.

நளாயினியையும் இன்னும் எண்ணற்ற வீரர்களையும் தன் னுடன் இணைத்துக் கொண்ட கடலைன்னையின் அலைகரங் களிலே நீந்தி விளையாடிப் படகோட்டிப் பயிற்சிகள் செய்யும் அந்த வேகமான வீராங்கனைகள் யார்...?


தெரியவில்லை...?

இன்னும் கொஞ்சம் கிட்டப் போய்ப் பார்ப்போமா... அட "நளா



# தமிழீழ செய்திகள்




## வவுனியாவில் சிங்கள மயமாகும் தமிழர் விவசாய நிலம் பின்னணியில் சிங்கள பௌத்த பிக்கு!

செப்டம்பர் 15, 2023

வவுனியா - கருப்பனிச்சாங்குளம் பகுதியில் உள்ள விவசாய நிலத்தை சிங்கள மக்களுக்கு மயானம் அமைக்க வழங்கியமைக்கு கிராமத்தின் தமிழ் மக்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தமிழ் கிராமமான கருப்பனிச்சாங்குளம் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தை அருகில் உள்ள கொக்குவெளி பகுதி சிங்கள மக்களுக்கு மயானம் அமைப்பதற்கு இரு பிக்குகளின் தலைமையில் வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்களால் இன்று (15.09.2023) காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் குறித்த நிலத்தை அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக்களத்தினர் மக்களது எதிர்ப்பையடுத்து அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயல பிரிவுக்குட்பட்ட கருப்பனிச்சான்குளம் கிராமம் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கிராமம் ஆகும்.

குறித்த கிராமத்தில் வசித்து வந்த தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக இடப்பெயர்ந்து சென்றதுடன், யுத்தம் முடிவடைந்த பின் மீண்டும் வருகை தந்து தமது காணிகளில் குடியேறி, விவசாய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கிராமத்தில் தமது மயானம் இருந்ததாக தெரிவித்து அருகில் உள்ள கொக்குவெளி சிங்கள கிராம மக்கள், இரு பிக்குகளின் தலைமையில் அந்த பகுதியில் அமைந்துள்ள விவசாய காணி ஒன்றினை உரிமை கோரி வந்ததுடன், தற்போது அதனை தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளதாகவும் தெரிவித்து குழப்பம் விளைவித்து வந்துள்ளனர்..

இது தொடர்பில் காணியினை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தி வரும் கருப்பனிச்சாங்குளம் கிராமத்தை சேர்ந்த நபர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,"இது எமது பரம்பரை வழியான காணி. இங்கு எமது மூதாதையர்கள் முதல் நாங்கள் வரை நீண்ட காலமாக குடியிருந்து வருகின்றோம். பின்னர் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் மீண்டும் வருகை தந்து காணியில் விவசாய செய்கையினை முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது எமது காணியில் காய்க்கும் நிலையில் பெரிய தென்னை மரங்களும் நிற்கின்றன. இந்நிலையில் எனது காணியில் சிங்கள மக்களுக்கான மயானம் இருந்ததாக கூறி, அதனை மீள அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, எமது காணிக்கான அனுமதி பத்திரத்தை பிரதேச செயலகத்தால் வழங்காமல் முடக்கி வைத்துள்ளனர்.

இந்த காணியில் முன்பு மயானம் இருந்தமைக்கான எந்த சான்றுகளும் இல்லை. மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்டமைக்கான சான்றுகள் கூட இல்லை. குறித்த சிங்கள கிராமத்திற்கு அண்மையில் மூன்று மயானங்கள் உள்ளது. அவர்கள் அங்கு சடலங்களை புதைக்க முடியும். தற்போது குறித்த காணியை சுற்றி தமிழ் மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

எனவே இங்கு மயானம் அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பது நீதியான செயற்ப்பாடாக தெரியவில்லை" எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை, குறித்த பகுதிக்கு பிக்கு இருவரின் தலைமையில் வருகை தந்த சிங்கள மக்கள் குறித்த காணியில் தங்களது மூதாதையர்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த காணியில் மயானம் அமைப்பதற்காக அதனை மீட்டுத்தருமாறும் பிரதேச செயலாளரிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் பொலிஸார் இரு தரப்புடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். குறித்த காணி



1967 ஆம் ஆண்டில் மயானமாக இருந்ததாக நில அளவைத்திணைக்களத்தின் கள ஆய்வு குறிப்பில் இருப்பதாக பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்துள்ளார்.

எனினும், நில அளவைத் திணைக்களத்தின் 2019 அறிக்கையின் படி அது வன இலாகாவிற்குரிய காணியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மயானம் இருந்ததாக எந்த பதிவுகளும் இல்லை என தமிழ் மக்கள் கூறியுள்ளனர். இதனையடுத்து பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாருடன் முரண்பட்ட தமிழ் மக்கள்,

"இப்படி ஒரு மயானம் இருப்பதாக பிரதேச சபையின் அறிக்கையில் கூட இல்லை. நாம் இந்த காணியை அளவீடு செய்வதற்கு இடமளிக்கமாட்டோம். மயானம் அமைப்பதற்கு சிங்கள கிராமத்திலேயே பல அரச காணிகள் இருக்கின்றது. அங்கு அதனை அமைக்க முடியும்" என தெரிவித்ததுடன், நீண்டகாலமாக குடியிருக்கும் நிலையில் நீதிமன்றம் ஊடாக இதற்கு தீர்வைக் காணுமாறும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், காணியை நில அளவீடுசெய்து சிங்கள மக்களின் மயானத்திற்காக ஒதுக்குமாறு பௌத்த மதகுரு வருகை தந்த அதிகாரிகளிடம் பலமுறை கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.







## தமிழீழத்தில் எழுச்சியுடன் ஆரம்பமாகிய ஈகைச்சுடர் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 15, 2023

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற விடுதலைவாசகத்தை உரக்க சொல்லி , தன் வாழ்வை தமிழரின் விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் உண்ணா நோன்பிருந்த முதலாவது நாள் இன்றாகும்.



இன்று 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 12 நாட்கள் தொடர்ந்து நடை பெறும். நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுடரினை மாவீரர்களான வண்ணவில் மற்றும் ஜெகன் ஆகியோரின் சகோதரரும் முன்னாள் போராளியுமான விடுதலை என்பவர் ஏற்றி வைத்தார்.







# முல்லை – புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலையின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 15, 2023

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் படுகொலையின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் செப்டெம்பர் (15) உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.



குறிப்பாக கடந்த 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி யன்று மந்துவில் சந்திப் பகுதியில் இலங்கை வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 24 அப்பாவி தமிழ் மக்கள் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாய்த் தமிழ் பேரவை அமைப்பின், தாய்த்தமிழ் நினைவேந்தல் குழுவால் மேற் கொள்ளப்பட்டது.

குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

அந்தவகையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு இந்த நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இந்த படுகொலைச் சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களின் உறவுகளான ஆறுமுகம் சாந்த குமார், யோகராசா சாந்தராணி ஆகியோர் இணைந்து பொதுச் சுடரை ஏற்றி, நிகழ்வேந்தல் நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர்.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடி யிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், தாய்த் தமிழ் பேரவை அமைப்பின் ஸ்தாபகர் எஸ்.சத்தியரூபன், தாய்த் தமிழ் பேரவை அமைப்பு நிர்வாகிகள், சமூகசெயற்பாட்டாளர் த.யோகேஸ்வரன், படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்நீத் தவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.
























# “பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரை” ஆரம்பமானது ஈகைச்சுடர் திலீபனின் நினைவு சுமந்த ஊர்திப்பவனி!

செப்டம்பர் 15, 2023

ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபன் அவர்களின் 36 வது நினைவு தினத்தினை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் வரையான திலீபனின் திரு உருவப்படம் தாங்கிய வாகன ஊர்த்தி ஆரம்பமாகியுள்ளது.

இந்த வாகன ஊர்த்தி இன்று தென் தமிழீழம், பொத்துவில் நகரில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. இந்நினைவு தின வாகன ஊர்த்தியின் ஆரம்ப நிகழ்வை பொத்துவில் நகரில் இன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப் பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆரம்பித்து வைத்திருந்தனர். ஈகைச்சுடர் லெப் கேணல் திலீபன் அவர்களின் 36 ஆம்



ஆண்டு நினைவேந்தலில் 1 ஆம் நாள் நினைவேந்தல் நாளில் பொத்துவில் தொடங்கி நல்லூர் வரையான திருவுருவப் படம் தாங்கிய நினைவூர்தி பொத்திவிலில் பயணத்தை ஆரம்பித் துள்ளது. அம்பாறை மக்கள் உணர்வெழுச்சியுடன் ஆரம்ப மாகிய பயணத்தில் இணைந்து நினைவேந்திவருகின்றனர்.



# தேராவிலில் ஈகைச்சுடர் திலீபனின் நினைவேந்தல்!

செப்டம்பர் 15, 2023

ஈகைச்சுடர் திலீபன் அவர்களின் 36ம் ஆண்டு நினைவேந்தல் இன்று விசுவமடு தேராவில் புதியநிலா விளையாட்டு மை தானத்தில் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது. திலீபன் அவர்கள் உண்ணா நோன்பை ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணிக்கு மாவீரரின் பெற்றோரின் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களும் முல்லைத்தீவு மாவட்ட சமூக செயற் பாட்டாளர்களும் பொதுமக்களும் வணக்க நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# யாழ் பல்கலைக்கழகத்தில் ஈகைச்சுடர் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் தொடக்கம்!

செப்டம்பர் 15, 2023

ஈகைச்சுடர் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ் வின் ஆரம்நாள் திலீபன் கல்வி கற்ற யாழ் பல்கலைக்கழகத் தின் மருத்துவபீடத்தில் இன்று மதியம் 12:30 மணயிளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் மாணவர் பேரெழுச்சியுடன் அனுஷ்டிக்கபட்டது.

இதன்பொழுது ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தி தொடர்ச் சியாக தியாகதீபத்தின் தியாக வரலாற்று பேருரை முன்னெடுக் கப்பட்டு தொடர்ச்சியாக மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடர் மாண வர்களால் ஏற்றப்பட்டது.

இதன்பொழுது யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.













# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரத்தில் உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும்; தவறினால் மக்கள் போராட்டத்தில் குதிப்பர்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்படம்பர் 15, 2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி முழுமையாக அகழ்ந்து, ஆய்வுசெய்யப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டுமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.



அவ்வாறு உண்மைகள் வெளிக்கொணரத் தவறினால் மக்கள் போராட்டத்தில் குதிக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகள் ஒன்பது நாட்கள் இடம்பெற்ற நிலையில்,15.09.2023இன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் ஒக்ரோபர் மாத மூன்றாவது வாரத்தில் அகழ்வாய்வுகள் மீளவும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் கடந்த ஒன்பது நாட்கள் முன்னெடுக்கப்பட்டுவந்தநிலையில், 17மனித எலும்புக்கூட்டத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், இன்னும் பல மனித எலும்புக்கூடுகள் அங்கே இருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இந் நிலையில் ஒன்பதுநாட்கள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றதையடுத்து, குறித்த அகழ்வாய்வுப் பணிகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதப்புதைகுழியை ஆய்வுசெய்த தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர், ஏற்கனவே திட்டமிட்டிருந்த வேறு பணிக்காக செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் இந்த மனிதப் புதைகுழி முற்று முழுதாக அகழ்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத் தன்மை வெளிவரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடகவிருக்கின்றது.

அத்தோடு சர்வதேச நாடுகள் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தில் தலையிட்டு, இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தில் இலங்கை அரசின் பொறுப்புக் கூறலுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

குறிப்பாக தற்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில்




ஈடுபட்டுவருகின்றனர்.

இந் நிலையில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றபோது இராணுவத்திடம் சரணடைந்து, தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களாகத் தேடப்படுபவர்கள், குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என் இங்குள்ள பலருக்கும் சந்தேகங்கள் இருக்கின்றன.

இப்படியான சூழலில் இங்கு அகழ்வாய்வு மேற்கொள்பவர்களை நாம் நம்புகின்றோம்.

இந்த அகழ்வாய்வுகளில் உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும்.

அவ்வாறு உண்மைகள் வெளிக்கொணரத் தவறும் பட்சத்தில் மக்கள் திரண்டு போராட்டங்களை நடாத்தவேண்டிய சூழல் ஏற்படும் - என்றார்.







# மயிலத்தமடு மற்றும் மாதவனை மேச்சற்தரையில் அத்துமீறிய சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் சிங்களவர்களை வெளியேற்றி மேச்சல்தரையை மீட்டுத் தருமாறு கோரியும் கால்நடைகள்து பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்!

## சித்தாண்டியில் பிரதான சாலையோரம் நடைபெற்பெற்ற போராட்டத்தில் நூற்றிற்கும் அதிகமான பண்ணையாளர்கள் கலந்து கொண்டுள்ளார்கள் - 16.09.2023












# அக்கரைப்பற்றில் மறிக்கப்பட்ட ஈகைச்சுடர் திலீபன் நினைவேந்தல் ஊர்தி!

செப்டம்பர் 16, 2023

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பிக்கப்பட்ட தீலிபனின் உருவப் படம் தாங்கிய வாகன ஊர்தியை அக்கரைப்பற்றுப் பகுதியில் வைத்து மறிக்கப்பட்ட சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை யடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை (15) மாலை குறித்த வாகன ஊர்தி இடம்பெற்றபோதே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தல் தினத்தை யிட்டு 15ம் திகதி தொடக்கம் 27 ம் திகதிவரையில் திலீபன் வாரத் தையிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் பொத்துவில் இருந்து யாழ் நல்லூர் திலீபன் பூங்கா வரையிலான அவரின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பொத்துவில் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.





பொத்துவில் இருந்து திருக்கோவில் வரையுள்ள கோமாரி, ஊறணி, சங்கமம்கண்டி திருக்கோவில் வரையும் வீதிகளில் வாகன ஊர்திக்காக காத்திருந்த மக்கள் அதனை வீதிகளில் மறித்து திரு உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

இதனை தொடர்ந்து அங்கிருந்து கல்முனையை நோக்கி அக்கரைப்பற்றின் ஊடாக மாலை 5 மணியளவில் பயணித்து வாகன ஊர்தியை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் திடீரென 7 பேர் கொண்ட ஒரு குழுவினர் வீதியால் சென்ற வாகன ஊர்தியை வழிமறித்து சிறீலங்காவன் தேசியக் கொடியுடன் புலிகளின் மிருகத்தனமான சித்தாந் தங்களை எமது கிழக்கு மாகாண அமைதியான சமூகத்திற்கு பிரச்சாரம் செய்ய அனுமதிக்கமாட்டோம்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் சமூகத்திற்கு எதிராக??? புலிகளின் கொடூர கொலைகளை வன்மையாக கண்டிக் கின்றோம், அக் கரைப்பற்று முஸ்லீம்களுக்கு எதிராக??? புலிகள் நடாத்திய அட்டூழிங்களுக்கு எதிராக விசாரணை நடாத்துமாறு சர்வதேசத் தையும் யு.என்.எச்.சி.ஆர், வலியுறுத் துகின்றோம் என சுலோகங்கள் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களுடன் சுமார் 5 நிமிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வாகன நெரிசல் ஏற்பட்ட நிலையில் வாகன ஊர்தி அங்கு ஓர் இரு நிமிடம் நிறுத்தி வைக்கப்பட்ட துடன் மாற்று வீதியால் வாகன ஊர்தியை பயணித்து கல்முனை பாண்டிருப்பை சென்றடைந்தது.

# மட்டு சித்தாண்டியில் இன்று 3ஆவது நாளாக பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம்!

செப்டம்பர் 17, 2023

மட்டக்களப்பு - சித்தாண்டி பிரதேச கால்நடை பண்ணை யாளர்களின் அறவழிப் போராட்டம் இன்று 3ஆவது நாளாக சித்தாண்டியில் தொடர்ந்து இடம்பெற்றது.

பண்ணையாளர்களும், கால்நடைகளும் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் அநீதிக்கு எதிரான அறவழிப் போராட்டமாக இத் தொடர் போராட்டம் இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில் உள்ள தங்களது மேய்ச்சல் தரைப் பிரதேசமான மயிலத்தமடு, பெரியமாதவனைப் பரப்பில் தொட ரும் சட்ட விரோத குடியேற்றம் தடுக்கப்பட்டு மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத் தருமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இவ் அறவழிப் போராட்டத்தினை மயிலத்தமடு, பெரிய மாதவனை கால்நடை வளர்ப்போர் அமைப்பு மற்றும் மட்டக் களப்பு கமக்கார அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



கடந்த 15.09.2023.அன்று காலை சித்தாண்டி பிரதான வீதியில் ஒன்று கூடியவர்கள் தங்களுக்கு எதிராக இளைக்கப் படும் அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி வழியாக கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை தாங் கியவாறும் சித்தாண்டி முற்சந்தி பிள்ளையார் ஆலயத்தினை வந்தடைந்தனர்.

அங்கு பிள்ளையாரை வணங்கி தங்களது அறவழிப் போராட் டம் வெற்றி பெற வேண்டும் என சிதறு தேங்காய் உடைத்து அறவழிப் போராட்டத்தினை ஆரம்பித்தனர். தங்களுக்கு நீதி கிடைக்கும் வரை இவ் போராட்டமானது சுழற்சியான முறை யில் தொடருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




இதேவேளை குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியான முறையில் கால்நடைகள் பெரும்பான்மை சமூகத்தினரால் துப்பாக்கி சூடு நடாத்தி கொல்லப்படுவதுட், இறைச்சிக்காக வெட்டப்படுவதும் களவாடப்படுவதும் நிலை காணப்படுவதுடன் பண்ணை யாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பொலநறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந் தோர் அப் பிரதேசத்திற்கு வருகை தந்து அத்துமீறிய குடியேற் றங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது பயிர் செய்கை நடவடிக்கைக்காக கால் நடை உணவாக உட்கொள் ளும் புற்களை உழவடித்து அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரை அழிவடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரி விக்கின்றனர். இவர்களது இச் செயற்பாட்டினால் பால் உற்பத்தி குறைவடைந்துள்ளதுடன் கால் நடைகளை விற்று விட்டு பிரதேசத்தினை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கின்றனர்.

# ஈகைச்சுடர் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திமீதும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்தரன் உட்பட எனையோர் மீதும் சிங்கள காடையர்கள் தாக்குதல்!

செப்டம்பர் 17, 2023

ஈகைச்சுடர் திலீபனின் ஊர்தி பவனி மீது சிங்களக் காடையர்க ளால் இன்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் நல்லூரை நோக்கி ஈகைச்சுடர் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி பயணித்துக்கொண்டிருக்கிறது.


அதன் போது பலரும் ஈகைச்சுடருக்கு மலர் வணக்கம செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் திருகோணமலை கப்பல்துறை பகுதியை இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஊர்தி பவனி வந்தடைந்த போது, அங்கு இலங்கையின் தேசிய கொடியுடன் வந்த சிங்களக்காடையர்கள் ஊர்தி பவனி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்தரன் உட்பட தமிழத் தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு, ஈகைச்சுடர் திலீபனின் உருவ படத்தினையும் தாக்கி சேதப்படுத்தினர் .

குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெறும் போது பொலிஸார் அப்பகுதியில் நின்றிருந்த போதிலும் , தாக்குதலாளிகளை கைது செய்யவோ, தாக்குதலை தடுக்க முற்படாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.













# ஈகைச்சுடர் திலீபனின் நினைவு ஊர்தி மீதான தாக்குதலை கண்டித்து முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம்!

செப்டம்பர் 18, 2023

திருகோணமலையில் ஈகைச்சுடர் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையை கண்டித்து முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் இன்று காலை 11 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் முதன்மை வீதியில் ஒன்று கூடி கையில் பதாகைகளை தாங்கியவாறு, மக்கள் எதிர்ப்பு கோஷங்களை வெளிப்படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந் தார்கள்.

ஈகைச்சுடர் திலீபனின் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தியது மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற் பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக் குரியது என்றும் சர்வதேச விசாரணை வேண்டுமென வலியு றுத்தியும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.






திருகோணமலை தமிழரின் தலைநகர் ஈகைச்சுடர் திலீபன் அகிம்சையின் அடையாளம், தமிழ் மக்கள் தமது தாயக மண் ணில் இறந்தவர்களை வழிபடத் தடைதானா? , போராடுவோம் போராடுவோம்!! தமிழ் மக்களின் உரிமைக்காக போராடு வோம், ஐ.நா சபையே? தமிழ் மக்கள் மீதான. அடக்கு முறைகள் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? வடக்கு கிழக்கு தமிழரின் தாயக பூமி நிறுத்து நிறுத்து! அடாவடியை நிறுத்து போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# திருகோணமலையில் வைத்து ஈகைச்சுடர் திலீபன் நினைவேந்தல் ஊர்தி தாக்கப்பட்டமை சர்வதேசம் திரும்பிப் பார்க்கவேண்டும்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

செப்டம்பர் 17, 2023

திலீபன் ஊர்தி திருகோணமலையில் வைத்து சிங்களவர்களால் தாக்கப்பட்டமைக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. திலீபன் அண்ணா ஊர்தி தாக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேசம் திரும்பிப்பார்க்க வேண்டுமென இன்றிரவு யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் அண்ணாவை நினைவேந்தி அவரது உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது சிங்கள அடிப்படை வாதக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை மாணவர் சமூகமான நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

திலீபன் அண்ணாவின் உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்தியானது தமிழர் தலைநகரிலேயே தாக்கப்பட்ட இந்தச் சம்பவமானது வடகிழக்கு மாகாணங்களில் இன்னமும் தமிழ் மக்களுக்கு அவர்களது குறைந்த பட்ட நினைவு கூறும் உரிமை கூட மறுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு சாட்சியமாகும்.

அகிம்சையைப் பற்றிப் போதித்து அகிம்சாவாதிகளிற்கும் சனநாயகவாதிகளிற்கும் முன்னுதாரணமாக விளங்கும் தியாக தீபம் திலீபன் அண்ணாவின் இந்த நினைவேந்தலை தாக்கும் சிங்கள அடிப்படைவாதக் கும்பல்



களைப் பார்த்தாவது உலகச் சமூகமும் நம் மக்களும் நமது இந்த நிலை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# கஜேந்திரன் மீது தாக்குதல்; கிழக்குப் பல்கலைக்கழகம் கடும் கண்டனம்!

செப்டம்பர் 17, 2023

திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் ஊர்திப் பவனி மீது சிங்கள காடையர் குழுவின் திட்டமிட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் மிகவும் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

"சாதரண எங்கள் நினைவேந்தலைக்கூட செய்ய முடியாத இந்த துர்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் பொறுப்பு கூறுவதோடு இந்த திட்ட தாக்குதலை செய்ய தூண்டியவர்களுக்கும் தாக்குதலை நடாத்திய காடையர்களுக்கு உரிய தண்டனையினையும் வழங்கவேண்டும்" என கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் ஒன்றியம் வலியுருத்தியுள்ளது.



STUDENT UNION
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY, SRI LANKA

Email: facstudentunoion@gmail.com

திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் ஊர்திப் பவனிமீது சிங்கள காடையர் குழுவின் திட்டமிட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

சாதரண எங்கள் நினைவேந்தலைக்கூட செய்ய முடியாத இந்த துர்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் பொறுப்பு கூறுவதோடு இந்த திட்ட தாக்குதலை செய்ய தூண்டியவர்களுக்கும் தாக்குதலை நடாத்திய காடையர்களுக்கு உரிய தண்டனையினையும் வழங்கவேண்டும்.

STUDENT UNION
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY, SRI LANKA

2023.09.17

# முல்லைத்தீவை வந்தடைந்தது ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி!

செப்டம்பர் 19

திருகோணமலையில் சிங்கள அரச காடையர்களால் தாக்கபபட்ட ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்தி மாங்குளம், கிளிநொச்சி ஊடாகப் பயணித்து இன்று வட்டக்கச்சியில் இன்று நினைவு வணக்க நிகழ்வுகள் நடந்தன.

நேற்று முன்தினம் (17) திருகோணமலை - கொழும்பு வீதியில், கப்பல்த்துறைக்கு அண்மையிலுள்ள சர்தாபுர பகுதியில் சிங்களக் காடையர்கள் வழிமறித்து தாக்குதல் நடத்தியிருந்தது.

இதன்போது, ஊர்தியுடன் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்டவர்களும் தாக்கப்பட்டனர்.



இதன் பின்னர் ஊர்த்தியானது மாங்குளம் வந்தடைந்தது.



பின்னர் நேற்று கிளிநொச்சி ஊடாகப் பயணத்தித்து இன்று முல்லைத்தீவை வந்தடைந்தது.

# ஐ.நா மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

செப்டம்பர் 19, 2023

"ஐக்கிய நாடுகள் சபை மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு குறைந்து வருகின்றது" என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றைய நாள் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் சபை வலுவான அல்லது ஆக்க பூர்வமான தீர்மானங்களை கொண்டு வந்து இலங்கை அரசாங்கத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்மந்தப்படவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகவும் ஆவலாகவும் உள்ளது.

ஆனாலும் ஐ.நா சபையிலே தீர்மானங்கள் வருகின்ற போதேல்லாம் இலங்கை அரசாங்கம் ஐ.நா சபையை ஏமாற்றுகின்ற வகையிலே காலங்கள் கொடுக்கப்படாலும் அவற்றை நடைமுறைப்படுத்தாது தொடர்ந்தும் கால நீடிப்பை பெறுவதற்கான உத்திகளை கையாண்டு வருகின்றது.

அதற்கு ஏற்ற வகையில் ஐ.நா சபையும் அவர்களுக்கு வாய்பை வழங்கி வருகின்றது. இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய



நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரிய வழக்குத் தள்ளுபடி!

செப்டம்பர் 20, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஈகைச்சுடர் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் திங்கட்கிழமை (18) நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஆறு பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டு பொலிஸார் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவுகூறும் செயற்பாடு இலங்கை சோசிலிச குடியரசின் வர்த்தமானி 1721/2ஐயும், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாகவும் உள்ளது என்றும், நடத்தப்படும் பேரணியை 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.




இந்நிலையில் இது தொடர்பான வழக்கு புதன்கிழமை (20) காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சங்கள்கண்டெடுக்கப்படவில்லை!

## முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா

செப்டம்பர் 20, 2023

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளின்போது இதுவரையில் கைகள் மற்றும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் எந்தவொரு மனித எச்சங்களும் கண்டெடுக்கப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில், அதுகுறித்து செய்திகள், காணொளிகள், புகைப்படங்கள் மற்றும் கருத்துக்கள் என்பன சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணிகளை நேரடியாகக் கண்காணிக்கும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவாவிடம் வினவியபோது, 'கடந்த ஏழு நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளில் இதுவரையில் கைகள் மற்றும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் கிடைக்கவில்லை' என அவர் தெரிவித்ததாக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தைத் தளமாகக்கொண்டியங்கிவரும் Fact Seeker தெரிவித்துள்ளது.

அத்துடன், 'கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் கடந்த (13) புதன்கிழமை ஏழாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 6 ஆம் திகதியிலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில் இரண்டு வழக்கறிஞர்கள் அகழ்வுப் பணிகளை நேரடியாகப் பார்வையிடுவதுடன், சிவில் பிரதிநிதிகள் சிலரும் பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர்.

ஆகவே சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்தியில் குறிப்பிடுவதைப்போன்று எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை' எனவும் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா Fact Seeker க்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கு நீதி கோரி மூதூரில் கண்டன போராட்டம்!

செப்டம்பர் 20, 2023

மூதூர் மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரியும் இன்று புதன்கிழமை (20) மாலை கண்டன போராட்டம் இடம் பெற்றது.

இந்த பேரணியில் கலந்துகொண்ட மக்கள் கட்டைபறிச்சான் இறால் பாலத்தில் இருந்து பேரணியாக மூதூர் மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது தாக்குதல் சம்பவத்துக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.












# வவுனியா சின்ன விளாத்திக்குளப் பகுதியில் கல்குவாரி அமைக்கப்படுவதற்கு எதிராக விவசாயிகள் போராட்டம்!

செப்டம்பர் 20, 2023

வவுனியா, சின்ன விளாத்திக்குளம் குளத்தின் இயற்கையான அணைக்கட்டினை உடைத்து கல் அகழ்வுப்பணி இடம்பெறுவதற்கு எதிராக கதிரவேலர் பூவரசன்குளம் கமக்காரர் அமைப்பின் விவசாயிகள் இன்று புதன்கிழமை (20) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு முன்பாக அலுவலகத்தின் வாயிலை பூட்டி, அதன் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வவுனியா, சின்ன விளாத்திக்குளம் குளக்கட்டு இயற்கையாக கற் பாறைகளை கொண்டமைந்த நிலையில், 12 அடி நீரை சேமிக்கக்கூடிய சிறு நீர்ப்பாசன குளமாக காணப்படுகிறது.

இந்த குளப்பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன் கல்குவாரி அமைக்கப்பட்டு கல் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில், விவசாயிகள் குளத்தின் பாதுகாப்பு மற்றும் விவசாய செய்கைக்கு பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா பிரதேச செயலாளர், ஓமந்தை பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்ததையடுத்து, கல் அகழும் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த 15 நாட்களாக இப்பகுதியில் மீண்டும் கல் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் குளத்தின் அணைப்பகுதி சேதமாகியுள்ளதாகவும், அதனை சீர் செய்ய முடியாது போயுள்ளதுடன், இக்குளத்தில் நீரை சேமிக்க முடியாமல் போகும் எனவும், 200 ஏக்கர் விவசாய நிலத்தினை விவசாயம் செய்யாமல் கைவிடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




அத்துடன், கல்குவாரி அமைத்தவர்கள் மேலிடத்தில் இருந்து அனுமதியை பெற்று வருவதால் தாம் எதுவும் செய்யமுடியாதுள்ளதாக வவுனியா அரச அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் இதனால் தமது விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்! – 21.10.2023




















# தமிழின அழிப்புக் குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மட்டக்களப்பில போராட்டம்!

செப்டம்பர் 21, 2023

தமிழின அழிப்புக் குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்துமாறு கோரி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச அமைதி தினத்தை யொட்டி வியாழக்கிழமை காலை (21) மட்டக்களப்பு நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாடு செய்த குறிப் பிட்ட ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களும் மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.






மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் காலை 10 மணிக்கு ஆரம்பமான பாரிய ஆர்ப்பாட்டம் சுமார் இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது. பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஆண்களும் பெண்களும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதிக அளவில் மக்கள் கலந்து கொண்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தயாரிக்கப்பட்ட மகஜரினை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதியிடம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு பிரதிநிதிகள் கையளித்தனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் கவனயீர்ப்பு போராட்டம்!

செப்டம்பர் 21, 2023

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் வைத்தியர்கள், சுகாதார பணியாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன் னெடுத்தனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்து பொருட் களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும், தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் மெத்தன போக்கை கண்டித்து கவன ஈர்ப்பு போராட்டங்கள் நடத்தினர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்றைய தினம் வியாழக்கிழமை மதியம் 12 மணி முதல் 1 மணி வரையில் போராட்டம் நடைபெற்றது.









# சரணடைந்தவர்களை படுமோசமாக கொலை செய்துவிட்டு கொக்குத்தொடுவாயில் குழிதோண்டிப் புதைத்திருக்கிறார்கள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்

செப்டம்பர் 21, 2023

சரணடைந்தவர்களை படுமோசமாக கொலை செய்துவிட்டு குழி தோண்டி புதைத்தவர்களையே கொக்குத்தொடுவாயில் காணக்கூடியதாக இருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கொக்குத் தொடுவாய் மனித மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று சர்வதேச சமாதான தினம் இந்த தினத்தில் இன்று போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியான விசாரணை வேண்டும் கொக் குத்தொடுவாய் மனித புதைகுழியானது சர்வதேச நியமங்களின் பிரகாரம் அகழப்பட வேண்டும்

போர்க்குற்றவாளிகள் இனம் காணப்பட்டு அவர்கள் சர்வதேச பொறிமுறையின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எங்கள் நாட்டில் சமாதானம் அமைதி என்பது எட்டாத கிட்டதா ஒன்றாக இருக்கின்றது இங்கே ஆட்சி செய்கின்றவர்களுக்கு சமாதானம் என்பது தேவையில்லாத விடயமாக இருக்கின்றது. ஆட்சிபீடம் ஏறுகின்றவர்கள் இனவாத கருத்துக்களை முன் னிறுத்தி பௌத்த மேலதிக்க சிந்தனையுடன் பெரும்பான்மை பேரினவாத சக்திகளின் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறதுடித்து கொண்டிருக்கின்றார்கள்.

சிறுபான்மை மக்களுக்கு தமிழ்மக்களுக்கு நீடித்து நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வினை இனப்பிரச்சினைக்கான தீர்ப்பதற் கான எந்த வழிமுறையினையும், பொறிமுறையினையும் தேடாமல் குறிப்பாக தொடர்ச்சியாக அரசியல் செய்வதற்காக நாட்டை ஆழுவதற்காகத்தான் சமாதான முயற்சிகளில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றார்கள்.

இறுதி போரில் அனைவரும் பாதுகாப்பு தரப்பினரிடம் சர ணடைந்தார்கள் சரணடைந்தவர்களுக்கு பாதுகாப்பு தருகின் றோம் உங்களுக்கு நல்ல வாழ்கைக்கு கொண்டு செல்கின் றோம் நீங்கள் எங்களிடம் சரணடையுங்கள் என்று ஒலி பெருக்கி மூலம் இறுதி போர்க்கால பகுதியில் அறிவித்துவிட்டு சரணடைந்தவர்களை படுமோசமாக கொலை செய்துவிட்டு குழி தோண்டி புதைத்தவர்களைத்தான் நாங்கள் இந்த கொக்குத்தொடுவாயில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி என்பதை விட அது ஒரு போராளிகளின் புதைகுழியாகத்தான் காணக்கூடியதாக இருக் கின்றது.

இதற்கு சர்வதேச நிபுணர்குழுவினை கொண்டுவந்து அவர் களுக்கு முன்னால்தான் இந்த புதைகுழியினை தோண்ட



வேண்டும் இங்குள்ளவர்களை கொண்டு பரிசோதிக்கின்ற பட்சத்தில் முடிவினை காணமுடியாது இந்த அரசாங்கத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லாத தன்மை கடந்த காலங்களில் இருந்து வருகின்றது

இனிவரும் காலங்களிலும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வேண்டும் என்றால் எல்லா விடயங்களிலும் சர்வதேச விசாரணையினை ஏற்படுத்தினால்தான் எங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றும் நம்புகின்றோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்று கொண் டிருக்கும் இந்த நேரத்தில் அவர்களின் கண் திறக்கப்பட வேண்டும் வீதிகளில் புலம்புகின்ற மக்களின் குரல் அவர்களின் காதுகளுக்கு செல்ல வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலை தடை செய்யுமாறு கொழும்பிலிருந்து வந்தவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!

செப்டம்பர் 21, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவு நாள் அனுட்டிப்பு வன்முறையை தூண்டும் அபாயமுள்ளதால் உடனடியாக நினைவு நிகழ்வுகளை தடைசெய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் காவல்துறையினர் மனுதாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில், காவல்துறை திணைக்களத்தின் சட்டம், ஒழுங்கு பிரிவுக்கு பொறுப்பான சிரேஸ்ட காவல்துறை அத்தியட்சகர், சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று, இன்று கொழும்பிலிருந்து உலங்கு வானூர்தியில் வந்து, யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் அவசர மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இதில், தியாகி திலீபன் நினைவுநாள் அனுட்டிப்பு வன்முறை வடிவம் எடுப்பதால், அவசரமாக நினைவுநாளுக்கு தடைவிதிக்க வேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

அத்துடன், நேற்று வவுனியா பம்பைமடுவில், சிவில் உடையில் வந்து வீடியோ படம் பிடித்த புலனாய்வாளர்களின் கைத்தொலைபேசி பறிக்கப்பட்டு, காட்சிகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வீடியோவை நீதிபதிக்கு திரையிட்டு காண்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு எதற்காக நினைவுநாளை தடைவிதிக்க வேண்டும், காவல்துறை நடவடிக்கையெடுத்திருக்கலாம் அல்லவா என நீதிபதி வினவியபோது, காவல்துறை நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வன்முறை பரவலை தடுக்க நினைவு நாள் அனுட்டிப்பை தடை செய்ய வேண்டுமென கோரினர்.

இந்த மனு தொடர்பில் நாளை மதியம் 1.30 மணிக்கு கட்டளை பிறப்பிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

வவுனியா பம்பைமடுவில் நேற்று திலீபன் ஊர்தி பயணித்தது. பம்மைமடு பல்கலைக்கழகத்தில் அஞ்சலி நிகழ்வு நடந்தது. மாணவர்கள் அஞ்சலி செலுத்திய போது, சிவில் உடையில் வந்த புலனாய்வாளர்கள் அதை காணொளியாக பதிவு செய்தனர்.

புலனாய்வாளர்கள் காணொளி பதிவு செய்ததால் மாணவர்களுக்கிடையே சலசலப்பு உருவானது.

இதையடுத்து, சம்பவ இடத்திலிருந்த சட்டத்தரணி ந.காண்டீபன், அந்த நபர்களிடம் சென்று, அவர்கள் யார் என வினவியுள்ளார். தாம் ஊடகத்தை சேர்ந்தவர்கள் என அந்த நபர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊடக அடையாள அட்டையை காண்பிக்குமாறு காண்டீபன் கேட்டார். பின்னர் ஒருவர் காவல்துறை அடையாள அட்டையை காண்பித்துள்ளார். அவரிடமிருந்த காணொளிகளை அழிக்குமாறு முன்னணியினர் வற்புறுத்தியுள்ளனர். அவர் காணொளிகளை அழிப்பதாக குறிப்பிட்டுள்ளார். எனினும், அழிக்கவில்லை.



இதையடுத்து, முன்னணியினர் அவரது தொலைபேசியை கைப்பற்றி காணொளியை அழித்துள்ளனர்.

தனது கையடக்க தொலைபேசியை பலவந்தமாக பறித்து, காணொளி அழிக்கப்பட்டதாக அந்த சிவில் உடை புலனாய்வாளர் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். அந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டே, இன்ற யாழ்ப்பாணத்தில் திலீபன் நினைவுக்கு தடைகோரப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படும் நிலையே காணப்படுகின்றது!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்டம்பர் 21, 2023

கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே காணப்படுகின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் இன்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய தினம் உலக சமாதான தினமாகும் ஆனால் இலங்கையை பொறுத்தவரை சமாதானம் என்பது எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற நிலையே காணப்படுகின்றது. அதே போன்று ஐநாவின் ஆணையாளர் நாயகம் இலங்கையிலே போர்க்குற்றம் மீறப்பட்டுள்ளது, மனித உரிமை மீறப்பட்டுள்ளது. வறுமையில் இலங்கை 25%ஆக இருக்கின்றது, சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் அடங்கிய அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுடைய கதறல்கள், கூக்குரல்கள் வீதிகளில் நின்று போராடுகின்ற போராட்டங்கள் என அத்தனை போராட்டங்களாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டும் சர்வதேச நாடுகள் ஏன் இதுவரை தலையிடவில்லை. இப்படி ஒரு கொடுமையான அரசுக்கு கீழ் தான் நாம் வாழ்கின்றோம்.

வடக்கு கிழக்கு மக்களின் நிலங்களை எடுக்கின்றார்கள், சிறுக சிறுக மதங்களை அழிக்கின்றார்கள் பௌத்த மயமாக்குகின்றார்கள். கடலும் பறிபோய் கொண்டிருக்கின்றது. இப்படி எமது வாழ்வாதாரம் உட்பட நிலங்களையும் அபகரித்து எங்களை பூர்வீகமற்றவர்களாக்குகின்றார்கள் இந்நிலை மாற வேண்டும்.

சனல் 4 ஊடகத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் காணொளி வெளியானதன் பிற்பாடு 300க்கு மேற்பட்ட மக்கள் இறந்ததற்காக எல்லோரும் அறிக்கையை வெளியிடுகின்றார்கள்.

அதை நாம் மறுக்கவில்லை. கொலைகார கும்பல் தான் ஆட்சியில் இருக்கின்றது. ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்து வந்திருக்கின்றது. என்பதையும் மறுப்பதற்கில்லை ஆனால் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்து, எம் இனத்தையே படுகொலை செய்த நிலையிலும் இன்று வரை எமக்கான தீர்வுகள் தான் இல்லை. பல ஆண்டு கடந்தும் ஏன் எங்கள் நிலமை அவர்களது பார்வையில் படவில்லை. சர்வதேசம் நேரடியாக இதற்கு துணைநிற்க வேண்டும் அல்லது சர்வதேச ஆணையாளர் அறிக்கைகேற்ப கருணை காட்டி இலங்கை அரசாங்கத்தை சர்வதேச பொறிமுறைக்குள் விசாரணைக் குட்படுத்தி நீதியினை பெற்றுதர வேண்டும் என்றார்.




# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பன்னிருநாள் வரலாற்றை நல்லூரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது!

செப்டம்பர் 22, 2023

தமிழ் மக்களின் உரிமைக்காக இந்திய அரசிடம் 15.09.1987 அன்று ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து யாழ். நல்லூர் முன்றலில் நீராகாரம் அருந்தாமல் (அகிம்சை வழியில்) உண்ணாநிலை போராட்டம் தொடர்ந்து 26.09.1987 அன்று 12ம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வழமை போல் இம்முறையும் ஈகைச்சுடர் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் கடந்த 15.09.2023 அன்று எழுச்சியுடன் ஆரம்பானது இந்நிலையில் ஈகைச்சுடரின் பன்னிருநாள் வரலாற்றை நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவு தூபி அருகாமையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

குறித்த வரலாற்று விழுமியங்களை பெரியவர்கள் தொடக்கம் தமிழனத்தின் இளையதலைமுறையினர் வரையிலும் ஆர்வத்தோடு படித்து ஈகைச்சுடரின் உண்ணாநோன்புப் போர் குறித்து ஆர்வத்துடன் அறிந்துகொள்ள முனைப்புக்காட்டுவது உலகிற்கு ஒன்றை எடுத்தியம்புகின்றது ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்கள் அன்று சொன்ன சிந்தனையின் படி எம் எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போலதான் நாளை எமது எதிர்கால சந்ததி துன்பப்படுவதோடு அடக்குமுறைக்குள் வாழும் என்று அன்று திலீபன் சொன்ன சிந்தனையை கருத்தில் கொண்டு தமிழர்கள் மீண்டெழுவோம் என்பதை சொல்கிறது.





# நாகர்கோவில் பாடசாலை மாணவர்கள் படுகொலையின் 28ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 22, 2023

யாழ்ப்பாணம் நாகர்கோவில் பாடசாலை மாணவர்கள் படுகொலையில் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை பாடசலையில் இடம்பெற்றது



இந்நிகழ்வில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்தவர்களது உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் என



பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1995ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி சிறீலங்கா விமான படையின் புக்காரா விமானம் நாகர்கோவில் மகா வித்தியாலயம் இரண்டு குண்டுகளை வீசி தாக்குதல் நடாத்தி இருந்தது. அதில் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 பேர் படுகொலையானர்கள் , அத்துடன் 35க்கும் அதிகமான மாணவர்கள் உட்பட பலர் படுகாயமடைந்தனர்.



# வட தமிழீழம் நல்லூரில் பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக! ஆவணக் காட்சியகம் திறந்து வைப்பு!

செப்டம்பர் 22, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36 ஆவது ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை(22.09.2023) மாலை-06 மணியளவில் பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக! எனும் தொனிப் பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவுத் தூபிக்கு முன்பாகத் திறந்து வைக்கப்பட்டது.

தன் உயிரிலும் மேலாகத் தான் நேசித்த மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் அளப்பரிய ஈகங்களைப் புரிந்த ஈகைச்சுடர் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டுத் திலீபனின் வரலாற்றினை எமது அடுத்த சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் முகமாக மாவீரர் பெற்றோர்கள், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் குறித்த ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப் பட்டது.

ஆவணக் காட்சியக ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன், ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





















# ஈழத்தீவில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்!

செப்டம்பர் 24, 2023

அமுலில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதோடு சர்வதேச பயங்கரவாதத்தினை காரணம் காண்பித்து கொண்டுவரப்படும் எந்தவொரு மாற்றுச் சட்டங்களையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தமிழ்த் தலைவர்கள் மீண்டும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

அத்துடன், இறுதியாக வெளியிடப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் நிறைவேற்று அதிகாரத்தினை பலப் படுத்தும் வகையிலும் கடுமையான அடக்குமுறைகளை பிர யோகப்படுத்தும் வகையிலும் உள்ளடக்கம் காணப்படுவ தாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, கடந்த 15 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெளியிடப்பட் டுள்ள நிலையிலேயே தமிழ்த் தலைவர்களான, இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், புளொட் தலை வரும், பாராளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித் தார்த்தன், ரெலோ தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரு மான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த கருத் துக்கள் வருமாறு,

திரு. சுமந்திரன் அவர்கள் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இரண்டாவது தட வையாக வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதில் பெரிய மாற் றங்கள் எவற்றையும் காணவில்லை. குறிப்பாக, தடுத்துவைப் பதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச் சரிடமிருந்து பாதுகாப்புச் செயலாளருக்கு சென்றுள்ளது. பொலிஸ் நிலையத்தில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கும் நிலைமையானது இரண்டாக்கப்பட்டுள்ளது. நீதிபதியின் அனு மதியுடன் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்படும் நிலைமை யானது 12ஆக குறைக்கப்பட்டுள்ளது.
ஆனால், அதன் உள்ளடக்கத்தில் மாற்றங்கள் எவையும் ஏற் படுத்தப்படவில்லை. குறிப்பாக, பயங்கரவாதம் என்பது தொடர் பான வரைவிலக்கணம் பரந்து பட்டதாகவே நீடிக்கின்றது. நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத் தல்கள் காணப்படுகையில் உத்தேச சட்டமூலத்தில் நிறை வேற்று அதிகாரத்துறைக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இதன்மூலம், ஜனாதிபதி, தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாடுகளை நேரடியாக கட்டுப் படுத்த முடியும். அத்துடன் தடை செய்வதற்கும் முடியும்.

அத்தோடு, பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்பட்ட மீளாய் வுக்குழு என்ற விடயம் நீக்கப்பட்டுள்ளமையும் பின்னடை வாகும். நீதிவான் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவ ரில்லை என விடுவித்தாலும் விளக்கமறியலில் வைக்கும் நிலை மைகள் காணப்பட்டுள்ளதால் நீதிமன்றத்தின் அடிப்படைத் தத்துவமும் மீறப்படுவதாகவே உத்தேச சட்டமூலம் உள்ளது.

எது, எவ்வாறாக இருந்தாலும் எம்மைப்பொறுத்தவரையில் புதி தாக ஒரு சட்டம் தேவையில்லை என்பதோடு, பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் எமது முடிவில் மாற்றமில்லை என்றார்.

திரு. சித்தார்த்தன் அவர்கள் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கூறுகையில், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அல்ல பயங்கரவாத தடை சம்பந்த மாக எந்தவொரு சட்டமும் தற்போதைய சூழலில் நாட்டுக்குத் தேவையில்லை.

கடந்த காலத்தில் தற்போது அமுல்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தினால் தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துன் பங்களை அனுபவத்தினர் பகிரங்கமானதொரு விடயமாகும் என்பதோடு, அது ஒரு இனத்தினை மையப்படுத்தி பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டதும் முக்கியமான விடயமாகின்றது.

நாட்டில் காணப்படுகின்ற குற்றவியல் சட்டங்களுக்கு அமை வாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் ஊடாக பயங்கர வாதத்தினை கட்டுப்படுத்துவதற்கான இயலுமைகள் காணப் படுகையில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அவ்வாறிருக்கையில் தற்போது சர்வதேசத்தினை திருப்திப் படுத்துவது போன்று ஒப்பனைக்காக திருத்தங்களை மேற் கொள்வது போன்றதொரு செயற்பாடு காண்பிக்கப்பட்டு உத்தேச சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.

திரு. செல்வம் அடைக்கலநாதன்அவர்கள் தெரிவிக்கையில்,

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.கூறுகையில், பயங்கரவாதத் சட்டத்தினால் எமது இளைஞர், யுவதிகள் உட்பட பலதரப்பட்ட வர்களும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

இந்நிலையில், போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகளாகின்ற நிலையில் பயங்கரவாத தடைச்சட்டம் அவசியமற்றதொன்றாக காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை உட்பட, சர்வதேச நாடுகள் அனைத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக் குவது குறித்து தொடர்ச்சியான வலியுறுத்தல்களைச் செய்து வருகின்றபோதும் இலங்கை அரசாங்கம் அதனை முன்னெடுக் கவில்லை.

தொடர்ச்சியாக புதிய பெயர்களுடன் புதிய வடிவில் பழைய உள் ளடக்கங்களைக் கொண்ட சட்டமூலத்தினையே தயாரித்துக் கொண்டு காலத்தினைக் கடத்தும் செயற்பாட்டையே முன் னெடுத்து வருகின்றது. ஆகவே, தொடர்ந்தும் இவ்வாறான நட வடிக்கைகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து முழுமையாக பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.




திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கையில்,

தற்காலிக ஏற்பாடுகளாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. ஆயுதம் தாங்கிய போராட்டம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் ஐக்கிய இலங்கைக்குள் தீர் வினை அடைவதற்கு தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் தயார் என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பதும், அதனைப் பிரயோகித்து சாதாரண மக்களுக்கு காணப்படுகின்ற அடிப்படை உரி மைகளை மீறுவதும் துர்ப்பாக்கிய நிலையாகும்.

எம்மைப்பொறுத்தவரையில் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த நிலையில் பயங்கரவாத தடைச்சட்டமும் முழுமையாக நீக்கப்பட வேண்டும். மாறாக அந்தச் சட்டத்தினை அமுலில் வைத்துக்கொண்டு ஆயுதப்போராட்டத்திற்கு அடிப்படையான காரணங்களை மீண்டும் ஏற்படுத்துவதற்கு முனைவது பொருத் தமற்ற செயற்பாடாகும்.

இந்நிலையில் தான் தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக மூன்றாவது தடவையாக புதியதொரு மாற்றுச்சட்டத் தினை கொண்டுவருவதாக அரசாங்கம் கூறுகின்றது. அதற் காக இரண்டாவது தடவையாக உத்தேச சட்டமொன்று வர்த்த மானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவித்தலின் பிரகாரம், பல்வேறு விடயங்கள் அடிப் படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் பறிப்பவை யாகவே உள்ளன. விசேடமாக, உரிமைகளுக்காக முன்னெடுக் கப்படும் போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான இலக்கு வைக்கப்பட்ட ஏற்பாடுகள் உள்ளன.

இதனைவிடவும், நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண் டுள்ள ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதோடு, அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரித்துக்களுக் கான ஏற்பாடுகளை மீறிச் செயற்படுவதற்கான அதிகாரங்களை வழங்கும் விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இவ்விதமான சட்டத்தினை மீண்டும் ஒருவாக்கி நடை முறைப்படுத்துவதன் ஊடாக, இனவிடுதலைச் செயற்பாடுகளை முடக்கி அடக்குமுறையை அரசாங்கம் பிரயோகிப்பதற்கு முனைகின்றதா என்ற கேள்வி எமக்கு உள்ளது என்றார்.

# திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகப் பரிவின் அரிசிமலை பொன்பரப்பி மலையிலிருந்து இயங்கும் பாணமுரே திலகவன்ச தேரர் தொடர்ச்சியாக தமிழ் முஸ்லீம் மக்களை அச்சுறுத்தி வருகின்றார்!

செப்டம்பர் 23, 2023

வடக்கு கிழக்கு பௌத்த சங்கத்தின் தலைவராகவுள்ள மேற்படி தேரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சேவின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராகவும் கடமையாற்றி இருந்தார்.



அரிசிமலை பகுதியில் பௌத்த மத விரிவாக்கத்திற்காக ஏற் கனவே 500 ஏக்கர் காணி வழங்கப்பட்டு இருந்தது. அதே போல நல்லாட்சி காலத்திலும் 25 ஏக்கர் காணி இதற்காக வழங்கப்பட்டது.

அரிசிமலையுள்ள 500 எக்கர் காட்டு பகுதி முழுவதும் பௌத்த மத தொல்லியலுக்குரிய பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டு இருக்கின்றது.

இவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகள் தற்போது பாணமுரே திலகவன்ச தேரரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது மாத்திரமின்றி இந்த பகுதிகளில் மட்டும் 3,000 ஏக்கருக்கும் அதிகமான பகுதிகளை அபகரித்து இருக்கின்றார்.

தற்போது இதற்கு மேலாதிக்கமாக தென்னமரம்வாடியில் 92 தமிழ் குடும்பங்களுக்குறிய விவசாய நிலங்கள் உட்பட 150 ஏக்கர் காணியை அபகரிக்க முயன்று வருகின்றார். அதே போன்று குறித்த பகுதியில் முஸ்லீம் மக்களுக்குறிய 500 ஏக் கருக்கு சொந்தமான நிலப்பரப்பை அபகரிக்க பகிரங்கமாக முயற்சிக்கின்றார்.

அமைச்சரவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட வசதிக ளுடன் நடமாடிவரும் தேரர் அரிசி மலை விகாரை பகுதிகளில் தமிழ் பேசும் மக்களுடைய காணிகளுக்குள் அடாத்தாக புத்தர் சிலை வைப்பதற்கான முயற்சியில் கூட ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த சித்திரை 1 ஆம் திகதி மேற்படி பிக்கு தலைமையிலான குழுவினர் பொன்மலைக்குடா பகுதியில் பொது மக்களை சுடப்போவதாக துர்ப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்தது இருந்தனர்.

அண்மையில் திருகடலூர் தமிழ் மீனவர்கள் மீது கல் வீசி தாக்குதலில் 6 மீனவர்கள் காயமடைந்த சம்பவத்தின் பின்



னணியிலும் பாணமுரே திலகவன்ச தேரர் தான் இருந்தார் என சொல்லப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை புல்மோட்டை இல 01 கிராம அலு வலர் பிரிவில் உள்ள 06 முஸ்லிம் குடும்பங்களுக்கு சொந்த மான விவசாய காணிகளை, டோசர் இயந்திரங்களை கொண்டு அபகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மேற்படி பிக்கு மீண்டும் அச்சுறுத்து இருக்கின்றார் .

இதில் ஒரு பெண் காயமடைந்து இருக்கின்றார்.

சனநாயக நாடு ஒன்றில் இந்த வன்முறைகள் எப்படி சாத்திய மாகின்றன என தெரியவில்லை. தமிழ் பேசும் பொதுமக்களை அச்சுறுத்தி காணி பிடித்து புத்தர் சிலை வைக்க முயற்சிக்கும் மேற்படி பிக்கு பற்றி பேசினால் இன நல்லிணக்கம் எதுவும் பாதிக்கும் என்பதால் பெரும்பாலானோர் அமைதியாக இருக் கின்றார்கள் போல இருக்கின்றது

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி!

செப்டம்பர் 23, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நிரோஜன் விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு - சுதந்திரபுரம், நிரோஜன் விளையாட்டு மைதானத்தில் குறித்த மென்பந்து மட்டை போட்டியானது தாயக செயலணியால் இன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

குறித்த நிகழ்வானது தாயக செயலணியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சா.உதயன் தலைமையில் இன்று (23) காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் ஈகைச்சுடர் திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து மென்பந்து போட்டியானது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மிகவும் சிறப்பாக நடைபெற்றுவரும் குறித்த போட்டியில் முதலில் இளந்தளிர் மற்றும் நிரோஜன் விளையாட்டு கழகங்கள் முதல் போட்டியை எதிர் கொண்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெற இருக்கும் இவ் மென்பந்து போட்டியானது இடம்பெற்று 25 ஆம் திகதி இறுதி போட்டி நடைபெறவுள்ளது. வெற்றிபெறும் அணிக்கு திலீபனின் நினைவை சுமந்த வெற்றிக் கிண்ணமும் சிறந்த வீரருக்கான விருதும் வழங்கப் படவுள்ளது.

இப்போட்டியானது அணிக்கு பதினொருவர் கொண்ட ஐந்து பந்து பரிமாற்றங்களை கொண்டதாகும். இதில் 14 அணிகள் பங்குபற்றவுள்ளது.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸ், சமூக செயற்பாட்டாளர்களான, பீற்றர் இளஞ்செழியன், தியாகு மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நாளை 24ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான





மரதன் ஓட்டமும், 25 ஆம் திகதி துவிச்சக்கர வண்டி ஓட்டமும் இடம்பெறவுள்ளது. அதனை தொடர்ந்து 26 ஆம் திகதி குறித்த மைதானத்தில் அடையாள உண்ணாவிரதமும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்கா இராணுவத்தால் 33 ஆண்டுகள் ஆக்கிரமிக்கப்பட்ட கட்டுவன் காசியம்பாள் முத்துமாரி அம்மன் ஆலயம் மக்கள் வழிபாட்டிற்கு அனுமதி!

செப்டம்பர் 23, 2023

யாழ்ப்பாணம் கட்டுவன் காசியம்பாள் முத்துமாரி அம்மன் ஆலயம் கடந்த 1990ம் ஆண்டுக்கு பின்னர் 33 வருடங்களுக்கு பின்னர் ஆலயத்தை சென்று பார்வையிடுவதற்கும் ஆலய வழிபாட்டிற்கும் சிறீலங்கா இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

கட்டுவன் காசியம்மாள் அம்மன் ஆலய தேவஸ்தானத்தினரால், கல்வி இராஜாங்க முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்த நிலையில், இராணுவத்தினரின் அனுமதியுடன் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிட்டதோடு ஆலயத்தில் பூஜை வழிபாடுகளும் குருமார்களினால் முன்னெடுக்கப்பட்டது.

யுத்தத்தினால் கடந்த 1990ம் ஆண்டுக்கு பின்னர் உயர்பாதுகாப்பு வலயமாகியதுடன் தற்போது 33 வருடங்களுக்கு பின்னர் கட்டுவன் காசியம்பாள் சிறீ முத்து மாரி அம்மன் ஆயத்தை பார்க்க அனுமதி வழங் கியிருந்தனர்.

















# மூங்கிலாறு பிரதேசத்தில் தேராவில் புதியநிலா விளையாட்டு மைதானத்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 24, 2023

தாயக அரசியல் துறையினரின் ஒழுங்கமைப்பில் 24.09.2023 இன்றைய நாள் மாலை 4.30 மணியளவில் மூங்கிலாறு பிரதேசத்தில் தேராவில் புதியநிலா விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுச் சுடரை மூன்று மாவீரர்களின் தாயார் ஜோசேப் முணியம்மா ஏற்றிவைக்க மலர்வணக்கத்தை முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து மாவீரர்களின் சகோதரர்கள் தாயக அரசியல்துறை செயற்பாட்டாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்க உப தலைவர் இராஜகோபால், கரைதுறைப்பற்று பிரதேசபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன்,சமூக செயற்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ்செழியன்,புதியநிலா விளையாட்டு கழகத்தின் தலைவர், சமூக செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் மாணவர்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவான அணி வீரர்கள் என பலரும் மலர்வணக்கம் செலுத்தினர்.

தலைமை அஞ்சலி உரையை நிகழ்விற்கு தலைமை வகித்த பிரதேச சபை உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன் நிகழ்த்த தொடர்ந்து மாணவன் சோபிதனும் மாணவன் சயந்தனும்





தியாக தீபம் திலீபன் நினைவைச் சுமந்த கவிதை வாசித்ததுடன் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அஞ்சலி



உரையாற்றினார்.

தொடர்ந்து ஈகைச்சுடர் லெப்.கேணல் திலீபனின் 36ம் ஆண்டு நினைவுகளைச் சுமந்த மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டித் தொடரின் இறுதிப்போட்டிக்கான அணிகளை சந்தித்து மைதானத்தில் நாணயச்சுழற்சி நடைபெற்று போட்டிகள் ஆரம்பமானது.

# கொடிகாமத்தில் இருந்தும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவாக ஊர்திபவனி ஆரம்பம்!

செப்டம்பர் 24, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் மற்றுமொரு ஊர்தி பவனி யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் இருந்து இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

குறித்த ஊர்தி பவனி கொடிகாமத்திலிருந்து ஆரம்பித்து சாவகச் சேரி, பூநகரி,முழங்காவில், மன்னார், வவுனியா ஊடாக பயணித்து கிளிநொச்சியை வந்தடைந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளது.





# பொது நினைவுச் சின்னம் அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும் வரை தமிழினம் அனுமதியாது!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

செப்டம்பர் 25, 2023

ஜனாதிபதிச் செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடு தலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதாக முடி வெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சி யில் இறங்கியுள்ளது.

இது தொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரை யாடலொன்றை நிகழ்த்தியுள்ளது.

தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இக்கலந்துரை யாடல் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

ஆனால், அரசதரப்பு எத்தகைய தீவிரங்காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கம் பொதுவான நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும் வரை தமிழினம் அனுமதியாது. என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதிச் செயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர் பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத் திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக் கொண்ட நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் கீழ் இனங் களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்ன மொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது. போராளிகளை யும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத் தரப்பையும் ஒன்றாக நினைவிற் கொள்ளும் இம்முடிவிற்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந் தார்கள்.

இவ்வெதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, அதனை எவ்வடி வத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இக்கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங் கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவுசெய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம் பெற்று வருகின்றது.

போர்முடிவுற்று பதின்னான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதி லும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத் துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வ சமிக்ஞையினையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லை. போர்மரபுகளையும் மீறி மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைத்தழித்த அரசதரப்பு, யுத்தவெற்றியைப் பறைசாற்றும் விதமாகப் படைத்தரப் பினருக்கான நினைவுச் சின்னங்களைத் தமிழர்தாயகப் பகுதியெங்கும் அமைத்துள்ளது.



ஆனால், அகிம்சை வழியில் போராடி உயிர்துறந்த திலீபனின் நினைவுகூருதலை சிங்களக் குண்டர்களின் மூலமும், தனது ஏவல்துறையான காவல் துறையின் மூலமும் குழப்பி வரு கின்றது.

திலீபனின் நினைவேந்தல் நாட்களிலேயே இனநல்லிணக் கத்தின் பெயரால் பொது நினைவுச் சின்னமொன்றை அமைப் பதற்கான கலந்துரையாடலையும் நிகழ்த்துகிறது.

உலகை ஏமாற்றும் அரசாங்கத்தின் இந்நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டது!

செப்டம்பர் 25, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலை முன் னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆம் ஆண்டு நினை வேந்தல் தாயகம் எங்கும் உணர்ச்சியுடன் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஏற் பாட்டில் இன்றைய தினம் திங்கட்கிழமை மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.



அதன் போது, யாழ் நகர் பகுதி, மருதனார்மடம் சந்தை பகுதி மற்றும் நல்லூர் தியாகதீபம் திலீபன் நினைவுத்தூபி அமைந் துள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.



# மகனை இலங்கை அழைத்து வர பத்து மாதங்களுக்கு மேலாக போராடும் சாந்தனின் தாய்!

செப்டம்பர் 25, 2023

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு மீள அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சாந்தனின் தாயார் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகிறார்.

பிரதமர் கொலை வழக்கில் கைதாகி 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் கடந்த ஆண்டு இந்திய மத்திய அரசினால் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையில் பின்னர் இலங்கைக்கு மீள செல்வதற்கான உரிய ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் என கூறி கடந்த 10 மாத கால பகுதிக்கு மேலாக திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்ட எனது மகனை மீள இலங்கைக்கு அழைத்து வந்து தன்னிடம் ஒப்படைக்கு மாறு சாந்தனின் தாயார் கடந்த 10 மாத கால பகுதியாக பல்வேறு தரப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்த கடிதத்திற்கு இது வரையில் வெளிவிவகார அமைச்சிடம் இருந்து பதில் வரவில்லை எனவும் , 10 மாத காலப்பகுதிக்குள் 5 கடிதங்களை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியும் பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது



# திருகோணமலையில் தடை உத்தரவை மீறியும் எழுச்சியுடன் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல்!

செப்டம்பர் 26, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் இறுதி நாள் நினை வேந்தலை தடுக்க முயன்ற சிறீலங்கா காவல்துறையினரின் தடை உத்தரவையும் மீறி மக்கள் உணர்வுபூர்வமாக நினை வேந்தலை நடத்தி முடித்துள்ளனர்.



இன்றைய தினம் (26) திருகோணமலை குளக்கோட்டம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.



இதனை தடுக்கும் நோக்கில் திருக்கோணமலை நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி பயாஸ் ரசாக் அவர்களின் அனுமதி யுடன் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

குறித்த தடை உத்தரவு முற்றிலும் சிங்களத்தில் இருந்ததும்



அதனை தமிழில் மொழி பெயர்த்துக்கூற ஒரு காவல்துறை அதிகாரியும் இல்லாத நிலையில் நீண்ட நேரம் ஓர் முரண்பாடே உருவாகிவிட்டது.

தடைகள் அனைத்திற்கும் மத்தியில் பொதுமக்கள் நினை வேந்தலை உணர்வுபூர்வமாக நடத்தி முடித்துள்ளனர்.


ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் வைக்க தடை விதித்த நிலையில், மண்டபத்தில் இருந்த கதிரை ஒன்றில் அவர் இருப்பதாக உருவகித்து மாலைகள் அணிவித்தும், மெழுகுவர்த்திகளை கொளுத்தியும் நினைவேந்தலை நடத் தினர்.

சுமார் 70 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த நினைவேந்தலில் பங்குபற்றியிருந்தனர். ஜனநாயக நாடு என்று சொல்லும் தேசத் தில் ஒரு இனத்தின் விடுதலைக்காய் போராடிய உன்னத மனிதனிற்கு நினைவேந்தல் மேற்கொள்ளவும் உரிமை மறுக் கப்படுவதை கண்டிக்கிறோம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஒரு இனத்தவர் மீதான தடை உத்தரவு சிங்கள மொழியில் இருப்பதும் அதனை மொழிபெயர்க்கக்கூட ஒரு அதிகாரி இல் லாமல் இருப்பதும் இனவெறியின் உச்சம் என்பதைக்காட்டிலும் வேறென்னவென்று சொல்ல முடியும்.

ஊடகவியலாளர்களின் பெயர் குறிப்பிட்டு தடை உத்தரவு ஊடக சுதந்திரத்தினை ஒடுக்குவதற்கு ஒப்பானது என்றும் இது தொடர் பில் கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும், வடக்கு கிழக்கில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல நீதிமன்றங்களில் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை உத் தரவை காவல்துறையினர் கோரியிருந்தது போதிலும் பல நீதி மன்றங்கள் தடை உத்தரவு வழங்க மறுப்பு தெரிவித்திருந்தது.




ஆனால் கிழக்கு மாகாணத்தில் "இன முருகல் ஏற்படும்" என்ற வாதத்தை முன்வைத்து காவல்துறையினரால் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில், இனமுறுகல் ஏற்படும் எனில் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை காவல்துறையினர் நடுநிலையாக இருக்க வேண்டிய நிலையில், ஒரு பக்கத்தின் உரிமைகளை மாத்திரம் தொடர்ச்சியாக கட்டுப்படுத்தி வருவது சரியானதா? என்ற கேள் வியை நீதித்துறை மற்றும் நிறைவேற்று துறைக்கு எதிராக எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 26, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் மன்னாரில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க் கிழமை (26) காலை நினைவேந்தல் நிகழ்வு உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தேசிய உணர்வாளர்கள், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் இணைந்து மலர் வணக்கம் செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பரஞ்சோதி, மன்னார் நகரசபையின் முன்னாள் உப தவிசாளர் ஜான்சன் உட்பட பொதுமக்கள் பலர் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டு ஈகைச்சுடர் லெப்.



கேணல் திலீபனுக்கு சுடர் ஏற்றி , மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.





# கொட்டும் மழையிலும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் கனவைச்சுமந்து 36ஆவது ஆண்டு நினைவு நாளில் அலையென எழுச்சியுடன் வருகை தந்த மக்கள்!

செப்டம்பர் 26, 2023

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவு இறுதி நாள் நினைவேந்தல் நல்லூரில் நிகழ்துள்ளது.

தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்காய் இந்திய அரசிடம் 15.09. 1987 அன்று ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து யாழ். நல்லூர் முன்றலில் நீராகாரம் அருந்தாமல் (அகிம்சை வழியில்) உண்ணாநிலை போராட்டம் தொடர்ந்து 26.09.1987 அன்று 12ம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளான இன்று யாழ், நல்லூரிலுள்ள திலீபனின் நினைவிடத்தில் அவரினை நினைவு கூரும் வகையில் தமிழர் தேசமெங்கிலுமிருந்து ஈகைச்சுடரை நினைவேந்திட மக்கள் கொட்டும் மழையிலும் அலையென திலீபனின் கனவை சுமந்து அக்கனவை நினைவாக்க வருகை தந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வை ஈகைச்சுடர் ஏற்றி ஆரம்பிவைக்க அதையடுத்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் அவர்களின் உருவப்படத்திற்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இதே நேரம் கடந்த 15 .09.2023 அன்று ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 36 வது நினைவு தினத்தினை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் வரையான ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருஉருவப்படம் தாங்கிய வாகன ஊர்த்திப் பவனி ஆரம்பமாகியுள்ளது. ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலில் 3 ஆம் நாளாகிய 17.09. 2023 அன்று பொத்துவில் தொடங்கி நல்லூர் வரையான திருவுருவப் படம் தாங்கிய நினைவூர்தி திருகோணமலை மாவட்டத்தில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, கப்பல் துறைப்பகுதியில் வைத்து, சிறீ லங்கா புலனாய்வாளர்களும் காடையர்களும் இணைந்து ஊர்தி மற்றும் திருவுருவப்படம் என்பவற்றினை அடித்து நொறுக்கியதோடு, ஊர்தியின் சாரதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வாராசா கஜேந்திரன் உட்பட உடன்பயணித்தோர்களை அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளனர்.



இந் நிலையில் பேரினவாத சிங்கள அரசின் அடக்குமுறையை ஊடறுத்து பேரெழுச்சியுடன் பயணிக்கும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் ஊர்திப்பவனி ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலில் பொத்துவில் தொடங்கி நல்லூர் வரையான திருவுருவப்படம் தாங்கிய நினைவூர்தி தடைகளை உடைத்து புதிய மிடுக்குடன் இன்று நல்லூரில் வந்தடைந்துள்ளது.

இந்திய அரசிடம் 15.09.1987 அன்று ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து வட தமிழீழம் , யாழ். நல்லூர் முன்றலில் நீராகாரம் அருந்தாமல் (அகிம்சை வழியில்) உண்ணாநிலை போராட்டம் தொடர்ந்து 26.09.1987 அன்று 12ம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 36 ஆவது நினைவு நாள் தமிழீழத்தில் தொடங்கி புலம்பெயர் தேசங்களிலும் மிகவும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஐந்து அம்ச கோரிக்கை:

1) பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நாடாத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடணடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4) வடகிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5) இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு தமிழ்க்கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடி கொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.














# ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் முன்மொழிந்துள்ள “Online Saftey” சட்ட மசோதா!

செப்டம்பர் 26, 2023

ரணில் விக்ரமசிங்கே அரசாங்கம் முன்மொழிந்துள்ள "Online Safety" சட்ட மசோதாவின் கீழ் Facebook மற்றும் Twitter போன்ற சமூக தளங்களில் தேசிய பாதுகாப்பு , பொது அமைதி, உட்பட்ட சமூக அரசியல் விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பதிவுகள் அல்லது விவாதம் “தவறானது“ என அரசாங்கம் கருதினால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

Facebook மற்றும் Twitter போன்ற சமூக தளங்களின் பதிவுகள் “தவறானது“ அல்லது குறித்த பதிவுகளால் குழப்பங்கள் ஏற்படும் என அரசாங்கம் கருதினால் குழப்பங்கள் ஏற்படாவிட்டாலும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்

மதங்கள் தொடர்பான சமூக தள பதிவுகள் மத நம்பிக்கைகளை புண்படுத்தும் என கருதினால் அல்லது அரசாங்கம் குறித்த பதிவுகள் ”தவறானது” என கருதினால் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கபடும்

சமூக தள பதிவுகள் மூலம் யாரையும் அவமானபடுத்தி அல்லது வேறு ஒருவரை தூண்டி குறித்த நபர் குற்றம் புரிந்தால் பதிவு செய்த நபருக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

சமூக தளதத்தில் கலகத்தை ஏற்படுத்தும் நோக்கில் முப்படையினருக்கான உத்தரவுகள் குறித்து விவாதித்தால் அல்லது அத்தகைய உத்தரவுகளின் எதிர்மறையான சமூக தாக்கத்தைப் பற்றி பதிவு செய்தால் அல்லது அரசு படையினர் தொடர்பான பதிவுகள் ”தவறானது ”கருதினால் ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

மேற்படி சட்டமூலத்தின் கீழ் நிறுவப்படும் Online Safety Commission வழிகாட்டுதல்களை அல்லது உத்தரவுகளை 24 மணி நேரத்திற்குள் பின்பற்றத் தவறினால், ஐந்து ஆண்டுகள் வரை சிறை வைக்கப்பட முடியும்.

இது தொடர்பாக மேல்முறையீடு செய்வதற்கு எந்த வழியும் வழங்கப்பட மாட்டாது.

Online Safety Commission ”அனுமதிக்காத தகவல்களை” வெளியிடும் இணையதள நிறுவனமொன்றுடன் பண கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டால் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட எந்த குற்றத்தைச் செய்யாவிட்டாலும், குற்றத்தைச் செய்த யாராவது ஒருவருடன் தொடர்பில் இருந்ததற்காக மட்டும்,குற்றத்தின் அதிகபட்ச தண்டனையின்



பாதியளவு சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இந்த சட்ட மசோதா மூலம் ஜனாதிபதி நியமிக்கும் 5 பேர் கொண்ட Online Safety ஆணைக்குழு (Commission) மேற்குறிப்பிட்ட விடயங்களை கையாளுவார்கள்.

குறிப்பாக இந்த ஆணைக்குழு சமூக தளங்களின் பதிவுகள் “தவறானதா“ அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள் சட்டமூலத்தில் எந்த பதிவுகள் தவறானது என்பதை வரையறுப்பதற்கான தெளிவான விளக்கங்கள் இல்லை.

இதுபோதாதென்று இந்த ஆணைக்குழுவிற்கு எதிராக எவ்வித சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றைத் கூட தொடுக்க முடியாது.

# 30 வருடகால ஆயுதப் போராட்டம் மௌனித்தபோதிலும் தமிழர்களின் விடுதலை வேட்கை தொடர்கிறது திலீபனின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டது !

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

செப்டம்பர் 26, 2023

தமிழர்களின் விடுதலைக்காகவென ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் முப்பதுவருடங்களின் பின் மௌனிக்கப்பட்ட போதும், தமிழர்களின் விடுதலைக்கான பயணம் நினைவேந்தல்களின் மூலமும், ஜனநாயகவழி ஆர்ப்பாட்டங்கள் மூலமும் தொடர்கிறது என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் “போராட்டவடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது” என்ற தியாகி திலீபனின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு - சுதந்திரபுரம் சந்தி வளாகத்தில் இடம்பெற்ற நிலையில், அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு காலத்தில் அகிம்சை என்றால், அது மகாத்மா காந்தி என இந்தியா மார்தட்டிக்கொண்டிருந்தது.

இந் நிலையில் அதே இந்தியாவின் அடக்குமுறைகளைப் பொறுத்துக்கொண்டு, இந்தியா ஏதாவது தீர்வுகளைப் பெற்றுத் தரும் என்ற எண்ணத்துடன், தியாகதீபம் திலீபன் எமக்காக, தலைவரின் சிந்தனைக்கேற்ப ஓர் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து தன்னுயிரைத் தியாகம் செய்தார்.

இவ்வாறான சூழலில் நாம் தியாகதீபத்தினுடைய 36ஆவது ஆண்டு நினைவேந்தலை மேற்கொண்டுவருகின்றோம்.

இந்த நினைவேந்தல்களினூடாக தியாகதீபம் திலீபன் யார் என்பதை, நாம் எமது அடுத்த தலைமுறைக்கு சொல்லிக்கொடுப்பதும், தியாக தீபத்தின் அகிம்சை வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதுமே எமது நோக்கமாகும்.

எமது அடுத்த தலைமுறையினர் பலரும் தாமாக முன்வந்து தியாக தீபம் திலீபனை நினைவேந்துவதையும், அவருக்கான அஞ்சலிகளைச் செலுத்துவதையும் காணும்போது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருக்கும்போது, பேச முடியாத நிலையில் அவரால் சில வசனங்களை எழுதப்பட்டன.

“நான் மரணத்தை மகிழ்ச்சியுடனும், பூரண திருப்தியுடனும் தான் தழுவிக்கொள்கின்றேன். என் தலைவனின் தலைமையில் அனைத்து மக்களும் கிளர்ந்தெழுவார்கள் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இந்த மாபெரும் மக்கள் புரட்சி என்றோ ஓர்நாள் எம் இலட்சியத்தினை நிறைவேற்றியே தீரும். எம் மக்கள் மீது கொண்ட அசையாத நம்பிக்கையின்பேரில், அவர்கள் மீதுகொண்ட தாழாத பாசத்தின்பேரில், அவர்களின் விடிவிற்காக நான் 651ஆவது விடுதலைப்புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கின்றேன்.” என எழுதினார்.

இவ்வாறாக எமக்கான விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் கோரிக்கைகளை முன்வைத்து, நீர், உணவு ஏதுமின்றி நாளாந்தம் தனது உடலினை உருக்கி எமக்காக உயிர் நீத்தார்.

இவ்வாறு அகிம்சை வழிப்போராட்டத்தினை முன்னெடுத்ததன் ஊடாக இங்கு தமிழர்களாகிய நாம் விடுதலைக்காக அறவழியில் போராடிவருகின்றோம் என்பதை உலகறியச் செய்தார். குறிப்பாக கடந்த காலத்தில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்



திலே இலங்கை அரசு பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என ஒப்பந்தங்களை மேற்கொண்டு தமிழர்களை ஏமாற்றிவந்தது.

அதனைத் தொடர்ந்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அதிலும் தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே இருக்கின்றோம்.

“போராட்ட வடிவங்கள் மாறலாம், இலட்சியம் மாறாது” எனத் திலீபன் அன்று சொல்லியதற்கு இன்றும் தமிழ் மக்கள் வடிவம் கொடுத்துவருகின்றார்கள்.

தமிழர்களுக்கான விடுதலைப் பயணத்தில் முப்பது வருடகால யுத்தம் மௌனிக்கப்பட்டு, நாம் வீழ்ந்து விட்டதாக அனைவரும் நினைக்கும்போது, மீண்டும் இவ்வாறான நினைவேந்தல்கள் மூலமும், போராட்டங்கள் மூலமும் தமிழர்கள் தமது விடுதலைக்கான எழுச்சியைத் தொடர்ந்தும் காண்பித்து வருகிறார்கள் - என்றார்.

# சுதந்திரபுரம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள நிரோசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலை!











# இரவோடிரவாக திருகோணமலை இலுப்பக்குளம் பகுதியில் விகாரை!

செப்டம்பர் 27, 2023

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர்ப்பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமான முறையில் இரவு வேளைகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை அம்பலமாகியுள்ளது.



விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் இரகசியமாக முறையில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருதாக தெரியவந்துள்ளது.

விகாரையின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இம் மாதம் 3ஆம் திகதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்பின்னர் 09ஆம் திகதி காலை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பெயர்ப்பலகை நடப்பட்டிருந்தது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் கண்டனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனிடையே விகாரைக்கான பணிகளை இடைநிறுத்தக்கோரி ஆளுநரினால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் படையினரது பங்கேற்புடன் இரவிரவாக கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை அம்பலமாகியுள்ளது.



ஏற்கனவே நீதிமன்ற தடையினை தாண்டி முல்லைத்தீவு குருந்தூர்மலையில் விகாரை அமைப்பு பணிகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளமை சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போயா நாளை முன்னிட்டு தையிட்டியில் முன்னெடுக்கப்படும் போராட்டம்!

செப்டம்பர் 28, 2023

போயா தினத்தை முன்னிட்டு முன்னணியினால் காங்கேசன் துறையில் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை யாழ்ப்பாணம் – வலிகாமம் வடக்கு பகுதியின் அதிவுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட இடமே தையிட்டி .இந்த தையிட்டியில் ஒரு பகுதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்த பகுதியில் தமிழர்களுக்கு சொந்தமான இடங்கள் இன்றும் பாதுகாப்பு தரப்பினர் வசம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மக்களுக்கு சொந்தமான இடங்களை அக்கிரமித்து, படையினர் பௌத்த விகாரையொன்றை அமைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.



மக்களின் நிலங்களை அக்கிரமித்து, பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, போயா நாட்களில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



இந்த விகாரையை நிர்மாணிப்பதற்காக இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறும், தமிழர் பகுதிகளில் பௌத்த மயமாக்கலை நிறுத்துமாறும் வலியுறுத்தி இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக பதவி விலகினார்!

செப்டம்பர் 28, 2023

உயிர் அச்சுறுத்தல், தொடர் அழுத்தங்களால் முல்லைத்தீவு நீதிபதி பதவி துறந்து, நாட்டை விட்டு வெளியேறினார்!

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து எதிர்கொண்டுவந்த உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி



ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு,

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றிற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.


அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை, புலனாய் வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர், என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் 21.09.2023ம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார்.

குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.

இது குறித்த பதவி விலகல் கடிதத்தினை கடந்த 23-09-2023 அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள் ளேன் என்று தெரிவித்தார்.



மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம், முல்லைத்தீவு.
DISTRICT /MAGISTRATE'S COURT, MULLAITIVU.

23.09.2023

Hon. Secretary,
Judicial Services Commission,
Colombo 12.

RESIGNATION LETTER

I hereby inform you that I resign my post of District Judge, post of magistrate, post of family court Judge, post of primary court Judge, post of small claims court Judge, post of Juvenile court Judge due to threat of my life and due to lot of stress.

Please accept my resignation.

Thank you.

T.Saravanarajah
District Judge & Magistrate
District & Magistrate's Court
Mullaitivu.

அவர், தன்னுடைய பதவி விலகலை அறிவித்தபின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

# சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்குப் பாரப்படுத்த வேண்டும்!

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

செப்டம்பர் 28, 2023

பதினைந்து வருடங்களாகத் தொடரும் நிலைமையை அங்கத்துவ நாடுகள் உற்றுநோக்கினால் இலங்கை அரசினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டிய அவசியம் புலப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஐநா மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள் தொடர்பில் புதன்கிழமை (27-09- 2023) இடம்பெற்ற விடயம் 4 ன் கீழான பொது விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவருடைய உரையில் குறிப்பிட்டதாவது,

இலங்கை அரசினால் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் திட்டமிட்ட சிங்கள மயமாக்கல் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைள் மீள ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

குருந்தூர் மலையிலுள் தமிழர்களின் பழமையான வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் நீதி மன்ற உத்தரவையும் மீறி பௌத்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று சிங்கள மக்கள் வசிக்காத தமிழர் தாயகப்பகுதிகளான நாயாறு, தையீட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல் சமனலங்குளம், கன்னியா வென்னீருற்று போன்ற இடங்களிலும் பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாக ஆலயங்கள் கட்டப்படும் சில இடங்களில் அரச அனுசரணையுடனான சிங்கள் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மயிலந்தமடு, மாதவனை பகுதிகளில் மூன்று இலட்சம் கால்நடைகள் பயன்பெறக்கூடிய மேச்சல் நிலங்களில் வசித்தவந்த தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டு, நீதிமன்ற உதரவினைமீறி அவ்விடங்களில் சட்டவிரோதமான முறையில் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களான சிங்கள இனத்தவர் குடியேற்றப்படுகின்றனர்.

மாதுரு ஓயா வலது கரை மேம்பாட்டு திட்டத்தினைப் பயன்படுத்தி இனப்பரம்பலை மாற்றும் விதத்தில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு அவ்விடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

அரசின் மேற்படி இனவாத நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் போராட்டங்களை மேற்கொள்பவர்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கமானது இச்சட்டத்தினை நீக்குவதாக ஐநா



மனிதவுரிமைச் சபைக்கு உறுதியளித்திருந்தது, எனது சகாவான செல்வராசா கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதுடன், அவர் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டதனை இங்கு சுட்டிக்காட்டலாம்.

2012ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இவ்விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றபோதிலும், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவித மாற்றமுமின்றித் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன.

பதினைந்து வருடங்களாகத் தொடரும் இந் நிலைமையை அங்கத்துவ நாடுகள் உற்றுநோக்கினால் இலங்கை அரசினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டிய அவசியம் புலப்படும் என்றார்

# யாழில் மனித சங்கிலிப்போராட்டம்!

செப்டம்பர் 29, 2023

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகி நாட்டைவிட்டு சென்ற விவகாரத்தில், தமிழ் மக்களின் எதிர்ப்பை காண்பிக்க போராட்டங்களை நடத்த தமிழ் தேசிய கட்சிகள் தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை, இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

இதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மிகப்பெருமெடுப்பில் மனிதச்சங் கிலிப் போராட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடத்திலிருந்து யாழ் நகர் வரை மனிதச்சங்கிலி போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பின்னர் முல்லைத்தீவை முடக்கி போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.



அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டது.

# நீதிபதிகள் யாரும் சொல்கின்ற தீர்ப்பைத் தான் வாசிக்க வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

செப்டம்பர் 29, 2023

தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பை சொல்லுகின்ற நிலையில் இருக்கக் கூடாது. அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத் தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்பொழுது வெளிப்படையாக தெரிகிறது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (29) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையிலேயே இந்த நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையாக இருந்ததா என்ற கேள்வி எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவருடைய கருத்துக்களை பார்க்கின்ற போது சட்டமா அதிபர் கூட இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்ற செய்தி அதில் அறியக கூடியதாக உள்ளது. நீதித்துறை எங்கே செல்கிறது? தமிழர்களுடைய பக்கம் அது தீர்ப்பு என்பது ஒரு நடுநிலையானது.

அவர் தமிழ் பிரதேசத்தில் இருந்து கொண்டிருக்கிறார். ஒருவர் நியாயமான தீர்ப்பை வழங்குகின்ற ஒரு நிலையிலேயே இருந்து கொண்டிருக்கும் நிலையில் தென்னிலங்கையிலே இனவாதமாகவும், அவர் ஒரு தமிழராகவும் பார்க்கப்படுகின்ற நிலை காரணமாக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. மக்கள் நீதித்துறையை நம்பித்தான் இன்றைக்கு நீதிமன்றத்திற்கு சொல்கிறார்கள்.

ஆனால் இப்பொழுது இருக்கின்ற நிலையை பார்க்கும் போது தமிழ் நீதிபதிகளுக்கு அவர்கள் நியாயமாக செயல்படுகின்ற வாய்ப்பை தடுக்கின்ற அவர்களை அச்சுறுத்துகின்ற ஒரு செயல்பாடாக தான் இந்த நீதிபதியின் இராஜினாமா செய்தி கூறுகிறது.

ஆகவே, தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பை சொல்லுகின்ற நிலையில் இருக்கக் கூடாது. அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத் தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்பொழுது வெளிப்படையாக தெரிகிறது. ஆகவே நீதித்துறைக்கு விட்ட சவாலாக அமைந்துள்ளது.

ஆகவே, நிதியமைச்சர் இந்த விஷயத்தை ஆராய்ந்து இது உண்மையாக அதாவது அவருடைய இராஜீனாமாவில் அழுத்தம் உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும்.

ஏனென்றால் அவர் அமைச்சராக இருக்கும் போது ஒரு நீதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இச் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். பாராளுமன்றத்தில் ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

சில வேளைகளில் எல்லா எங்களுடைய எதிர்க்கட்சியில் இருக்கும் தமிழ் பேசுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களையும் இதில் உள்ளடக்கி என்ன செய்யலாம் என்று நாங்கள் ஆராய்ந்து நிச்சயமாக நீதித்துறைக்கு விடுக்கப் பட்டிருக்கின்ற இந்த சவாலை முறியடிக்க வேண்டும்.

ஏனென்றால் நீதி நடுநிலையானது. அது யாருக்கும் தலை சாய்வதில்லை. அந்த வகையில் எங்களுடைய நீதிபதி அவர்கள் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அதற்காகவே இத்தனை அச்சுறுத்தல்களும். புத்த பிக்குகள் நீதித்துறையை மதிப்பதில்லை என்பது இந்த விடையத்திலே பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதில் குறுந்தூர் மலை தீர்ப்பு என்பது பல அழுத்தங்களை கொடுக்கும் வகையில் நீதிபதி அவர்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.



இதில் புத்த பிக்குகளின் கூட்டமும் அடங்குகின்றது என எண்ணுகின்றேன். ஏன் என்றால் இந்த நாட்டை ஆளுகின்ற புத்த பிக்குகளா? என்ற சந்தேகம் எழுகின்றது.

எனவே இந்த விடயத்தில் நாங்கள் அனைத்து நீதிபதிகளையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எங்களுடைய மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே, தீர்ப்பு நியாயமாக வழங்கப்பட வேண்டும் என்றால் நீதித்துறைக்கு தலைக்குனிவை ஏற்படுத்தி உள்ளவர்கள் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

சட்டமா அதிபரின் அழுத்தம் உள்ளதாகவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். எனவே அவரும் இராஜினாமா செய்வது சிறந்தது என கருதுகிறேன். எனவே நாங்கள் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதன் ஊடாகவே நீதித்துறையை நடு நிலமைக்கு கொண்டு வர முடியும்.

எனவே, நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்,மற்றும் அவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்கின்ற அளவிற்கு மிக மோசமான அச்சுறுத்தல் இருந்ததினால் தான் அவர் இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய நீதியமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.




# கனடாவில் புதிய வாடகை வீடுகள் மீதான! ஜி.எஸ்.ரி வரியை நீக்குகிறது!

செப்டம்பர் 15, 2023

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் ஜீ.எஸ்.ரீ வரி தொடர்பில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டில் நிலவிவரும் வீட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது.

வாடகை குடியிருப்பு கட்டுமானம் தொடர்பிலான ஜீ.எஸ்.ரீ வரி அளவீடு ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டுக்கு முதல் கனடிய மத்திய அரசாங்கம் இது தொடர்பில் பொது மக்களுக்கு வாக்குறுதி ஒன்றை அளித்திருந்தது.

இந்த வாக்குறுதியின் பிரகாரம கனடா ஜீ.எஸ்.ரீ வரியை ரத்து செய்ய தீர்மானித்துள்ளது.

நாளுக்கு நாள் நாட்டில் வீட்டு விலைகள் உயர்வடைந்து செல்லும் நிலையில் வீடு கட்டுமானத்திற்காக அளவீடு செய்யும் ஜீ.எஸ்.ரீ வரியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு வரி அளவீடு ரத்து செய்யப்படுவதனால் வீடு நிர்மாணிப்பதற்கான செலவுகளை குறைக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



# காலிஸ்தான் சீக்கிய தலைவர் கனேடிய மண்ணில் வைத்து படுகொலை! இந்தியா மீது கனடா குற்றச்சாட்டு!

செப்டம்பர் 19, 2023




கனடா நாட்டில் காலிஸ்தான் டைகர் போர்ஸ் இயக்கத்தின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அரசின் ஏஜெண்ட்கள் மீது அந்நாட்டு பாதுகாப்பு ஏஜென்சிகள் குற்றம்சாட்டியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் அடுத்த பர்சிங் பூர் கிராமத்தை சேர்ந்த சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார். இவர் காலிஸ்தான் என்ற தனி நாடு கோரிக்கையை முன் வைத்து போராடி வந்தார். இதையொட்டி “காலிஸ்தான் டைகர் போர்ஸ்” என்ற இயக்கத்தை தொடங்கினார். இந்நிலையில் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இந்திய அரசு குற்றம்சாட்டியது. ஜலந்தரை சேர்ந்த இந்து துறவி ஒருவர் கொல லப்பட்டதில் நிஜ்ஜாருக்கு தொடர்பிருப்பதாக புகார் எழுந்தது.

யார் இந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார்?



இந்நிலையில் தேடப்படும் குற்றவாளியாக தேசிய புலனாய்வு அமைப்பு (NIA) அறிவித்தது. நிஜ்ஜாரை கண்டுபிடிக்க உதவி னால் 10 லட்சம் ரூபாய் சன்மானம் அளிக்கப்படும் என்று என்.ஐ.ஏ அறிவிப்பு வெளியிட்டது. இந்நிலையில் கனடாவில் குடியுரிமை பெற்று நிஜ்ஜார், அங்கேயே தஞ்சமடைந்தார். கனடாவை பொறுத்தவரை சீக்கியர்களுக்கு மிகவும் முக்கியத் துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இங்கு சுமார் 8 லட்சம் சீக் கியர்கள் வசித்து வருகின்றனர்.

கனடாவில் சீக்கியர்கள்

அந்நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 2 சதவீதம் சீக்கியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நிஜ்ஜார் எந்தவித பிரச்சினையும் இன்றி கனடாவில் வசித்து வந்துள்ளார். அங் கிருந்த படியே காலிஸ்தான் தனி நாடு கோரிக்கை தொடர்பான வேலைகளை முடுக்கி விட்டு வந்தார். 2016ஆம் ஆண்டு இவருக்கு எதிராக இன்டர்போல் ரெட் கார்னர் நோட்டீஸ் வழங் கப்பட்டது. 2020 செப்டம்பரில் பயங்கரவாதி என்று இந்திய அரசால் முத்திரை குத்தப்பட்டார்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை

இந்த சூழலில் கடந்த ஜூன் 18ஆம் தேதி கனடாவின் வான் கோவர் புறநகர் பகுதியான சர்ரேவில் சீக்கிய கோயில் அருகே ஹர்தீப் சிங் நிஜ்ஜார் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்கு வயது 45. இந்த கொலை சம்பவம் தொடர்பாக கனடாவை சேர்ந்த புலனாய்வு ஏஜென்சிகள் விசாரணை நடத்தி வந்தன.

இந்திய அரசு மீது குற்றச்சாட்டு

இந்நிலையில் நிஜ்ஜார் கொலை விவகாரத்தில் இந்திய அரசின் ஏஜெண்ட்களுக்கு தொடர்பிருப்பதாக கனடா அரசு குற்றம்சாட்டி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக நம்பகத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது. குறிப்பாக கனடா அதிபர் ஜஸ்டின் ட்ரூடோ நேரடியாகவே குற்றம்சாட்டி இருக்கிறார். இது இந்திய அரசை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கி யுள்ளது.

தூதர்களை வெளியேற்றிய அரசுகள்

இந்த குற்றச்சாட்டை இந்திய அரசு மறுத்துள்ளது. கனடா அதிபர் குற்றம்சாட்டிய அடுத்த சில மணி நேரங்களில் இந்தியாவின் தூதரக அதிகாரி கனடாவில் இருந்து அதிரடியாக வெளி யேற்றப்பட்டார். கனடா அரசின் நடவடிக்கை இருநாடுகளின் உறவில் சிக்கலை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது. இந்நிலை யில் கனடா அரசிற்கு பதிலடியாக அந்நாட்டு தூதரக அதிகாரியை இந்தியா வெளியேற்றியிருப்பது கவனிக்கத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# கனடாவிற்கு முதல் அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொண்டார் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி!

செப்டம்பர் 22, 2023

போர் தொடங்கியதில் இருந்து 175,000 க்கும் மேற்பட்ட உக்ரேனியர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர் மற்றும் கனடா உக்ரைனுக்கு ஆதரவாக 6.1 பில்லியன் யூரோக் களை வழங்கியுள்ளது.

ரஷ்ய படையெடுப்பிற்கு எதிரான உக்ரைனின் போருக்கு மேற்கத்திய நட்பு நாடுகளின் ஆதரவை வலுப்படுத்தும் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி இன்று வெள்ளிக்கிழமை கனடிய நாடாளுமன்றத்தில் பேசுவார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் வாஷிங்டனில் உள்ள சட்டமியற்றுபவர்களுடனான சந்திப்புகளுக்குப் பிறகு திடீர் விஜயம் ஒன்றிற்காக வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று வியாழன் பிற்பகுதியில் கனடாவின் தலைநகருக்கு ஒட்டாவுக்குச் சென்றார். ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டுக் கூட்டத்தில் அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை பேசினார்.

ஒட்டாவாவின் விமான நிலையத்தில் ஜெலென்ஸ்கிக்கு அன்பான வரவேற்பு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அளித்தார்.

பிப்ரவரி 2022 இல் ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்த பிறகு, கனடாவுக்கு வோலோடிமிர் ஜெலென்ஸ் மேற் கொண்ட முதல் விஜயம் இதுவாகும். போர் தொடங்கிய பின்னர், கனடிய நாடாளுமன்றத்தில் அவர் முன்பு உரை யாற்றினார்.

அவர்களின் உரைகளுக்குப் பிறகு, ஜெலென்ஸ்கியும் ட்ரூடோவும் உள்ளூர் உக்ரேனிய சமூகத்தைச் சந்திக்க ரொராண்டோ செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. கனடாவில் உக்ரேனிய வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 1.4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர், மக்கள் தொகையில் 4%க்கு அருகில் உள்ளனர்.

நாங்கள் உக்ரைனுக்கு நிறைய உதவிகளைச் செய்துள் ளோம். இன்னும் செய்ய வேண்டும். உக்ரேனிய மக் களுக்கு ஆதரவளிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் தொடர்ந்து செய்யப் போகிறோம் என்று கன டாவுக்கான ஐ.நா. தூதர் பாப் ரே கூறினார்.

7 தொழில்துறை நாடுகளின் குழுவில் (ஜி7) உக்ரைனுக்கு அதிகபட்ச நேரடி நிதியாக உதவி கனடா கூ8.9 பில்லியன் கனடியன் (€6.1 பில்லியன்) உதவியை வழங்கியுள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து 175,000 க்கும் அதிகமான



உக்ரேனியர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர் மேலும் 700,000 பேர் போரிலிருந்து தப்பியோடியவர்களை தற் காலிகமாக இடமாற்றம் செய்யும் முயற்சியின் ஒரு பகுதி யாக வர ஒப்புதல் பெற்றுள்ளனர். இந்த முயற்சியானது நிரந்தர வதிவிட மற்றும் குடியுரிமைக்கான பாதைகளுடன் மூன்று ஆண்டுகளுக்கு திறந்த பணி அனுமதியை அனுமதிக்கிறது.

வோலோடிமிர் ஜெலென்ஸ்கி 2019 இல் கனடாவிற்கு தனது முதல் அதிகாரப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

# ஆளும் லிபரல் கட்சிக்கான ஆதரவு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்வதாக தெரிவிப்பு!

செப்டம்பர் 24, 2023

கனடாவில் ஆளும் லிபரல் கட்சிக்கான ஆதரவு வீழ்ச் சியடைந்து செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான கொன்சேவடிவ் கட்சிக்கு மக்கள் ஆதரவு கூடி வரும் நிலையை அவதானிக்க முடிவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

கொன்சேவடிவ் கட்சிக்கான மக்கள் ஆதரவு 34.9 வீதமாகவும், லிபரல் கட்சிக்கான ஆதரவு 28.9 வீதமாகவும், என்.டி.பி கட்சிக் கான மக்கள் ஆதரவு 22.2 வீதமாகவும் காணப்படுவதாக கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.



லிபரல் கட்சிக்கான ஆதரவு 0.6 வீதத்தினால் வீழ்ச்சியடைந் துள்ள அதேவேளை, கொன்சேவடிவ் கட்சிக்கான ஆதரவு 0.8 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

# இந்தியாவில் உள்ள கனேடியர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

செப்டம்பர் 25, 2023

இந்தியாவில் உள்ள கனேடியர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனடிய அரசாங்கத்தினால் புதிதாக பயண அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சீக்கிய மதத் தலைவரான ஹார்டீப் சிங் நிஜார் படுகொலை தொடர்பில் இந்தியாவிற்கும், கனடாவிற்கும் இடையில் முரண் பாட்டு நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் கனடாவிற்கு எதிராக இந்தியா வில் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இந்த பயண அறிவுறுத்தல் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இந்தியாவும் கனடாவிற்கான பயணங்கள் தொடர்பில் பயண அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்தது.




# இந்திய தேசியக்கொடி எரிக்கப்பட்டு திரு. மோடியின் கட் அவுட் மீது செருப்பு; காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம்!

செப்டம்பர் 26, 2023

காலிஸ்தான் விடுதலைத் தலைவர் கனடாவில் சுட்டுக்கொல்லப் பட்டதை அதுத்து கனடா இந்தியா உறவில் விரிசல்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ரொராண்டோவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் இந்தியக் கொடியை எரித்ததுடன், பிரதமர் நரேந்திர மோடியின் அட்டை கட்அவுட்டில் காலணிகளை வீசு அதனை மிதித்துள்ளனர்.

**கனேடிய நகரங்களில் காலிஸ்தான் பிரிவினைவாத முழக்கம்**

ராய்ட்டர்ஸ் அறிக்கையின்படி, இந்த மூன்று முக்கிய கனேடிய நகரங்களில் எதிர்ப்பாளர்கள் “காலிஸ்தான்” என்ற வார்த்தை யுடன் மஞ்சள் கொடிகளை அசைத்து, பிரிவினைவாத முழக் கங்களை எழுப்பி இந்திய தேசிய கொடியை எரித்துள்ளனர்.

அதேசமயம் ஒட்டாவாவில் உள்ள இந்தியாவின் உயர்




ஸ்தானிகராலயத்திற்கு வெளியே மூடப்பட்ட சாலைகள் மற்றும் ரொராண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள தூதரக கட் டிடங்கள் திங்களன்று 500 க்கும் குறைவான கனேடிய காலிஸ் தான் பிரிவினைவாத எதிர்ப்பாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பாக இந்திய அரசுக்கு தங்கள் கண்டனத்தை அவர்கள் வெளிப் படையாக தெரிவித்திருந்தனர்.



# தமிழக செய்திகள்



# தியாக தீபத்தை அவமதித்த சிறிலங்கா காடையர்களுக்கு கடும் கண்டணம்!

**தமிழ்ப் பேரரசு கட்சி பொதுச் செயலாளர் வ. கௌதமன்**

செப்டம்பர் 17, 2023

தியாக தீபம் திலீபனின் ஊர்தி மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் கொலைவெறி தாக்குதல் நடத்திய காட்டுமிராண்டித்தனமான காடையர்களுக்கு கடும் கண்டனம். - வ.கௌதமன்

"தியாக தீபம்" அண்ணன் திலீபனின் 36 வது ஆண்டு நினை வேந்தலை முன்னிட்டு நடத்திய நினைவு ஊர்தி பயணத்தில் திலீபனின் திருவுருவம் தாங்கிய ஊர்தி மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராஜா கஜேந்திரன் அவர்களின் மீதும் காட்டுமிராண்டித்தனமான கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்ட சிங்கள காடையர்களுக்கு தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் நாள் பொத்துவில் தொடங்கிய பயணம் இரண்டாம் நாள் மட்டக்களப்பில் நிறைவடைந்து மூன்றாம் நாளான இன்று திரிகோணமலையில்பயணித்துக் கொண்டிருந்த பொழுது 50க்கும் மேற்பட்ட இராணுவ புலனாய்வாளர்களைக் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும் கப்பல்துறை முக சந்திக்கு அருகில் வந்து கொண்டிருந்த நிலையில் முதலாவதாக கல்வீச்சும் அதனை தொடர்ந்து சந்தாபுர சந்தியில் "தியாக தீபம்" திலீபனின் ஊர்தியை தாக்கியும் அதனை தடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராஜா கஜேந்திரன் அவர்களையும் சட்டத்தரணி நா.காண்டீபன் அவர்களையும் சிங்களக் கொடி பொருத்திய தடிகளால் கொலை வெறி தாக்குதல் நடத்திய காணொளிகளை கண்ட பொழுது நெஞ்சம் துடிதுடித்து மனம் தாங்க முடியாத துயரத்தை அடைந்தது. புலனாய்வாளர்களும் சிங்கள காவலர்களும் சுற்றி சூழ்ந்து பார்த்துக் கொண்டிருந்த நிலையில் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை காடையர்கள் நடத்தி இருப்பதென்பது ராஜபக்சே என்கிற கொடூர மானவருக்கு எந்த விதத்திலும் தான் சளைத்தவர் அல்ல என உலகத் தமிழினத்திற்கு ரணில் விக்கிரமசிங்கே அவர்கள் மீண்டும் ஒருமுறை சொல்லாமல் சொல்லி சவால் விட்டிருப்பதாகவே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.


திட்டமிட்ட இன அழிப்பு நடந்து 14 ஆண்டுகள் கடந்த பின்பும் இவ்வுலகம் எங்களுக்கு நீதி தராத நிலையில் ஒரு நாடாளு மன்ற உறுப்பினருக்கே இலங்கை தேசத்தில் இத்தகைய ஒரு நிலை என்கிறபோது எங்களது சாமானிய தமிழர்கள் அங்கு எப்படி வாழ முடியும் என்பதை இனியாவது ஐநா போன்ற உலகின் பெருமன்றங்கள் சிந்தித்து இதற்கெல்லாம் ஒரே தீர்வு "தனித் தமிழீழம்" ஒன்றுதான் என்று முடிவெடுக்க வேண்டு மென உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து எங்கள் மீது அதிகார அத்துமீறலை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சிங்கள காடையர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொள்கிற செய்தி ஒன்றே ஒன்றுதான்.

**"ஒவ்வொரு வினைக்கும்**
**எதிர்வினை உண்டு"**

வெல்வோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.




வ. கௌதமன்
பொதுச் செயலாளர்
தமிழ்ப் பேரரசு கட்சி
"சோழன் குடில்"

# தியாக தீபம் அண்ணன் திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல்! ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த, தமிழ்நாடு அரசு இந்திய ஒன்றிய அரசினை வலியுறுத்த வேண்டும்! – நாம் தமிழர் கட்சி கண்டன அறிக்கை

செப்டம்பர் 17, 2023


ஈழத்தாயகத்தில் திருகோணமலை கப்பல்துறையில் தியாக தீபம் அண்ணன் திலீபன் அவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்டிருந்த திலீபன் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திமீது சிங்களக்காடையர்கள் தாக்குதல் நடத்தி அதனை சிதைத்ததோடு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் அவரது கட்சி செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது வன்மை யானக் கண்டனத்திற்குரியது.

ஈழவிடுதலையில் ஆயுதப் போராட்டத்தின் அறத்தினையும், அவசியத்தினையும் தனது அகிம்சை போராட்டத்தின் மூலம் உலகிற்கு உணர்த்திய விடுதலைப்பேரொளி திலீபனி ஈகைத் தினைக்கூட நினைவுகூரக்கூடாது என்று விடுதலைப்போர் மௌனிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகும் சிங்களக் காடையர்களை ஏவி இலங்கை அரசு திலீபன் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துமாயின் தமிழர்கள் மீதான சிங்கள இனவெறி மனப்பான்மை என்றைக்கும் மாறாது என்பதற்கு இக்கொடும் நிகழ்வு மற்றுமொரு சான்றாகும்.

இலங்கை இனவாத அரசின் இராணுவ முகாம் எதிரில் சிங்கள காவல்துறையினர் முன்னிலையிலேயே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீது நடத்தப் பட்டுள்ள இத்தாக்குதல், சனநாயக முறையில் தமிழர்கள் ஒருபோதும் உரிமையைப் பெற்றுவிட முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அற்ப அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் பெற்று வாழ்ந்திட முடியும் என்ற வரலாற்று பொய்யினை பன்னாட்டு அரங்கில் மீண்டும் மீண்டும் முன் வைக்கும் இந்திய ஒன்றிய அரசு இப்போதாவது இனவாத இலங்கை அரசைக் கண்டிக்க வாய்திறக்குமா?

தமிழ் மக்களின் சனநாயக பிரதிநிதிகளின் மீதான வன்முறை தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறும் நிலையில் இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு அதனை அமைதியாக வேடிக்கைப் பார்ப்பது ஏன்? இதுதான் இந்தியா தமிழர்களுக் கான உரிமையைப் பெற்றுத்தரும் முறையா?


நாம் தமிழர் கட்சி
பதிவு எண்: 56/48/2013

நாள்: 17.09.2023

கண்டன அறிக்கை:

**தியாக தீபம் அண்ணன் திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல்! ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த, தமிழ்நாடு அரசு இந்திய ஒன்றிய அரசினை வலியுறுத்த வேண்டும்!**

ஈழத்தாயகத்தில் திருகோணமலை கப்பல்துறையில் தியாக தீபம் அண்ணன் திலீபன் அவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்டிருந்த திலீபன் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திமீது சிங்களக்காடையர்கள் தாக்குதல் நடத்தி அதனை சிதைத்ததோடு, **தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அன்புச்சகோதரர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் அவரது கட்சி செயற்பாட்டாளர்கள் 50க்கும் மேற்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது வன்மையானக் கண்டனத்திற்குரியது.**

ஈழவிடுதலையில் ஆயுதப் போராட்டத்தின் அறத்தினையும், அவசியத்தினையும் தனது அகிம்சை போராட்டத்தின் மூலம் உலகிற்கு உணர்த்திய விடுதலைப்பேரொளி திலீபனின் ஈகத்தினைக்கூட நினைவுகூரக்கூடாது என்று **விடுதலைப்போர் மௌனிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகும் சிங்களக் காடையர்களை ஏவி இலங்கை அரசு திலீபன் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துமாயின்** தமிழர்கள் மீதான சிங்கள இனவெறி மனப்பான்மை என்றைக்கும் மாறாது என்பதற்கு இக்கொடும் நிகழ்வு மற்றுமொரு சான்றாகும்.

இலங்கை இனவாத அரசின் இராணுவ முகாம் எதிரில் சிங்கள காவல்துறையினர் முன்னிலையிலேயே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீது நடத்தப்பட்டுள்ள இத்தாக்குதல், **சனநாயக முறையில் தமிழர்கள் ஒருபோதும் உரிமையைப் பெற்றுவிட முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.**

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அற்ப அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் பெற்று வாழ்ந்திட முடியும் என்ற வரலாற்று பொய்யினை பன்னாட்டு அரங்கில் மீண்டும் மீண்டும் முன் வைக்கும் **இந்திய ஒன்றிய அரசு இப்போதாவது இனவாத இலங்கை அரசைக் கண்டிக்க வாய் திறக்குமா?**

1

இராவணன் குடில், கதவு எண்.8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை – 600 116.
மின்னஞ்சல்: naamtamizhar@gmail.com / தொலைபேசி: +91 44 4380 4084


நாம் தமிழர் கட்சி
பதிவு எண்: 56/48/2013

தமிழ் மக்களின் சனநாயக பிரதிகளின் மீதான வன்முறை தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறும் நிலையில் **இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு அதனை அமைதியாக வேடிக்கைப் பார்ப்பது ஏன்? இதுதான் இந்தியா தமிழர்களுக்கான உரிமையைப் பெற்றுத்தரும் முறையா?**


தமிழ்நாட்டினை ஆளும் திமுக அரசு வழக்கம்போல் கடந்து செல்லாமல் உடனடியாக, **ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய ஒன்றிய அரசினை வலியுறுத்த வேண்டுமென** நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்

2

தமிழ் நாட்டினை ஆளும் திமுக அரசு வழக்கம்போல் கடந்து செல்லாமல் உடனடியாக, ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து இந்திய ஒன்றிய அரசினை வலியுறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

செந்தமிழன் சீமான் - நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங் கிணைப்பாளர்



# மழைநீரை உறிஞ்சும் ‘ஸ்பாஞ்ச் பார்க்’ சென்னை மாநகர பூங்காக்களுக்கு புதிய மகுடம்!

செப்டம்பர் 20, 2023

சென்னை பூங்காக்களில் அமைக்கப்பட்டு வரும் ‘ஸ்பாஞ்ச் பார்க்’ மழைக் காலங்களில் பெரிதும் உதவியாக இருக்கும் என பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். பெரும்பாலான மக்களுக்கு பொழுதுபோக்குக்கான இடமாகவும், மகளிர், முதியோர் உடற்பயிற்சி செய்வதற்கு ஏதுவான இடமாகவும் பூங்காக்கள் இருந்து வருகின்றன. மக்கள் வாழ்வியலில் ஒரு அங்கமாக பூங்காக்கள் மாறிவிட்டன.



இவ்வாறான பூங்காக்கள் சென்னையில் சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்ததாரர்கள் மூலமாகவும், நேரடியாக மாநகராட்சி மூலமாகவும், தத்தெடுக்கும் முறைகள் மூலமாகவும் சுமார் 835 பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த பூங்காக்களில் நடைபயிற்சிக்காக நடைபாதை வசதி, உடற்பயிற்சி உபகரணங்கள, குழந்தைகளுக்கு விளையாடு மிடம், யோகா பயிற்சி மேடை, மாலை வேளைகளில் அழகூட்டும் வண்ணமயமான செயற்கை நீரூற்றுகள், ஓய்வெடுக்கும் இருக்கைகள், ஒப்பனை அறைகள், புல்வெளி தரைகள், மரம், செடிகளுடன் கூடிய இயற்கை எழில்மிகுந்த சூழல்என பல்வேறு வசதிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் சென்னையை உயர்தர நகரமாக உயர்த்தும் நோக்கத்துடன் பூங்காக்களில் தற்போது ‘ஸ்பாஞ்ச் பார்க்’ எனப்படும் மழைநீர் சேகரிப்பு தொட்டியுடன் கூடிய குட்டைகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. பஞ்சு எப்படி தண்ணீரை உறிஞ்சுமோ, அதேபோல இந்த ஸ்பாஞ்ச் பார்க்குகள் மழைநீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை.

இதனால் மழைக்காலங்களில் பூங்காக்களிலும், பூங்காவை ஒட்டியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவது பெருமளவு குறையும் என்றும், உயரம் குறைவான பகுதிகளில் வெள்ளநீர் விரைவாக வடியவும் இந்த ஸ்பாஞ்ச் பார்க்குகள் உதவும் என மழைநீர் சேகரிப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் பல நாடுகளில் இதுபோன்ற ஸ்பாஞ்ச் பார்க்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை பூங்கா அமைந்திருக்கும் இடம், சாலைகள் அமைப்பு, மண்ணின் தன்மைபோன்றவற்றை ஆராய்ந்து அதற்கேற்ப அமைக்கப்படுகின்றன. கட்டிடங்கள் நிறைந்த நகர்ப்புறங்களில் பெய்யும் மழை நீரை தேங்க விடாமல் சேகரித்து, சுத்திகரிக்கும் தன்மை கொண்ட ஸ்பாஞ்ச் பார்க்குகள், குட்டை போன்ற அமைப்பையும், அகழியையும் கொண்டிருக்கும். அகழிகள் சாலையில் இருந்து நீரை எடுத்து சென்று, மழைநீர் வடிகால் வழியாக தண்ணீரை குட்டைக்கு



கொண்டு சேர்க்கும்.

இந்த குட்டையை சுற்றி பாதுகாப்பு வேலியுடன் கற்சுவர் அமைக்கப்பட்டிருக்கும். மழைநீர் சேமிப்புக்கான கட்டமைப்பும் இதில் இடம்பெறுவதால், குட்டையை சுற்றி ஈரப்பதத்துடன் இருக்கும். அதன்மூலம் குட்டையை சுற்றி மரங்களை வளர்க்க ஏதுவாகவும் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஸ்பாஞ்ச் பார்க்குகளின் பயன்பாடு குறித்து சென்னை மாநகராட்சி அதிகாரி கூறியதாவது: சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களில் புதிதாக ‘ஸ்பாஞ்ச் பார்க்’ என்ற மழைநீர்



சேமிப்பு தொட்டியுடன் கூடிய குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை ரூ.7.67 கோடி மதிப்பீட்டில் 57 இடங்களில் இந்த ஸ்பாஞ்ச் பார்க்குகள் அமைக்கப்பட்டுள்ளன.அந்த வகையில் சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்கா, வேப்பேரி மைலேடீஸ் பூங்கா, ஜெர்மையா பூங்கா, கொளத்தூர் வி.வி.நகர் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, கொரட்டூர் பெரியார் நகர் பூங்கா, சூளைமேடு கில் நகர் பூங்கா, நந்தனம் டர்ன்ஸ் புல் பூங்கா, மாதம்பாக்கம் பிருந்தாவன் நகர் பூங்கா, மணப்பாக்கம் பெல் நகர் பூங்கா, திருவான்மியூர் திருவள்ளுவர் நகர் பூங்கா, தலைமை செயலக காலனியில் உள்ள சிறுவர் பூங்கா, தரமணி பாரதி நகர் பூங்காக்களில் இந்த ஸ்பாஞ்ச் பார்க்குகள் நிறுவப்பட்டுள்ளன.

இதுதவிர மணலி புதுநகர் பகுதிகளில் அமைந்துள்ள 7 பூங்

# “உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்குகளுக்கு அரசு மரியாதை வழங்குவது பாராட்டத்தக்கது”

## பாமக தலைபர் அன்புமணி தாமதாஸ்

ஆகத்து 20, 2023

“உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்குகளுக்கு அரசு மரியாதை வழங்குவது பாராட்டத்தக்கது” என தமிழக அரசின் அறிவிப்புக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “தமிழ்நாட்டில் விபத்துகளில் சிக்கி அல்லது உடல்நலம் பாதிக்கப்பட்டு, மூளைச்சாவடைந்த நிலையில், உயிரிழப்பதற்கு முன் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதிச்சடங்குகள் அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். இது பாராட்டப்பட வேண்டிய மிகச் சிறப்பான நடவடிக்கை ஆகும். தன் உறுப்புகளை கொடையாக வழங்கி, பல உயிர்களைக் காக்கும் ஈகியர்களுக்கு இதை விட சிறப்பான மரியாதையையும், அங்கீகாரத்தையும் அளிக்க முடியாது.

சென்னை அருகே விபத்தில் சிக்கி மூளைச்சாவடைந்த மாணவர் ஹிதேந்திரனின் உடல் உறுப்புகளை, மருத்துவர்களான



அவரது பெற்றோர்கள் கொடையாக வழங்கியதன் காரணமாகவே உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு இந்தியாவில் ஏற்பட்டது. அப்போது மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த நான், ஹிதேந்திரனின் பெற்றோரை பாராட்டியதுடன், தேசிய உடல் உறுப்பு தானத் திட்டத்தையும் தொடங்கி வைத்தேன். அதன் பயனாக உடல் உறுப்பு தானம் என்பது இப்போது ஒரு கலாச்சாரமாக மாறியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்நாட்டில் மூளைச்சாவடைந்தவர்களின் உடல் உறுப்பை தானமாக பெறுவதில் பல குறைகள் இருப்பதாக இப்போதும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. அந்த குறைகள் அனைத்தும் களையப்பட வேண்டும் அனைத்து உடல் உறுப்பு தானங்களும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் ஏழைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவம் பெறுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் கடந்து உடல் உறுப்பு தானம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

உடல் உறுப்புக் கொடை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 13-ஆம் நாள் உலக உறுப்புக் கொடை நாளாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், தமிழ்நாட்டில் ஹிதேந்திரனின் உடல் உறுப்புகள் கொடையாக வழங்கப்பட்ட செப்டம்பர் 23-ஆம் நாளை தமிழ்நாடு உடல் உறுப்புக் கொடை நாளாக அறிவிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்” என்று அவர் கூறியுள்ளார்.

# சிறீலங்கா கடற்படையின் கல்வீச்சுக்கு இலக்காகி தமிழக மீனவர் காயம்!

செப்டம்பர் 27, 2023

சிறீலங்கா கடற்படையினர் இராமேஸ்வர மீனவர்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மீன் பிடிப்பதற்கு அனுமதிச் சீட்டு பெற்று சுமார் 50-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு ரோந்து வந்த சிறீலங்கா கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இராமேஸ்வரத்தை சேர்ந்த ஒரு விசைப்படகு மீது கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பில் மத்திய, மாநில உளவு பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.



# தமிழினப் படுகொலை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் சிறீலங்காவை நிறுத்தி தண்டிக்க வேண்டும்!

## பசுமைத்தாயகம் அமைப்பு, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி இராமதாஸ்

செப்டம்பர் 28, 2023






தமிழினப் படுகொலை: பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தி தண்டிக்க வேண்டும் என பாமகவின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்புமணி இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 54-ஆவது அமர்வில் பசுமைத்தாயகம் அமைப்பின் சார்பில்உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் கடந்த பல பத்தாண்டுகளாகவே இனவாதம் பாகுபாடு மற்றும் வேறு பல வடிவங்களிலான சகிப்புத்தன்மையற்ற செயல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலர் தொடர்ந்து ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசால் நிகழ்த்தப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான 21-ஆம் நூற்றாண்டின் முதலாவது அட்டூழியம் மற்றும் குற்றங்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அழைப்பை செயல்படுத்த அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புடைமைத் திட்டத்தின் திரட்டப்பட்டுள்ள சாட்சியங்களைக் கொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் அதிலிருந்து எந்த தண்டனையும் இல்லாமல் இலங்கை அரசு தப்பித்து வரும் போக்கிற்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் உறுப்பு நாடுகள் முடிவு கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை அரசின் மீது பல்வேறு வகையான தடைகளை விதித்தல் ஒவ்வொரு நாடும் அதன் சொந்த நீதிமன்றங்களில் சிவில் குற்றவியல் வழக்குகளை தொடருதல் உலகில் இப்போது செயல்பாட்டில் உள்ள பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றங்களுக்கு போர்க்குற்றம் குறித்த வழக்குகளை மாற்றுதல் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி விசாரிக்கும் வகையில் பன்னாட்டு குற்றவியல் நீதி வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் இதை சாதிக்க வேண்டும் என்று ஐநா. மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டி பரிந்துரை வழங்குவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்ன் பொறிமுறைக்கு உறுப்பு நாடுகள் கீழ்க்கண்ட வகைகளில் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை திரட்டப்பட்ட ஆதாரங்களைப் பயன்படுத்தி சாத்தியமாகக் கூடிய அனைத்து சட்டத் தளங்களிலும் வழக்குகளை வலிமையாக்குவதன் மூலம் பொறுப்புடைமைத் திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள வலிமையான குழுவை அதே நிலையில் பராமரித்தல் மற்றும் வலுப்படுத்துதல்.

இதுவரை மூடி மறைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தமிழினப்படுகொலை மற்றும் 2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலங்கைக்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள அரசின் திட்டமிட்ட பரவலான குற்றங்கள் உள்ளிட்ட அனைத்துக் குற்றங்களுக்கும் பொறிமுறை மூலம் ஆதாரங்கள் திரட்டப்படுவதை உறுதி செய்தல்.

மூன்றாவதாக இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனவெறியை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உறுப்பு நாடுகளை கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையில் காலம் காலமாக தமிழர்கள் வாழ்ந்து வரும் பகுதிகளில் சிங்களர்களைக் குடியேற்றுவதன் மூலமாகவும் இலங்கை அரசின் உதவியுடன் இந்து கோயில்கள் சிதைக்கப்படுவதன் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் தொகை மாற்றத்தை தடுத்து நிறுத்துதல்.

ஐக்கிய நாடுகள் அவையின் மூலமாக இலங்கை அரசி பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் (ICC), பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றம் மற்றும் பிற பன்னாட்டு பொறிமுறை அமைப்புகளில் கொண்டு சென்று நிறுத்தி தண்டனை பெற்றுத் தருதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இக்கூட்டத்தொடரில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐநா மனித உரிமை ஆணையரின் அறிக்கை சமர்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# கன்னட இன வெறியர்கள் தமிழ்நாடு முதலமைச்சரை அவமதிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

## செந்தமிழன் சீமான்

செப்டம்பர் 26, 2023

தமிழ்நாட்டுக்கு உரிமையான காவிரி நதி நீரை உரிய அளவில் தர மறுத்து வரும் கர்நாடக அரசு நீதிமன்ற உத்தரவுபடி திறந்துவிடும் சொற்ப நீரையும் திறக்கக் கூடாது என கன்னட அமைப்புகள் போராடி வருவது சிறிதும் மனிதத்தன்மையற்ற கொடுஞ்செயலாகும். போராட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு இறுதிச் சடங்குகள் செய்து அவமதிப்பது வன்மை யான கண்டனத்துக்குரியது.

அரை நூற்றாண்டு காவிரி உரிமை சட்டப்போராட்டத்தில், வரலாறு நெடுகிலும் தமிழ்நாடு காவிரி நதியில் தமக்குள்ள நீர் உரிமையை இழந்தே வந்துள்ளது. கீழ்ப்படுகை நாடுகளுக்கான பங்கு உலகெங்கும் குறைக்கப்பட்டதே இல்லை. ஆனால் சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டின் பங்கு படிப்படியாகச் சட்டத்தின் பெயராலேயே குறைக்கப்பட்டது. இத்தனை துரோகங்களுக்குப் பிறகும், இறுதித் தீர்ப்பு அடிப்படையில் வழங்கப்பட்ட குறைந்தபட்ச காவிரி நீரைக்கூட சட்டப்படி அமைக்கப்பட்ட மேலாண்மை ஆணையம் மூலம் கர்நாடகத்திடம் கெஞ்சிக் கேட்டும் பெறமுடியவில்லை என்பதுதான் வரலாற்றுப் பெருந்துயரம்.

உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையே செயல்படுத்த முடியவில்லை என்றால் இதுதான் இந்தியாவின் ஒருமைப்பாடா? தன்னிச்சை அதிகாரம் பெற்ற காவிரி மேலாண்மை ஆணையத்தைக்கூட முறையாகச் சட்டப்படி இயங்கச் செய்து நீரினை பெற்றுத்தர முடியவில்லை என்றால் ஒன்றிய அரசு என்ற ஒன்று இந்த நாட்டிற்கு எதற்கு? இதுதான் இந்தியாவின் கூட்டாட்சி முறையா? தமிழர்கள் இந்த நாட்டின் குடி மக்களா இல்லையா? ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உணவு, ஒரே தேர்தல், ஒரே சட்டம் என்று ஒற்றைமயமாக்கல் பேசும் பாஜக, ஒரே நாட்டிற்குள் இருக்கும் கர்நாடகத்திடம் காவிரி நீரைப் பெற்றுத் தராதது ஏன்? தேசிய ஒருமைப்பாடு பேசும் காங்கிரசு கட்சி பெற்றுத்தருமா? கர்நாடவில் காங்கிரசு அரசு அமையப் பாடுபட்ட திமுக, சித்தரமையா அரசிடம் பேசி காவிரி நீரைப் பெற்றுத் தருமா?

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட தேர்தல் அறிக்கையிலேயே 9000 கோடி ரூபாய் ஒதுக்குவதாகக் காங்கிரசு கட்சி அறிவித்ததை அறிந்திருந்தும், திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் காங்கிரசு கட்சிக்கு ஆதரவாகப் பரப்புரை செய்து தமிழ்நாட்டு விவசாயிகளுக்குப் பச்சைத்துரோகம் புரிந்தன. அதற்கான எதிர்விளைவை இன்றைக்கு திமுக அரசு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடே அனுபவிக்கிறது. அதன் உச்சமாக, கன்னட இனவெறியர்கள் கர்நாடாகவில் வாழும் தமிழர்களின் கடைகளை காலி செய்யுமாறும், கர்நாடகாவை விட்டு வெளியேறுமாறும் தமிழர்களை மிரட்டுவதும், தமிழ்நாடு முதலமைச்சரை அவமதிப்பதையும் கர்நாடகத்தை ஆளும் காங்கிரசு அரசும், இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசும் வேடிக்கைப் பார்ப்பது வெட்கக்கேடானது.

கர்நாடக அமைப்புகள் குறைந்தபட்ச மனித மாண்புடன் நடந்து கொள்ள வேண்டும். அறவழியில், அமைதியான முறையில் தங்களது எதிர்ப்புணர்வை தெரிவிக்க அனைவருக்கும் முழு உரிமையும் உண்டு. ஆயிரம் கருத்து முரண்கள், அரசியல் விமர்சனங்கள் இருந்தாலும், சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர், எட்டு கோடி தமிழ் மக்களின் அரசப் பிரதிநிதியாவார். எனவே, தமிழ்நாடு



அரசையும், முதலமைச்சரையும் கன்னட அமைப்புகள் அவமதிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பதிலுக்கு கருநாடக முதலமைச்சரை அவமதிக்க ஒரு நொடி ஆகாது. எனினும் தமிழரின் மாண்பு அத்தகைய இழிசெயலில் ஈடுபட அனுமதிக்காது.

ஆகவே, இனியும் தமிழர்களை அச்சுறுத்தி, தமிழ்நாடு அரசினையும், முதலமைச்சரையும் அவமதிக்கும் கன்னட இன வெறியர்களின் செயலை தடுத்து நிறுத்துவதோடு, உச்சநீதி மன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய காவிரி நதிநீரை உடனடியாக வழங்க வேண்டுமெனவும் கர்நாடக அரசையும், இந்திய ஒன்றிய அரசையும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

# உலக செய்திகள்

## அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் சர்வதேச விசாரணைக்கான சாத்தியம் குறித்து ஆராய்கிறோம்!

செப்டம்பர் 16, 2023

உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து தாம் ஆராய்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றார்.

அதன்படி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரை வொஷிங்டனில் தங்கியிருந்த அவர் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக், அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகள், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார்.

குறிப்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது, அண்மையில் சனல்-4 செய்திச்சேவையினால் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆவணப்படம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த ஆவணப்படத்தின் பின்னணி மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மை, உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருப்பதனால் இதனை சர்வதேச குற்றமாகக் கருதி சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சனல்-4 வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ள ஹன்ஸீர் அஸாத் மௌலானா, இதுபற்றி ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்கனவே சாட்சியமளித்துள்ள நிலையில் அதனைப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.




இதுபற்றிக் கருத்துவெளியிட்ட பெத் வான் ஸ்காக், உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ்விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் உண்டு எனவும், இதுகுறித்து தாம் ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

## திருகோணமலையில் சிங்கள அரச காடையர்களின் தாக்குதலைக் கண்டித்து பிரித்தானியாவில் தமிழ் மக்கள் போராட்டம்!

செப்டம்பர் 20, 2023

பிரித்தானியாவில் வெளி விவகார அமைச்சுச் செயலகத்திற்கு முன்பாகச் சிங்கள இனவழிப்பு அரசின் கொடும் செயலைக் கண்டித்தும் அதனைப் பிரித்தானிய அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் நோக்கிலும் பிரித்தானியத் தமிழர்களால் போராட்டம் நடாத்தப்பட்டது. கொட்டும் மழையில் போராட்டம் நிலைகுலையுமோ என்று இருந்த வேளை எமது மக்கள் அணிதிரண்டு நின்ற போராட்டக் களமானது,

தமிழ்த் தேசிய உணர்வை எந்த சக்திகளாலும் அடக்கமுடியாது என்பதை மீண்டும் எடுத்தியம்பியது.

இன்றைய போராட்டமானது பிரித்தானிய அரசிற்கும் உலகிற்கும் தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வில், தமிழ் மக்கள் என்றும் உறுதியாகப் பயணிப்பார்கள் என்ற செய்தியை அழுத்தமாகச் சொல்லியுள்ளது.









### முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# பழிக்குப் பழி நடவடிக்கையாக கனேடிய தூதரை வெளியேற்றிய இந்தியா!

செப்டம்பர் 20, 2023

கனடா, இந்தியாவுக்கிடையிலான மோதல் உச்சத்தை எட்டியுள்ளது. இரு நாடுகளும் ஒருவர் மீது மற்றவர் குற்றம் சாட்ட, இப்போது, இரு நாடுகளின் தூதர்களும் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ள விடயம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

G 20 உச்சி மாநாட்டுக்காக இந்தியாவுக்குச் சென்ற கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கனடாவில் காலிஸ்தான் அமைப்பினர் இந்திய தூதரக அதிகாரிகளை அச்சுறுத்துதல், தூதரக அதிகாரிகளுக்கெதிரான வன்முறை முதலான விடயங்கள் குறித்துப் பேச, கனடா பிரதமர் அவமதிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், நாடு திரும்பிய ட்ரூடோ, கனடாவில் கொல்லப்பட்ட சீக்கியர் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலையில் இந்திய அரசாங்கத்தின் பங்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படையாக குற்றம் சாட்டினார்.

அதைத்தொடர்ந்து இந்திய தூதரக அதிகாரி ஒருவரை, கனடாவிலிருந்து வெளியேற கனடா உத்தரவிட்டது. கனடாவில் இந்திய உளவுத்துறை அமைப்பான Research and Analysis Wing (RAW)வின் தலைவரான Pavan Kumar Rai என்பவரே அந்த தூதரக அதிகாரி என கனடாவின் வெளியுறவு அமைச்சரான Mélanie Joly அலுவலகம் தெரிவித்துள்ளது.

கனடா இந்திய தூதரக அதிகாரியை வெளியேற்றியதற்கு பதிலடியாக, கனடா தூதரக அதிகாரி ஒருவரை இந்தியா வெளியேற்றியுள்ளது.



கனடாவின் மூத்த தூதரக அதிகாரியான, கனேடிய உளவுத்துறை ஏஜன்சியின் தலைவரான Olivier Sylvestere என்பவரே இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

# பிரேசில் அமேசான் பகுதியில் 10 ஆண்டில் இரண்டாவது முறையாக வரட்சி!

செப்டம்பர் 21, 2023

பிரேசிலின் அமேசான் பகுதிகளில் நதியோரம் வசிப்பவர்களுக்கு வரட்சி காரணமாக தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

அமேசான் காடுகளின் வழியாக நெடுந்தூரம் ஓடும் ஆறுகளில் கடந்த 10 ஆண்டில் இரண்டாவது முறையாக வறட்சி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோலிமோஸ் பிரமாண்ட நதி வரண்டு கிடப்பதால் மக்கள் நடந்து செல்கின்றனர்.

உள்ளூரில் உள்ள பள்ளிகளுக்கு ஆறுகளை கடந்து சென்ற ஆசிரியர்கள் தற்போது மலைப்பாங்கான பகுதிகள் வழியாக தங்களது பணிகளுக்கு செல்கின்றனர்.



# சிறீலங்காவில் நீதியும் பொறுப்புகூறலும் இல்லை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கவலை!

செப்டம்பர் 22, 2023

சர்வதேச மனித உரிமை உரிமை சட்டங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமைக்கு இலங்கையை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் பொறுப்பபுக்கூறச்செய்யவேண்டும் என வலியுறுத்தும் கடிதமொன்றை அமெரிக்க காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனிபிளிங்கெனிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த கடிதத்தை அனுப்பிவைத்துள்ளனர்.

இலங்கையில் சித்திரவதை உட்பட சர்வதேச குற்றங்கள் என கருதப்படக்கூடிய குற்றங்கள் உட்பட சர்வதேச சட்டம சர்வதேச மனித உரிமை சட்டம் ஆகியவை மீறப்பட்டமை தொடர்பில் இலங்கையில் போதிய நீதியும் பொறுப்புக்கூறலும் இல்லாதமை குறித்து இந்த கடிதத்தை எழுவதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை அனுபவிக்கின்றனர் இது அந்த நாடு எதிர்கொள்ளும் அரசியல் சமூக நெருக்கடிக்கு காரணம் - இது மனித உரிமைகளை ஜனநாயக கொள்கைகளை பின்பற்றும் அமெரிக்காவின் கொள்கைகளிற்கு முரணாணது இதனை நிறுத்தவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# "பாகிஸ்தானின் பொருளாதார மாடல் தோல்வி அடைந்துவிட்டது" உலக வங்கி அதிர்ச்சி தகவல்

செப்டம்பர் 23, 2023

பாகிஸ்தானின் பொருளாதார மாடல் தோல்வி அடைந்துவிட்டதாகவும், கடந்த ஓராண்டில் மட்டும் 1.25 கோடி மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே சென்றுவிட்டதாகவும் உலக வங்கி அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.



இது தொடர்பாக பாகிஸ்தானுக்கான உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் டோபியாஸ் ஹக் கூறியது:

"கடந்த ஒரு நிதி ஆண்டில், பாகிஸ்தானில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. 34.2 சதவீதமாக இருந்த வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை தற்போது 39.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. புதிதாக 1.25 கோடி பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழே வந்துள்ளனர். இதன் மூலம் தற்போது 9.5 கோடி மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பொருளாதார மாடல், வறுமையைக் குறைக்கவில்லை. மாறாக, பாகிஸ்தானின் பொருளாதாரத்திற்கு இணையான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளைவிட மக்களின் வாழ்க்கைத் தரம் சரிந்துவிட்டது.

பொருளாதாரப் பாதுகாப்புக்கு பாகிஸ்தான் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் துறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். வீண் செலவுகள் நிறுத்தப்பட வேண்டும். பாகிஸ்தானில் மனித வளர்ச்சி குறைந்துள்ளது. நிலையான நிதி நிலை இல்லை. தனியார் துறை அதிகமாக கட்டுப்படுத்தப் படுகிறது.




பாகிஸ்தானில் புதிதாக வரக் கூடிய அரசு விவசாயம் மற்றும் எரிசக்தித் துறையில் சீர்திருத்தத்தை மேற்கொண்டாக வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 5% வரியை உயர்த்த வேண்டும் 2.7% செலவைக் குறைக்க வேண்டும். பாகிஸ்தானின் பொருளாதாரம் இன்று மிகவும் கவலை தரக்கூடியதாக இருக்கிறது. இதனால், பொருளாதாரத்தோடு மனித வளர்ச்சியும் கவலை தரக்கூடியதாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “பெரியதொரு வல்லரசை எதிர்த்து நின்று போராடும் ஆன்மீக திடத்தையும், அசையாத நம்பிக்கையையும் எமக்குப் பெற்றுக் கொடுத்தது இந்தப் பன்னிரண்டு மாவீரர்களின் அற்புதமான தியாகமாகும்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது சுதந்திரப்போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினம். தமிழீழத் தேசம் என்றுமில்லாதவாறு ஒரு பேரிழப்பைச் சந்தித்தது. அன்று எமது விடுதலை இயக்கத்தின் வீரத்தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரர்களை இழந்து நாம் இரத்தக் கண்ணீர் வடித்தோம்.

இவர்களது இழப்பால் தமிழீழத் தேசமே சோகத்தில் மூழ்கியது. ஆயினும் இவர்களது மரணம் எமது மனத்தைப் பீடித்திருந்த மாயைகளைச் சாகடித்தது. போலி நம்பிக்கைகளைக்கொன்றது. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த விரோத சக்திகள் யார் என்ற உண்மையையும் எமக்கு உணர்த்திக் காட்டியது. எனவே இந்தப் பேரிழப்பு என்றுமில்லாதபடி ஒரு புதிய விழிப்புணர்வையும், சுதந்திர வேட்கையையும் எமக்குத் தந்தது. நாம் எந்த அந்நிய சக்தியிலும் தங்கியிருக்கக் கூடாது, எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்ற அபாரமான சுயநம்பிக்கையை இவர்களது சாவு எமக்குக் கொடுத்தது. இந்த வகையில் இந்த மாவீரர்களின் உயிர்த்தியாகம் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரியதொரு திருப்புமுனையாக அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும். இந்த மாவீரர்களின் மரணத்தை அடுத்து இந்திய இராணுவம் எமது இயக்கம் மீது போர் தொடுத்தது. உலகத்தின் மிகப்பெரிய இராணுவம் ஒன்றை நாம் எதிர்த்துநின்று போராடினோம். பெரியதொரு வல்லரசை எதிர்த்து நின்று போராடும் அளவிற்கு ஆன்மீக திடத்தையும், அசையாத நம்பிக் கையையும் எமக்குப் பெற்றுக் கொடுத்தது இந்தப் பன்னிரண்டு மாவீரர்களின் அற்புதமான தியாகமாகும்.

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்கு இந்த இளம்புலிவீரர்கள் மரணமானார்கள். ஆனால் அவர்களது மரணம் சாதாரண சோக நிகழ்வு அல்ல. தமிழீழ தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியைத் தூண்டிவிட்ட ஒரு வரலாற்று நிகழ்வாகவே அமைந்தது.

இழப்புக்களும் அழிவுகளும் எமது விடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம்; சந்தித்து வருகிறோம். ஆனால் இந்த இழப்புக்களும், அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கிவிடமுடியாது.

இன்று நாம் எமது வரலாற்று எதிரியை யுத்த களத்தில் சந்தித்து நிற்கிறோம். எமது எதிரியானவன் தனது முழு பலத்தையும் பிரயோகித்து ஓர் இனக்கொலை யுத்தம் நடத்தி வருகிறான். எதிரியிடம் ஆயுதபலம் உண்டு, ஆட்பலமுண்டு, ஆதரவளிக்க நாடுகளுண்டு. நாம் தனித்து நின்று போராடு கிறோம். எமக்கு எந்த நாட்டின் உதவியுமில்லை. ஆனால் எமக்குள் ஒரேயோரு பலம் எமது ஆத்ம பலம் தான்…

ஆகாயத்திலிருந்து விழும் குண்டுகள் எமது கட்டடங்களை அழிக்கலாம்; கோவில்கள், பாடசாலைகளை அழிக்கலாம். ஆனால் எத்தகைய குண்டுவீச்சும் எமது மனோ பலத்தை அழித்துவிடமுடியாது.

இன்று எதிரி ஆட்டம் காண்கிறான். பல யுத்த அரங்குகளிலிருந்து பின்வாங்கி ஓடுகிறான். எமது போராளிகளின் உருக்குப்போன்ற உறுதியும், வீரமும், தியாகமும், இலட்சியப்பற்றும் எதிரியின் மனபலத்தை உடைத்து வருகிறது.

நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயகப் பூமியை, எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம், எமது மடிந்த வீரர்களின் கனவை நனவாக்க நாம் தொடர்ந்து போராடுவோம்.

குறிப்பு: தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரண்டு மாவீரர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து...




உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்

ல்ஷ்சுமி
பொற்சாலை

Inside of Majestic City Plaza

அழையுங்கள்
416 - 587 - 8000

G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School

* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
* Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268



HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL
* Furnance * Air Conditioner
* Tankless Water Heater * Heat Pump
* Duct Less * Airmax Velocity * Air Handlers
* Boilers * Fire Places * HRV * Attic Insulation
* Gas Line for BBQ, Stove & Dryer




WHY UPGRADE TO TANKLESS?

Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos

KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000

INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

Surrounding Area:
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

647-294-2996



# உயிர்த்தெழு திலீபா...

திலீபா...
தமிழினத்தின் அகராதியில்
தியாகத்திற்கு இணையான
தமிழ்ச் சொல் இல்லாதபோது
இணையில்லா சொல்லாய்,
பொருளாய்ப் பதிந்து.
தமிழினத்தின் இதயங்களைக்
கவர்ந்தவன் நீ.

திலீபா...
மானுடம் அன்றாடம் அஞ்சும்
மரணத்தையே தொட்டவன்;
இல்லை... இல்லை...
ஆரத் தழுவி,
முத்தமிட்டு மகிழ்ந்தவன் நீ.

திலீபா...
கைகளில் பூட்டப்பட்டிருக்கும்
விலங்கறுக்க எண்ணாமல்
கழுத்தில் விழும்
மாலைகளையே எண்ணி மகிழும்
தமிழினத் தலைமைச் சூழலில்
மரணத்தையே மாலையாய்
அணிந்து மகிழ்ந்தவன் நீ.

திலீபா...
சொட்டு நீர் அருந்தா
விரதமிருந்து
தமிழினத்தின் விடுதலைக்கு
நீர் பாய்ச்சியவன் நீ.

திலீபா...
விழியையும் செவியையும்
சேர்த்தடைத்த பசியைக் கூட
மரணத்திற்கு விருந்து சமைத்து
தமிழீழ விடுதலைக்குப்
பெரும் மருந்தானவன் நீ.

திலீபா...
கடந்த காலத்தின் உன்
சின்ன... சின்ன...
நனைவுகள் கூட
எங்களுள் பெரும் விருட்சமாய்
வளர்ந்து,
விழுதுகளும் விடுகின்றன.

திலீபா...
மண்ணுக்கு நீ
புதைக்கப்படவில்லை;
தமிழீழ விடுதலைக்காக
விதைக்கப்பட்டிருக்கிறாய்.

திலீபா...
நீ கையளித்துச் சென்ற
நம் தமிழீழ விடுதலையை
நோக்கி "தம்பி" யின்
புலிப்படை
முன்னேறிக்கொண்டு
திசையெங்கும்
வெற்றி முகம் கொள்கிறது.

திலீபா...
"தம்பி" யின் புறநானூற்று
வீரத்தை மூடிமறைக்க
புழுதிக் காற்றுக்கள்
சுழன்றடித்தாலும்,
தமிழ்ப்கை அழித்து
"தம்பி" புதிய புறநானூறாம்
"புலிநானூறு" சமைக்கிறான்.

திலீபா...
எங்கும் நீ மறையவில்லை
எங்களுள் புதிதாய் பிறந்து
உயிரில்... உணர்வில்...
ஒன்றாய்க் கலந்து
எங்களையே இயக்கும் மூலம் நீ.

திலீபா...
கத்தும் கடல்
பிரித்து வைத்த
தாய்த் தமிழகத்து இளைஞன் நான்.
உன் நினைவுகளை
அசைபோட்டு... அசைபோட்டு
கைபிசைந்து கையறு நிலையில்
கண்ணீர் வடிப்பதன்றி
வேறு வழி எதுவும்
எனக்குப் புலப்படவில்லை.

திலீபா...
காற்றில் கரைந்து
தமிழுலகம் முழுமையும்
நீக்கமற நிறைந்திருக்கும்
உன் கால்களைத் தேடி
என் முத்தங்களை
காணிக்கையாக்குகின்றேன்.

திலீபா...
மரணம் என்பது
வீரர்களுக்கில்லை.
அது கோழைகளின்
பொதுவுடமை.
உனக்கு எப்போதும்
மரணம் என்பதே இல்லை
தமிழீழத் தாயகத்தில்
விடுதலை வெற்றிக்களிப்பில்
மீண்டும் உயிர்த்தெழுவாய் நீ.

திலீபா... திலீபா...
...திலீபா... திலீபா...
உயிர்த்தெழுவாய் ந...
... உயிர்த்தெழுவாய் நீ...
உயிர்த்தெழுவாய் நீ...
திலீபா... திலீபா...

– நெடுஞ்செழியன், தமிழ்நாடு




# 2ம் லெப். மாலதி படையணி!






கைமாறிய கனவுகளோடு களங்காணும் 2ம் லெப். மாலதி படையணி.

வல்வெட்டித்துறை, தீருவில் வெளியில் பன்னிரு வேங்கைகளின் வித்துடல்களும், எரியக்காத்திருக்கும் சிதையின் மேல் அடுக்கப்பட்டன.

"இந்தியா எமது மக்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் கீழே வைத்த ஆயுதங்களை இப்போது மறுபடி மேலே உயர்த்துகிறோம்" என்று ஒரு குரல் ஓங்கி ஒலித்தது.

சுடுகலன்கள் மேலே உயர்த்தப்பட்டன.

வானத்தைக் கிழித்தபடி மரியாதை வேட்டுக்கள் செந்நிறமாகப் பயணித்தன.

இந்திய – ஈழப்போர் தொடங்கிவிட்டது.

நாவற்குழிப் படைத்தளத்திலிருக்கும் இந்திய இராணுவம் முன்னேறினால் மோதவென கோப்பாயில் பதினைந்து பேர் கொண்ட பெண்களணி தயாரானது. கைகளில் இரண்டொரு நாட்களின் முன் அவசர அவசரமாக வழங்கப்பட்ட AK 47, ஒரேயொரு ரவைக்கூட்டுடன் அதுகூட எல்லோரிடமுமில்லை. ஏனையவர்கள் ரவைகளைத் துணி முடிச்சில் கட்டியபடி, குண்டுகளுடன்.

2ஆம் லெப் மாலதி, 2ஆம் லெப் கஸ்தூரி, வீரவேங்கைகள் விஜி, ஜெனா, தயா, ரஞ்சி தம்மிடம் உள்ளவற்றுடன் தயார் நிலையில். முன்னேறிவந்த இந்தியப் படைகளுக்கும், இவர்களுக்கும் சண்டை ஆரம்பித்தது. கடும் சண்டை. ரவை முடிய முடிய நிரப்பி நிரப்பிச் சண்டை. பெரும் பலத்துடன் பெருந்தொகையில் வந்து நின்ற உலகின் அன்றைய நான்காம் வல்லரசுப் படைகளோடு நின்று சண்டையிட முடியாத கள நிலைமை எம்மவர்களைக் கோப்பாய் சந்திநோக்கி, சண்டையிட்டவாறு பின்னகர்த்தத் தொடங்கியது.

மாலதிக்குத் தொண்டையில் பெருங்காயம். நடக்க முடியவில்லை. இராணுவமோ நெருங்கிக்கொண்டிருந்தது. மாலதியை இழுத்துச் செல்ல விஜி முயற்சித்துக்கொண்டிருந்தார். முடியவில்லை. வல்லரசுப் படைகளுடனான போரில் தன்னால் இழப்பு வரக்கூடாது என்று முடிவெடுத்த மாலதி சயனைட்டை அருந்தினார்.

"என்னை விட்டிட்டு ஆயுதத்தைக் கொண்டுபோய் அண்ணையிட்டைக் குடு" என்றபடி தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரானார்.

கருவி கைமாறியது கனவுகள் கைமாறின.

**மாலதி,**<br>**தாய் நிலம் விடியும்**<br>**எனும் கனவோடு**<br>**மண்ணிலே நீ விழுந்தாய்.**

**உன் பெயர் சொல்லி**<br>**எம் படையணி தன்னை**<br>**அண்ணன் வளர்த்தெடுத்தான்.**

(நன்றி – கவிதை அம்புலி)

சூரியக் கதிர் - 01 எதிர் நடவடிக்கையின் முடிவில், விடுதலைப் புலிகள் மகளிர் படையணி, தன்னை 2ஆம் லெப். மாலதி படையணியாக உருமாற்றியிருந்தது.

சூரியக் கதிர் - 02 நடவடிக்கைக்கு சிங்களப் படைத்தலைமை தயாரானது. 2ஆம் லெப். மாலதி படையணி வடமராட்சியின் வாதரவத்தை, கப்புது, மண்டான், வல்வை வெளி, தொண்டமனாற்றுச்சந்திப் பகுதிகளில் நிலைகொண்டது.

சிங்களப் படையினரின் நடவடிக்கையில் தெரிந்த வேறுபாடு, அவர்களின் வரவு வாதரவத்தைப் பக்கமாக இருக்கலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தியது. எமது வேவு நடவடிக்கை தொடங்கியது.

வாதரவத்தையின் வெளிப்புறக் காப்பரண்களைக் கடந்து எம்மவர்கள் உள்நுழைய, இரவைப் பகலாக்கும் மின் விளக்குகள் ஒப்பவில்லை. கப்டன் கோபியின் அணி மறுபடி மறுபடி முயன்றது. காப்பரண்களுக்கு முன்னால் நாட்டப்பட்டுள்ள கம்பங்களில் சில மின்விளக்குகள் எமது புறமாகவும், சில படையினரைப் பார்த்தபடியும் கட்டப்பட்டிருந்தன. எமக்கு எதிர்த்திசையில் கட்டப்பட்ட மின் விளக்கு ஒளிரும்போது எம் திசையிலிருக்கும் கம்பம் சிறுகோடாக நிழலை விழுத்தும். அந்த நிழலைப் பயன்படுத்திக்கூட பகையரணை நெருங்க பலமுறை முயன்றும் …

படையினர் நடவடிக்கையைத் தொடங்கப்போகின்றனர் என்று உள்ளுணர்வு சொன்னது. இன்று நான்காவது நாள் எப்படியாவது போயாக வேண்டும்.

இப்போது முன்னிலவு. பின்னிருட்டு நள்ளிரவில் மின்பிறப்பாக்கி ஓய்வெடுக்கும் 10 - 15 நிமிட இடைவெளியைப் பயன்படுத்தி உள்நுழைந்து, நிலைமையை அவதானித்து திரும்பிவரும் முடிவை கோபி எடுத்தார்.

இது சரிவருமா, இல்லையா என்று யோசித்துக் கொண்டிருக்க நேரமுமில்லை. இதை விட்டால் படைத் தளத்தினுட் புக வேறு வழியுமில்லை.



1996 ஏப்பிரல் 02 கோபியின் அணி நகர்ந்தது. முன்னணி அவதானிப்பு நிலையை அடைந்தது. சற்று நிதானித்து, மேலும் முன்னகர்ந்து தடைக் கம்பியை நெருங்க முன்பே வழியில் இராணுவம் எதிர்ப்பட்டது.

முயற்சியைக் கைவிடமுடியாது. போகத்தான் வேண்டும். மெல்லப் பக்கவாட்டாக விலகி, மீண்டும் முன்னேற, மறுபடியும் இராணுவம் எதிர்ப்பட்டது. மீண்டும் பக்கவாட்டாக விலகி, முன்னோக்கி நகர முயல, மின்பிறப்பாக்கி ஓய்ந்தது.

இனித் தாமதிக்க முடியாது. பத்து நிமிடங்களுள் உள்நுழைந்து வெளித்திரும்ப வேண்டும் ஓட்டத்தில் போய் முதலாவது தடைக்



கம்பியை உள்நுழைவதற்காக உயர்த்திப் பிடிக்க, ஒருவர் உள் நுழைய முயல, தடைக் கம்பியிலிருந்து ஐந்து மீற்றர் முன்னே இராணுவம் நிற்பதைக் கண்ட கோபி, சைகை காட்டி, நகர்வை நிறுத்தினார்.

அதற்குள் மின் விளக்குகள் உயிர் பெற்றன.

இனி ஒரு கணம் அங்கே நிற்பதும் தற்கொலைக்கு ஒப்பானது. இவர்கள் விலகத்தொடங்க சிறிலங்கா இராணுவம் சுடத் தொடங்க, இவர்களும் கைக்குண்டுகளை வீசியபடி சுட்டுச் சுட்டுப் பின்னகர, அந்த வெட்டை வெளிச்சண்டையில் கப்டன் கோபி 2ம் லெப்.மாலதி படையணியின் முதல் மாவீரராகி, இப்போது பத்தாண்டுகள்.

2ம் லெப்.மாலதியின் பெயரைச் சுமக்கும் படையணி, முதல் மாவீரர் கப்டன் கோபியைப் போலவே முடியாதென்று எதையும் விடாது, எங்கும் எப்போதும் முயன்றபடி.

உண்மை வெற்றி - 01 எதிர் நடவடிக்கையின் ஆரம்ப நாட்களிலேயே கொம்பனிக்குரிய வேவு அணியில் ஒருவராக லெப். தமிழ்ப்பிரியா பயிற்றுவிக்கப்பட்டார். நிதானமும் அமைதியுமான இயல்பைக்கொண்ட அவருக்கு வேவு மிகவும் பொருத்தமான பணிதான்.

தாக்குதலணிகளின் காப்பரண்களைக் கடந்து முன்புறம் போய் இரவெல்லாம் சிங்களப் படைக்கு மிக அருகேயும், பகலில் சற்றுப் பின்னே வந்து உயரமான மரங்களில் ஏறி நின்று படையினரைக் கண்காணிப்பதுமான கடின வேவுப்பணியில் தமிழ்ப்பிரியா ஈடுபட்டார்.

உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரியில் நிலைகொண்டிருந்த சிங்களப் படையினரை 1996.09.26 அன்று நாம் உட்புகுந்து



தாக்கியழித்த நடவடிக்கையில் காயமடைந்த போராளிகளுக்கு வழிகாட்டிப் பின்னே நகர்த்திவிட்டு, மறுபடி முன்னேவந்து காயக்காரர்களைப் பின்னே கூட்டிப்போய் என்று, நடவடிக்கை முடியும் வரை இடைவிடாத நடைதான்.

மாபெரும் படை நகர்வொன்று சிங்களப் படைகளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. எப்படி, எப்போது எங்கே என்பது தெரியவில்லை. 2ம் லெப்.மாலதி படையணியின் கொம்பனி ஒன்று

உடங்காவில் நிலைகொண்டிருந்தது. பரந்துபட்ட நிலப் பரப்பைக் கண்காணிப்பில் வைத்திருக்கப் போதிய ஆளணியில்லாததால் 2ஆம் லெப் மாலதி படையணியின் வேவு அணிகள் சம்பளங்குளம், ஒதியமலை, உடங்கா, தண்ணீர் முறிப்புப் பகுதிகளில் உலாவிக்கொண்டிருந்தன.

உடங்காப் பகுதியில் இரு தடவைகள் சிறீலங்காப் படையினரின் வேவு அணிகளைச் சந்தித்து, எமது அணிகள் தாக்கியிருந்தன. இந்தா, அந்தா என்றிருந்தது சண்டை தொடங்கும் நாள்.

1997.05.13 அன்று தொடங்கியது "வெற்றி நிச்சயம்" என்று பெயர் சூட்டப்பட்ட, சிங்களத்தின் தோல்வி நடவடிக்கை. உடங்கா வெட்டையில் நின்ற 2ஆம் லெப். மாலதி படையணியின் வேவு அணியையே வெற்றி நிச்சயம் நடவடிக்கைப் படைகள் முதலில் சந்தித்தன.

வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கையின் முதல் மாவீரராக லெப்.தமிழ்ப்பிரியா வரலாற்றில் பொறிக்கப்பட்டார்.

"புளியங்குளச் சந்திப் பகுதியை வேறு படையணிகள் பாதுகாக்கும். சந்திக்கருகே இராணுவம் வந்து நிலைகொண்டு சண்டை பிடிக்குமானால், தளத்தைத் தக்கவைப்பது கடினம். நீண்டகாலம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் நீங்கள் அவர்களுக்கு வெளிப்புறமாகத் தடுப்பரண்களை அமைத்து நின்று, சண்டையிட்டு எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அதை நீங்கள் போய் செய்யுங்கள்"

என்றார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள். வீரர்களின் வாழ்வில் முடியாது என்று ஒன்று இருக்கின்றதா? புறப்பட்டது 2ஆம் லெப். மாலதி படையணி.

நெடுங்கேணியிலிருந்து புளியங்குளத்துக்குக் கால் நடையாகவே வந்து சேர்ந்தது.

தலைவர் சொன்னபடி தளத்துக்கு வெளிப்புறமாகத் தடுப்பரண்களை அமைத்தது. வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையின் இருபுறமும் சிறகுகள் வடிவில் விரிந்து நின்று, புளியங்குளத் தளத்துக்குக் காப்பு வழங்கியது. தனக்கு முன்னே படையணியின் வேவு அணியினரை உலாவவிட்டது.

**"புளியங்குளச் சந்திப் பகுதியை வேறு படையணிகள் பாதுகாக்கும். சந்திக்கருகே இராணுவம் வந்து நிலைகொண்டு சண்டைபிடிக்குமானால் தளத்தைத் தக்கவைப்பது கடினம். நீண்டகாலம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமானால் நீங்கள் அவர்களுக்கு வெளிப் புறமாகத் தடுப்பரண்களை அமைத்து நின்று சண்டையிட்டு எதிரிக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அதை நீங்கள் போய் செய்யுங்கள் என்றார்.**

**தமிழீழத் தேசியத் தலைவர்"**

1997.06.23 அன்று அதிகாலை பெருமெடுப்பில் ராங்கிகள் இரைய, குண்டுவீச்சு விமானங்கள் கூவ, எறிகணைகளை மழையாக வீசியபடி முன்னேறி வந்த படையினரோடு முதலில் மோதியது மேஜர் அரசியின் தலைமையிலான ஐந்து வேவுப் போராளிகளே.

பழைய காயங்கள், நோய் காரணமாக களமுனை மருத்துவ வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்களை முன்னரங்குக்கு நகர்த்தி, முன்னரங்கில் நின்றவர்கள் தம்மைத் தயார்ப்படுத்தும் வரை வேவு அணி சண்டையிட, எல்லோரும் தயாரானதும் அவர்கள் பின்னகர, முன்னரங்கப் போராளிகள் சண்டையிட்டனர்.

எறிகணைகளால் தூக்கி விசிறப்பட்டு மண்குவியல்களான காப்பரண்களைக் கைகளால் விறாண்டி விட்டுப் படுத்திருந்து அடித்தவர்களும், இயங்கு நிலைத்தடையேற்பட்ட கனரக ஆயுதங்களை சீர் செய்து, சீர் செய்து அடித்தவர்களும், காயங்களைக் கட்டிவிட்டுத் தொடர்ந்து நின்று சண்டையிட்டவர்களும் வெற்றியை எமக்கே உரித்தாக்கியிருந்தனர்.

காலை 5.00 மணியளவிலிருந்து மாலை 5.00 மணியளவு வரை தொடர்ந்த அந்தப் பெருஞ்சண்டையில் படையணி 2ம் லெப்.மாலதியின் பெயரையும் கப்டன் கோபியின் பெயரையும் நிலைநிறுத்தியிருந்தது.




தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உலுப்பிய இரு பெரும் சமர்களான இந்திய இராணுவப் போரையும், வெற்றி நிச்சயம் நடவடிக்கையையும் எதிர்கொண்டு, முதல் மாவீரர்களை ஈகம் செய்த நிமிர்வில், இனிவரும் சமர்களையும் வெற்றிகொள்ளும் துணிவில், களமெங்கும் காத்திருக்கின்றது படையணி.

"ஆயிரத்து நூற்று இருபத்தைந்து மாவீரர்களை மண்ணுக்கு ஈர்ந்து பெருமையோடு நிமிர்ந்துகொள்கின்றது படையணி"

நினைவுப்பகிர்வு:- மலைமகள்.
விடுதலைப்புலிகள் 129 இதழிலிருந்து


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


வேலை இழப்பா?
வருமான பிரச்சனையா?
வேலை தேடுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
வாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழிகாட்டும்
உங்கள் நண்பன்
நாதன் பாலசிங்கம்
416.513.1000


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by Mortgage Alliance
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
TD Canada Trust | Scotiabank | First National | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# பிரமந்தனாற்றுப் படுகொலை 02. அக்டோபர் 1985

02.10.1985 அன்று அதிகாலை வேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கவானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியராக சியாமா செட்டி விமானங்களாகும்.

இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாக வுள்ள காட்டுப்பகுதிக்குள் சிறீலங்கா இராணுவ அணிகள் உலங்கு வானூர்தி மூலமாகத் தரையிறக்கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்து கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச்சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடி வந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள்.

அந்தச்சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையநாள் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டுக்குள்ளால் ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்கவில்லை. முழுநாளும் பட்டினிதான். தாகம் எடுத்தபோது குளம் குடைட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம்.

மேற்படி நாளன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக்கடையிலிருந்த நகை, பணம். என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அவருக்குப் புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச் சென்றார்கள். பல வீடுகள், பொதுமக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன. அன்றையநாள் ஐந்து உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிங்களச் சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக் கிராமத்தினைச்சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர்.

**இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்கள்**

மேற்படி சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப் படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டி வைத்த சிங்களப் படைகள் போதையேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப் பட்டார்கள்.

**உடன் பிறந்த தம்பியைப் பறிகொடுத்த அக்காவின் துயரம்**

மேற்படி 02.10.1985 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கிய நாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப் பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

சம்பவநாள் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட் டைச் சுற்றி வளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்க வில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நான்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்றமுடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக இவதானித்தபடி இருந்தார். அன்றைய நாள் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள். அவரைப் பொதுமக்கள் மொசாட் என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்ட வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

**சிறிலங்காப் படையினர் செய்த கொடுமைகள்**

**மேற்குறித்த திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) தொடர்ந்து கூறுகையில்,**

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால் விட்டு விடுவதாகச் சொன்னர்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டு போனேன். சிறீலங்காப்படையினர் என்னை வழிமறித்த அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்கள். என்னால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்கவில்லை. அவர் புளியம்பொக்கணைக்குச்சென்றுவிட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாமமைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாயகள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வரவில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்து விட்டார்கள். இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக் காட்டுப் பக்கங்களில் அவரைத்தேடினேன். இச்சம்பவம் இடம்பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப்பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்த இடத்தியேயே எரித்த விட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களப் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மேலே எழும்பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

**இச்சம்பவத்தை நேரில் பார்த்த இன்னொரு பெண்ணின் சாட்சியம் "இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற நாள் அன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது 46) இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.**

"இப்படுகொலைத் நாள் அன்று ஐந்து உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும் வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக் கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள் தரையிறக்கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ்மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக் கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்துகொண்டு சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் இவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். இவர் இராணுவப்பயிற்சி பெற்றிருந்த ஒருவரென்பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்கா சிப்பாய்கள் அப்பன் என்பரையும், ஆனந்தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டிவைத்து அவர்களது நெற்றியில் சுட்டப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா விமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உறிரிழந்த அனைவரும் இருபதிற்கும முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

**மேலதிகத் தகவல்கள்**

பிரித்தானிய கே.எம்.எஸ் (கினிமின இராணுவப் பிரிவைச் சேர்ந்த Tim Smith என்பவர் சிறீலங்கா இராணுவத்திற்கு சிறீலங்காவில் தங்கியிருந்து கே. எம். எஸ் (கினிமினி சேவிஸ்) இராணுவ பிரிவின் சார்பாகப் பயிற்சி கொடுத்தார். பயிற்சி கொடுத்ததோடு, அவர்களோடு இணைந்து பல சந்தர்ப்பங்களில் விமானத்தாக்குதல்களுக்கு விமானியாகவும், Tim Smith கடமையாற்றியுள்ளார். இலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்குச் சென்ற இவர் சிறீலங்காவில் தனது பணிகள் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். "The Reluctant Meunary" (The Recollection of a British Ex Army Helicopter Pilot in the anti Terrorist War in Sri lanka) என்ற அந்த நூலில் அறுபத்தோராம் பக்கத்தில் புதுக்குடியிருப்பு புறச்சூழலில் (பிரமந்தனாறு) சிறீலங்காப் படைகளைத் தான் தரையிறக்கும் போது தனது அனுபவத்தினை எழுதியுள்ளார். இலங்கையின் தரைப்படையும், விமானப்படையும் கூட்டாகத் தரையிறக்கப்பட்ட படை நடவடிக்கைக்கு Flight Lieutant (முதலாவது லெப் றொகான் குணதிலகா தலைமை தாங்கியதாகவும், அவர் எவ்வேளையிலும் எத்தகைய முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறியதாகவும் (He is always undecided) குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த நூலில் சிறீலங்காப் படைகளைப் பற்றி விபரிக்கும் போது "சிறீலங்கா இராணுவம் ஒழுக்கம் கெட்ட இராணுவமாகவே இருந்தது என்றும் இவர்களைக் களத்தில் இறக்கிவிட்டால் அவர்கள் கொலைப்பொறி போல (Killing Machinery) செயல்படுவர்"என்றும் கூறியுள்ளார்.

**றொகான் குணத்திலக**

சிறீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஏயா மார்சல் ரி. குணதிலகாவின் மகன் தான் இந்த றொகான் குணதிலக (Flight Lieutant) ஆவார். இவர் தனது தந்தையாரின் செல்வாக்கால் விமானப் படையினுள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு இடைநிலை அதிகாரியானார். இவரே பிரமந்தனாற்றுப் படுகொலைக்குப் பொறுப்பாக அன்றைய நாள் இருந்தார்.

**02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. ஸ்லீபன்ராஜாஸ் சத்தியசீலன் (26)
2. நாகப்பன் சத்தியலிங்கம் (21)
3. கந்தசாமி தர்மசிங்கம் (23)
4. கிட்டிணர் சிவபாதசுந்தரம் (33)
5. கறுப்பையா தர்மலிங்கம் (23)
6. கறுப்பையா செல்வராசா (24)
7. பொன்னுத்துரை பாக்கியநாதன் (21)
8. சுப்பையா அருணாச்சலம் (29)
9. சின்னையா சவுந்தரராசன் (24)
10. வன்சநாதகே பியதிலகே காமினி (26)
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி (30)



குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# அடம்பன் படுகொலை 12.10.1986

திருமலை மூதூரில் 18.07.1986 அன்று அதிகாலை 3:00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் இங்கு நாற்பத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இதில் அனைவரும் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலை சம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ள விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி சிங்கள இராணுவ முகாமினால் பலசொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த வருகின்றனர்.

12.10.1986 அன்று அதிகாலை 4:00 மணிக்கு தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து பறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்ததைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களைச் சுட்டப் படுகொலை செய்ததுடன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5:00 மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11 மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன.

**கதிரன் சௌந்தரராஜன்**

“1986 ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீசுவரம் வந்து அதன் வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்று குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பசுமை என்பவரையும் சுட்டக் கொன்றார்கள். அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்தச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ் வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தென்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித் தாழ்வுப் பகுதியால் தள்ளாடி முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர் சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள். இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம்பவத்தின்போது எந்தவித வயது வேறுபாடின்றி ஆறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலிருக்கின்ற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்.”

**12.10.1986 அடம்பன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. யூலியன் யெஜசீலன் (22)
2. கிறிஸ்தோடு யோவான் (65)
3. ஐயம்பிள்ளை நாகமுத்து (84)
4. தங்கவேல் ராமன் (-)
5. மாமுண்டி செல்வராஸ் (14)
6. அந்தோனி செல்வராஸ் (63)
7. அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (28)
8. ஆரோக்கியம் சந்தான் (30)
9. ரோசாய்ஸ் பிலேந்திரன் (32)
10. சபாபதிப்பிள்ளை தங்கம்மா (70)
11. வஸ்தியான் சகாயநாதன் குரூஸ் (-)
12. வீரசிங்கம் மனோறஞ்சிதம் (24)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமை போல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற்தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.

இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத் தாக்கினர். பின்னர் இராசநாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டுதுண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பிவிட்டனர். இராசநாயகத்தின் படுகோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சான் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
2. ஜோசப் பிரான்சிஸ் (72)

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்**

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)

# புதுக்காட்டுச்சந்திப்படுகொலை 11.10.1987

கிளிநொச்சி மாவட்டத்தின் வட பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ் சாலையில் சோரன்பற்று புதுக்காட டச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தி யானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக் கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தி யைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந் துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சதந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்கு வரத்துக்காகப் பொதுமக்கள் அதிகள வில் கூடுகினற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக் கிழமை 3:30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங் கள் சகிதம் வந்த இந்தியப் படையினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங் களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங் குவதற்காகவும், பிரயாணத்திற் காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் போர் உயிரிழந்ததுடன், நான்கு பேர் படுகாயமடைந்தார்கள்.

**இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளை களை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.**

“வாகனங்களில் வந்த இந்திய அரச படையினர் திடீரென இறங்கி பஸ்தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்றவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினார்கள். அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்த மகனும் இளையமகளும் நின் றனர். அத்துடன ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீடகப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால் இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது.” என தன்னுடைய சோகக்கதையைக் கூறினார்.

**11.10.1987 அன்று புதுக்காட்டுச் சந்திப்படுகொலையில் கொல லப்பட்டோர் விபரம்**

1. கனகரத்தினம் (35)
2. குழந்தைவேலு செல்வ ராசா (22)
3. பொன்னையா நவரத் தினம் (34)
4. பொன்னையா சுப்ர மணியம் (40)
5. பேரம்பலம் மகேஸ்வரன் (10)
6. பேரம்பலம் கோகிலா தேவி (14)
7. வேலாயுதம் செந்தில் நாதன் (14)
8. சின்னத்தம்பி பசுபதிப் பிள்ளை (41)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. கணபதிப்பிள்ளை கேதீஸ் வரன் (14)
2. சுப்பிரமணியம் ஏகாம் பரம் (45)
3. சின்னக்குட்டி சிவரூபன் (16)
4. ஆறுமுகம் பாலசிங்கம் (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

# கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை 10.10.1987



கொக்குவிற் கிராமம் யாழ் மாவட் டத்தில் நல்லூர்ப் பிரதேச எல்லைக் குள் அமைந்துள்ளது. பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் அமைந் துள்ள இடத்திலிருந்து மேற்குப் புறமாக ஏறக்குறைய ஐநூறு யார் தூரத்தில் கொக்குவில் பிரம்படி வீதி உள்ளது.

இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பன்னிரண் டாம் திகதி பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கிய தொடருந்து நிலைய வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் முன்னேறி கொக்குவில் பிரம்படிப் பகுதியினைச் சுற்றிவளைதத்து. பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், வயோ திபர்கள், இளைஞர்கள் என யாவரையும் வீதிகளுக்கு அழைத்து வந்து சுட்டதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந் தார்கள். அன்றையதினம் வேறு ஒரு பகுதியூடாக வந்த இந்திய இராணுவத்தின் மற்றுமொரு அணி யினர், கொக்குவில் பொற்பதிப் பகுதி யைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொக்குவில் பிள் ளையார் ஆலயத்துக்கு வடக்காக நானூறு யார் தூரத்தில் அமைந் துள்ள சனசமூக நிலையத்தின் அருகே வீதியோரத்தில் அனை வரையும் உயிருடன் நிலத்தில் படுக்க வைத்து இராணுவத்தின் கவச வாகனங்கள், டாங்கிகளை அவர்கள் மீது ஏற்றிப் படுகொலை செய்தனர். இதில் அறுபத்துநான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 1987 ஒக்டோபர் பன்னிரண்டாம் திகதி பிரம்படிப் பகுதி, கொக்குவில் பொற்பதிப் பகுதி ஆகிய இடங்களில் நடந்த சம்பவத்தில் நூறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந் தார்கள்.

பொற்பதி வீதியைச் சேர்ந்த 87 வய தான தட்சணாமூர்த்தி சிவராஜ லிங்கம் தன்னுடைய வாக்குமூலத் தில் பின்வருமாறு கூறுகின்றார்,

“சுகாதாரப் பரிசோதகரான என் னுடைய சகோதரன் தட்சனா மூர்த்தி தவராஜலிங்கம், வயது 44, அவருடைய மனைவி தவராஜ லிங்கம் கனகமலர், வயது 38, பிள்ளைகளான தவராஜலிங்கம் கரன், வயது 10, தவராஜலிங்கம் கஜேந்திரன், வயது 6, 18 மாதங் களே நிரம்பிய தவராஜலிங்கம் தர்மிகா ஆகியோர் கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள இல 24 வீட்டில் வாழ்ந்துகொண்டிருந் தார்கள். என்னுடைய இன்னெரு மருமகனான 11 வயதான ஹர்சனும் அவர்களுடன்தான் இருந்தார். அன்றைய தினம் என்னுடைய சகோதரனின் வீட்டுப் பகுதியில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்குத்தான் அவ்வீட்டுக்கு என்னால் போக முடிந்தது. அங்கே, என்னுடைய சகோதரன், அவரின் மனைவி, பஞ்சிளம் பெண் குழந்தை ஆகியோரின் சடலங்கள் வீட்டிற்குள் இருந்தன. வேறு இரு சடலங்களும் அவ்வளாகத்தில் காணப்பட்டன.

கரன், கஜேந்திரன், ஹர்சன் ஆகிய மூன்று பையன்பளும் இன்னொரு அறையிலிருந்த கட்டிலின் கீழ் ஒளிந்திருந்ததைக் கண்டேன். கஜேந்திரனும் ஹர்சனும் காய மடைந்திருந்ததுடன் குருதி வடிந்து கொண்டும் இருந்தது.”

7 ஆம் வட்டாரம் நைநாதீவைச் சேர்ந்த 47 வயதான நாகலிங்கம் நாகேஸ்வரி தன் வாக்குமூலத்தில்,

“நான் என்னுடைய அண்ணா நாக லிங்கம் ஜீவரட்ணத்தின் குடும்பத் துடன் இல 24, பிரம்படி வீதி, கொக்குவிலில் வாழ்ந்துகொண் டிருந்தேன். சில வருடங்களுக்கு முன்னர்தான் என் பெற்றோர் மரணமடைந்திருந்தார்கள். அவ் வீட்டில், அண்ணாவும், பிள் ளைகளான கோகிலாவும் மனோ கரனும், என்னுடைய சகோதரிக ளான ஆனந்தகௌரி, சாரதா தேவியும் ஒன்றாக வசித்தோம். அன்றைய தினம் காலை ஒரு மணியிலிருந்து, துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தால் எமது உறக்கம் கலைந் துபோயிருந்தது. காலை 5.30 அளவில், இந்தியப் படையினர் எமது வீட்டு வளவுக்குள் நுழைந்து எம்மை வெளியில் வருமாறு சொன் னார்கள். படைவீரர்கள் எமது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் எறிகணைகள் அருகில் விழுந்து வெடித்தது. பின்னர், குண் டுப் பயத்தினால் பயமடைந்தோ என்னமோ, அவர்கள் தங்கள் சுடுகலன்களை எம்மை நோக்கித் திருப்பினார்கள். என்னுடைய அண்ணாவும் ஆறே வயது நிரம் பிய அவரது மகன் மனோகரனும் அவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். என்னுடைய இரு சகோ தரிகளும், ஏழு வயதான மருமகள் கௌசலாவும் அவர்களின் துப்பாக் சிச் சன்னங்களுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். பின்னர் அவர் கள் யாழ்ப்பாண வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார்கள்.”



# ஏறாவூர்படுகொலை 10.10.1990

தங்கராசு அய்யநார் சொல்கிறார்:

"கைதாகி காரத்தீவு சண்முகா பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது மகனை பார்ப்பதற்கு. 10ம் தேதி அக்டோர் மாதம், 1990ல் சுமார் 10 மணிக்கு மருத் துவர் சண்முகநாதன், அவருடைய மனைவி ராணி ஆகியோரை அழைத்து சென்றேன். நகரில் நின்றோரை எல்லாம் தடுத்து நிறுத்தி விட்டு சென்றார்கள். சிறது நேரத்தில் திரும்ப வந்து இஸ்லாமியர்களையும், தமிழர்களையும் தனித் தனியே பிரிந்திருக்க சொன்னார்கள். பின்னர் இஸ்லாமியர்களை எல்லாம் அங்கிருந்து சென்று விட்டனர்.

ஆண்களை ஒரு பக்கத்துக்கு அழைத்தார்கள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தோம். அங்கு உள்ள ஒரு அறையினுள் எங்களை செல்லச் சொன்னார்கள். எங்களுக்கு பயமாக இருந்தது. இப்போது மருத்துவரின் மனைவி அந்த அறையினுள் சென்று, மருத்துவரை ஒன்று துன்புறுத்த வேண்டாம் என இராணுவத்தினரைப் பார்த்து கெஞ்சினார். ஆனால், இராணுவத்தினர் மருத்துவரின் மனைவியை துாரே இழுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மனிதர் கத்தியை பிடித்து கொண்டு நின்றிருக்கிறார். இது எனக்கு அப்பொழுது தெரியாது. தீடீரென என்னுடைய தலையில் உள்ள மயிரை பிடித்தார். எனது தலையில் எண்ணெய் தடவியிருந்ததால், அவரின் பிடி நழுவியது. என்னுடைய தலையை வெட்டிவிட ஓங்கிய கத்தி, எண்ணெய் வழுக்கி கை நழுவியதால் எனது கழுத்தில் விழுந்தது. நான் தரையில் விழுந்தேன். நான் படுகாயமுற்றதால் இறந்து விடுவென் என நினைத்தேன்.

மருத்துவர் சண்முகநாதனும், சிலரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர். நான் கீழே விழுத்திருந்த நேரத்தில். கொல்லப்பட்டவர்களின் அலறல் ஒலி கேட்க முடிந்தது. அந்த சப்தத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், எனக்கு வேறு வழி தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து பெரிதாய் சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இழுத்து வரப்பட்டார். அவரின் மேலிருக்கும் சேலையை களையப்பட்டிருந்தது. சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் அப்பெண்னை வேறு அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினான். தன்னை விடச் சொல்லியும் அங்கு நடப்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றும் அப்பெண் கெஞ்சினார். ஆனால், மற்றொரு இராணுவ சிப்பாய் அப்பெண்ணின் தலையை வெட்டச் சொல்லி கட்டளையிட்டான். பின்னர் என் நிகழ்ந்திருக்கும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், கூச்சல் அடங்கி அமைதியானது. இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்று விட்டனர்.

என்னால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. மனித வதைக்குள்ளான மக்களின் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று நான் யோசனையில் இருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் திரும்பவும் வந்து. ஓலமிடுவோரையும், மூச்சு விட்டுக் கொண்டிருந்தோரையும் தேடி, கத்தியால் குத்தி எந்தவொரு சப்தம் வராதவாறு பார்த்து கொண்டனர்.

பின்னர், அவர்கள் எண்ணெயோ அல்லது மண்ணெனண்ணெயையோ அங்கு கிடந்தவர்கள் மீது ஊற்றி எரியூட்எனர். தீ என்னுடைய கால்களுக்கும் பாய்ந்தது. நான் அணைக்க முற்பட்டேன். ஆனால், முடியவில்லை. என்னால் எழுந்து நிற்கவோ, என்னுடைய கால்களை துாக்கவோ முடியவில்லை. என்னுடைய கைகளினால் என் தலையை உயர்த்தி பின்னர் தவழ்ந்து கொண்டே, அந்த பெண்ணை கொண்டு சென்ற அறைக்குள் தவழ்ந்து சென்றேன்.

எழுந்து அமர்ந்து சிறிது நேரம் சிந்தித்தேன். விமானச் சத்தங்கள் இப்பொழுது கேட்க முடிந்தது. பெண்ணின் சேலை தரையில் கிடந்ததைப் பார்த்தேன். அதையெடுத்து இரண்டாய் கிழித்தேன். என்னுடைய தலையிலும், கழுத்திலும், முகத்தையும் மறைத்துக் கொண்டபடி இறுக கட்டிக் கொண்டேன். வெளியே என் தலைக்கு மேலே தீ எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், கைகள், கால்கள் மற்றும் தலைகளாய் கிடந்தன. அவைகளைத் தாண்டி நகர்ந்து ஊர்ந்து வெளியே வந்து சேர்ந்தேன்".

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# குமரபுரம் குண்டுவீச்சு 10.10.2008

குமரபுரம் கிளிநொச்சி நகர மையத்திலிருந்து ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன்மீது 10 அக்டோபர் 2008 அன்று நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு, சன அடர்த்தி மிக்க கிளிநொச்சி நகரமையம், மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வான்குண்டு வீச்சுக்களில் ஒன்றாகும். இக்காலம், இடம்பெயர்ந்த மக்களும், உள்ளுர்வாசிகளும், இக் குண்டு வீச்சுக்கள் காரணமாக மிகப்பெரிய அளவில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த காலமாகும். மேற்குறிப்பிட்ட குண்டு வீச்சில் ஒரு பாடசாலை ஆசிரியை, அவரது பத்துவயது மகள், மேலுமோர் பெண் ஆகியோர் கொல்லப் பட்டனர். ஆசிரியையின் கணவன், அவரது மகன், மேலும் பல பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த கணவன் இத் துயர சம்பவத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

"நான் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உள்ளூராட்சி அமைப்பு ஊழியன். எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. நாம் எமது சொந்த ஊராகிய பச்சிலைப்பள்ளியிலிருந்து ஆகஸ்ட் 2006 இல் இடம் பெயர்ந்தோம். அப்போதிருந்து கிளிநொச்சி குமரபுரத்தில் ஒரு மண்வீட்டைக் கட்டி வாழ்ந்திருந்தோம். அந்த துர்ப்பாக்கிய நாளில் நானும் மனைவியும், அன்று வேலைக்குச் செல்லும் முன்பதாக காலை 6.25 மணியளவில் அன்றைய சமையலில் ஈடுபட்டிருந்தோம். அந்நேரம் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. நாம் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பதுங்கு குழிக்கு ஓடினோம். எமது வீட்டைச் சுற்றி மூன்று குண்டுகள் வீழ்ந்தன. அவற்றில் ஒன்று எமது பதுங்கு குழிக்கு மிகவும் அண்மையில் விழுந்தது. எனது மனைவி தலத்திலேயே இறந்துவிட்டார். மகள் மூர்ச்சையாகிப் பின்னர் வைத்திய சாலையில் இறந்தாள். நானும் எனது மகனும் காயமடைந்ததுடன், குண்டு வெடித்தவுடன் மூச்சு விட சிரமப்பட்டோம். வெடிச்சத்தத்தினாலும், அதிர்ச்சியினாலும் எனது செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் இடம் பெயர்ந்து இப்போது எனது உறவினருடன் வாழ்கின்றோம். இங்குதான் நாம் எனது மனைவி, மகள் இருவரினதும் ஈமச்சடங்கினை நிறைவேற்றினோம்".


















JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# சிங்கள இனத்தின் தோற்றம்!

முதற் சிங்கள இலக்கண நூலான சிதத் சங்கிராவ கி.பி 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கி.பி 7ஆம் நூற்றாண்டுக்கு முந்திய கல்வெட்டுகளில் சிங்களம் மக்களின் மொழியாகவும் இனமாகவும் குறிப்பிடப்படவில்லை. “சிஹல” (பாளியில் சிங்கம்) என்ற சொல் முதன் முறையாக தீப வம்சத்தில் (கி.பி 5 ஆம் நூற்றாண்டு) குறிப்பிடப்படுகின்றது. சிங்கங்களின் இருப்பு காரணமாக தீவு சிஹல என்று அழைக்கப்பட்டது என்று ஒரு முறை மட்டுமே சொல் வருகிறது.

மகாவம்சத்தில் சிஹல என்ற சொல் இருமுறை வருகிறது. ஆனால் சிங்கள மக்கள் என்றோ சிங்களம் என்ற மொழியோ குறிப்பிடப்படவில்லை. ஆர்.ஏ.எல்.எச். குணவர்தன தனது “சின்ஹல அடையாளமும் சிந்தனையியலும்” (1979) என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றார் கி.பி 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் உள்ள முழு மக்களையும் உள்ளடக்கியதாக சிங்கள அடையாளம் இருந்ததில்லை அது ஒரு சிறிய இனக்குழு வர்க்கம் மட்டுமே என்றும் கூறுகிறார் . இந்நிலை கண்டி இராசதானியின் அரசனாக வருவதற்கான தேவை இருந்தும் தமிழரான ஒருவரே அரசனாக வரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது இது சிங்களவர்களுள் ஒருவர் தெரிவாவதற்கான ஆளுமையற்ற வலுவற்ற தன்மையை வெளிக்காட்டி நின்றது கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை சிங்களம் முழுமையான மக்கள் மொழியாக மாறவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஏற்பட்ட சிங்கள பௌத்த மேலாதிக்கமும் அது அதிகாரம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டமையும் கேட்பாரற்று இனவழிப்பாக மாற்றமடைந்த போது சிங்களம் என்றுமில்லாதவாறு முழு இலங்கைத்தீவின் பேரரசாகவும் படையணியையும் பெற்றுக் கொண்டமையும் தமிழர் தரப்பின் வசம் எதுவுமில்லாதவாறு ஆங்கிலேயர்களால் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டு நின்றமையே இதற்கு காரணமாக அமைந்தது. தமிழர் தரப்பின் பாதுகாப்பிற்காக சமஷ்டி போன்று எந்தவித பாதுகாப்பற்ற நிலையே இதற்கு காரணமாக அமைந்தது.

இப்போதுள்ள சரித்திரப் புத்தகங்கள் முன்பு போல் விஜயன் வந்ததிலிருந்து ஆரம்பிக்கவில்லை. இலங்கையில் விஜயன் தரையிறங்குவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இருந்த கற்கால நாகரிகத்துடன் அவை தொடங்குகின்றன. சிங்களத்தின் கற்பனையான விஜயன் வருவதற்கு முன்பே இந்தத் தீவில் நிரந்தரக் குடியேற்றங்கள், விவசாயம், ஆற்றல் களைப் பயன்படுத்துதல், இரும்பின் பயன்பாடு, நகரமயமாக்கல் போன்றவை இடம்பெற்றிருந்தன என்பதை இப்போது கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன. நமது வரலாற்றை ஏற்றுக்கொள்கின்றன. வட இந்தியாவில் உள்ள எந்த மாநிலங்களின் பழங்கால வரலாறு குறித்த நூல்கள் எதுவும் பண்டைய வரலாற்றில் எந்த காலத்திலும் விஜயன் என்ற ஆளொருவர் 700 பேர்களுடன் அவர்களின் கரையிலிருந்து புறப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடவில்லை பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சம் பௌத்தத்தை மகிமைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட புனைகதை என்பதே நம்பத்தகுந்ததாகும். உண்மையில் மகாவம்ச ஆசிரியர் ஒவ்வொரு சரணத்தின்ஜசீர் ஸ முடிவிலும் அவ்வாறே குறிப்பிடுகிறார்.

ஆனால் (கற்பனையான) விஜயன் வருவதற்கு முன்னர் இந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் யார் என்பதை இதுவரை சிங்கள வரலாற்றாசிரியர்கள் அப்பட்டமாக மூடிமறைக்க முயன்றுள்ளனர் என்பதையே இவை நிரூபிக்கின்றன. ஏனெனில் உண்மையைச் சொல்லும் எந்த முயற்சியும் தமிழர்களை இந்நாட்டின் பூர்வீக குடிகள் என்பதை ஏற்றுக்கொண்ட ஆதாரமாகிவிடும் இது சிங்களத்தின் புனைவு வரலாற்றை அம்பலமாக்கிவிடும் என்பதாலேயே ஆகும்.

இலங்கையில் ஆரம்பம் முதல் மிகுந்த செல்வாக்கோடு விளங்கிய மகாயான பௌத்த தலங்கள் அதன் விகாரையான அபயகிரி போன்றவை கைவிடப்பட்டும் அழிக்கப்பட்டும் ஆறுமுக நாவலர் குறிப்பிட்டதை போன்ற இறந்த இந்தோ ஆரிய மொழியில் (பாளி) 6 ஆம் நூற்றாண்டில் அமைந்த தேரவாத மகாவம்ச வரலாறுகள் புனைவுகளை கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றன.

1970 மற்றும் அதற்கும் பின்னரான காலகட்டத்தின் முக்கியத்துவமானது அறிவியல் ரீதியாகவும் தொல்லியல் ரீதியாகவும் ஆய்வுகள் இடம்பெறத் தொடங்கியதில் இருந்தும் அது மட்டுமின்றி, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த புலமை வாய்ந்த வெளிநாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் யுனெஸ்கோ நிபுணர்களும் இணைந்து எமது உள்ளூர் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிய காரணமாக போலி சிங்கள பௌத்த வரலாற்றாசிரியர்களின் நம்பகத்தன்மை வலுவிழக்க தொடங்கி விட்டது.




கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு மற்றும் தென்னிலங்கையின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் படி 1,25,000 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தொல்பொருள் சான்றுகள் தற்போது கிடைத்துள்ளன. கலாநிதி சிரான் தெரணியகல தனது ஆய்வுகள் மூலம் இதனை வெளிக் கொண்டு வந்துள்ளார்.

**கற்காலத்தை பொதுவாக மூன்று காலங்களாகப் பிரிக்கலாம்:**

1. பழங்கற்காலம் (பழைய கற்காலம்) (கி.மு 10,000க்கு முன்).
2. மெசோலிதிக் (மத்திய கற்காலம்) (கி.மு 10,000க்கும் கி.மு 8000க்கும் இடைப்பட்ட காலம்).
3. புதிய கற்காலம் (புதிய கற்காலம் கி. மு. 8,000 முதல் கி.மு. 3,000வரை). (கிரேக்கம் - லித்தோஸ் - கல்). ஆனால் சில பகுதிகளில் கி.மு. 10,000க்கு முன்பே மத்திய கற்காலம் காலம் தொடங்கியிருக்கலாம்.

30,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மெசோலிதிக் [மத்திய கற்கால] மக்கள் நமது மலைநாட்டிலும் தாழ்நிலங்களி லும் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. சுமார் 75 சான் றுகள் கிடைத்துள்ளன. இந்த மெசோலிதிக் மக்களில் பெரும்பான்மையானவர்கள் முக்கியமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. நாடோடி வாழ்க்கை நடத்தினார்கள். குகைகள், குன்றுகள் மற்றும் சமதளங்களில் உள்ள கண்டுபிடிப்புகளிலிருந்து நாகரிகத்தில் அவர்களின் முன்னேற்றம் உணரப்படுகிறது.

இந்த மக்களுக்கும் தற்போதைய தமிழ்நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்தவர்களுக்கும் இடையேயான வாழ்க்கை முறைகளில் நெருங்கிய ஒற்றுமைகள் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். தொல்லியல், மானிடவியல் மொழியியல் மற்றும் வரலாறு ஆகிய துறைகளில் நிபுணர்களால் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் பேசும் தமிழ் மொழியில் காணப்பட்ட

சுமார் 200 சொற்கள் பின்னர் சிங்கள மொழிக்கு கொண்டு செல்லப்பட்டன.

தென்னிந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் பயன்படுத்திய கருவிகள் நமது மத்திய கற்கால கால மக்கள் பயன்படுத்தியவை என்று அதிகாரபூர்வமாகக் கூறப்பட்டுள்ளது. பேராசிரியர் இந்திர பாலா வின் கூற்றுப்படி, இந்த நாகரிகம் தென்னிந்தியாவில் இருந்து வட இலங்கை வரை பரவியது, பின்னர் இலங்கையின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த தீவில் ஆரம்ப இரும்புக் காலம் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கும் தென் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே மிக நெருக்கமான ஒற்றுமைகளைக் காண்கிறோம். 1970 களில் கந்தரோடையில் ஆய்வுகளை மேற்கொண்ட விமலா பெக்லி, பழங்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசித்தவர்கள் தற்போதைய தமிழகத்தின் தென்பகுதியுடன் மிக நெருங்கிய உறவைக் கொண்டிருந்தனரென்ற முடிவுக்கு வந்திருந்தார்.

இலங்கையில் தமிழகத்தின் கலாசார தொடர்பு கந்தரோடை தொடக்கம் புத்தளம் வரை பரவியுள்ளது. குறிப்பாக புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு, கந்தரோடையில் காணப்படுவதுடன் மிக நெருக்கமான ஒற்றுமையைக் கொண்டிருந்தது. பேராசிரியர் சுதர்சன செனவிரத்னவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இலங்கையின் கற்கால மக்களின் கலாசாரம் அன்றைய தென்னிந்திய கலாசார சூழலின் எல்லைக்குள் வந்தது என்பதை பேராசிரியர் இந்திரபாலாவும் உறுதிப்படுத்துகிறார்.

இதனால் இலங்கையின் ஆரம்பகால குடிமக்கள் வட இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்து இப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மகாவம்சத்தின் காலத்திற்கு முன்பே, இலங்கை தென்னிந்தியாவைப் போன்ற ஒரு கலாசாரத்தை கொண்டிருந்தது மற்றும் அந்த பழங்காலத்தவர்கள் தற்போதைய சிங்கள மற்றும் தமிழர்களின் முன்னோர்களாக இருந்தனர் என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்தப் பழங்காலத்தவர்களுக்கு இன வேறுபாடுகள் இல்லையென்றாலும் கலாசார வேறுபாடுகள் மட்டுமே இருந்ததாக பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க கூறியுள்ளார். இந்த வேறுபாடுகள் விஜயன் என்று அழைக்கப்படுபவர் தீவுக்குச் செல்வதற்கு முன்பே இருந்திருக்கலாம் என்று அவர் கூறுகிறார். பண்டைய கற்கால மக்களின் கலாசாரம் மற்றும் வாழ்க்கைப் பழக்கவழக்கங்களை ஆய்வு செய்தால், அவர்கள் தங்கள் பெயரையோ அல்லது மண் பானைகள் மற்றும் பாத்திரங்களை வடிவமைத்தவர்களின் பெயர்களையோ பொறிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர். இந்தப் பழக்கம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அன்றைய காலகட்டத்தில் இருந்ததாகக் காணப்படுகிறது. இந்தப் பழக்கம் இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை. தமிழ்நாட்டிலும் அநுராதபுரத்திலும் மண் பானைகளில் இந்த எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர பானைகள் 2,750 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தைச் சேர்ந்தவை. பானைகளில் உள்ள எழுத்துக்கள் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்புதான் வட இந்தியாவில் எழுத்து தொடங்கியது. ஆனால் தமிழ்நாடு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் இந்த எழுத்துக்கள் மிகவும் முன்னதாகவே இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்போது வரலாற்றாசிரியர்கள் எழுத்துக்கலை தெற்கிலிருந்து வட இந்தியாவுக்குச் சென்றதாக நம்புகிறார்கள்.

தென்னிந்தியாவின் மதுரையில் சமீபத்திய கீழடி அகழ்வாராய்ச்சிகள் இந்தியாவில் உள்ள அனைத்து நாகரிகங்களுக்கும் முன்னரான நாகரிகத்தின் சான்றுகளைக் காட்டுகின்றன. இலங்கையில் பௌத்தம் புகுத்தப்படுவதற்கு முன்னரே, தற்போதைய சிங்கள, தமிழர்களின் முன்னோர்கள் இங்கு வாழ்ந்தவர்கள் என்பது விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். சமீபத்திய டிஎன்ஏ சோதனைகள் இதை உறுதிப்படுத்தின.

சிங்கள எழுத்துக்களை ஆராயும் போது, பேராசிரியர் பெர்னாண்டோ, பேராசிரியர் சத்தா மங்கள கருணாரத்ன மற்றும் பேராசிரியர் ஆரிய அபேசிங்க ஆகியோர், பௌத்தத்துடன் வட இந்திய பிராகிருதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே, தென்னிந்திய எழுத்தைப் போன்றே இலங்கையில் இருந்ததாகக் கூறியுள்ளனர். சிங்கள மொழி பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் தமிழ் எழுத்தும் தமிழ் மொழியும் தமிழ்ச் சொற்களும் பயன்பாட்டில் இருந்ததை அவர்களின் ஆய்வுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும். அதனால்தான், எமது முன்னோர்களின் மொழி தமிழ் என்றும், இலங்கையின் பூர்வீக பழங்குடி மக்கள் தமிழர் என்றும் உறுதியாக கூறமுடியும்.

கி.மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தத் தீவில் பௌத்தம் பரவியது. அடையாளம் காணப்பட்ட 1500 கல்வெட்டுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. இந்தக் கல்வெட்டுகளில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அப்போது சிங்கள எழுத்துகளோ சிங்கள மொழியோ சிங்கள மக்களோ இல்லை. பௌத்தம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரும், இலங்கையில் தமிழ் மொழியே பயன்பாட்டில் இருந்தது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. இவ்வரலாறு ஐரோப்பியர் இலங்கைத்தீவின் யாழ்ப்பாண, வன்னி கண்டி, கொழும்பு இராச்சியங்களை கைப்பற்றும் காலம் வரை தொடர்ந்து இருந்தமை நம்பத்தகுந்த ஆதாரமாகும்.

பேராசிரியர் பரணவிதாரண வட இந்திய பிராகிருதத்தை பழைய சிங்கள எழுத்து என்று அடையாளம் காட்ட முயன்றாலும், பிராகிருதம் எங்கெல்லாம் பயன்பாட்டில் இருக்கிறதோ அங்கெல்லாம் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் என்பதைக் காட்ட முயன்றாலும், பௌத்தம் பரவியவுடன் பிராகிருத எழுத்துகளும் இலங்கையில் மட்டுமல்ல இந்திய, தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவிக் காணப்பட்டமை காரணமாக பேராசிரியரின் இந்தக் கூற்று இப்போது ஏற்கப்படவில்லை. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் கல்வெட்டுகளின் எழுத்துப் படிவம் 700 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்தது. பிராகிருதம் பழைய சிங்களம் அல்ல. அப்படி இருந்திருந்தால், ஏனைய தென்கிழக்காசிய நாடுகளிலும் சிங்கள மொழி பேசப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டில் பௌத்த கல்வெட்டுகளின் மொழி தமிழாகும். பொதுவாக வட பிராமி பயன்படுத்தப்பட்டாலும், இலங்கையில் உள்ள 1,500 பிராமி கல்வெட்டுகளை ஆய்வு செய்தால், கூடுதலாக பல தமிழ் வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகத் தனிப்பட்ட தமிழர்களின் பெயர்கள் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளன. தனி மனிதர்களுக்கிடையேயான உறவுகள் தமிழ் மொழியில் குறிப்பிடப்படுகின்றன. இடப் பெயர்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் ஆட்சியாளர்களின் பட்டங்கள் கூட தமிழில் எழுதப்பட்டன. இது பௌத்தம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் தமிழ் மொழி இருந்ததைக் காட்டுகிறது, எனவே பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் தமிழர்கள் இந்தத் தீவில் பூர்வீகக் குடிகளாவர் என்பதை உறுதிப்படுத்தி உள்ளது.

சிங்கள மொழியின் பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்தால், மலையாளத்தின் பரிணாம வளர்ச்சியில் நாம் ஒரு சமாந்தரத்தை கொண்டிருக்கிறது தற்போதைய கேரளம், தமிழ்நாட்டில் தமிழ் பேசும் பகுதிகளில் ஒரு பகுதியாக இருந்து அவை தமிழ் சேர மன்னர்களால் ஆளப்பட்டன. கி.பி 10 ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் மீது சமஸ்கிருதத்தின் பெரும் தாக்கம் காரணமாக தமிழ் மலையாளமாக திரிபடைந்தது. தமிழ் மொழியின் மீது பாளி மொழி தாக்கம் சிங்கள மொழியாக திரிபடைந்து 13 ஆம் நூற்றாண்டில் உருவாகியது.

அதேபோன்று இலங்கையில் பௌத்த மொழியாக அறிமுகப்படுத்தப்பட்ட பாளி மொழியானது உள்ளூர் தமிழ் மொழியுடன் கலந்து பல்லவர் காலமாகிய அப்பர், திருஞான சம்பந்தர் போன்ற சைவ சமய மறுமலர்ச்சி இலங்கைத்தீவில் தாக்கம் காரணமாக கி.பி 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டுகளில் அரும்பத் தொடங்கியது. சிங்களம் என்ற புதிய மொழியாக உருவாகியது.

இதற்கான ஆதாரங்கள் சிகிரியாவில் காணப்படுகின்றன. கி.பி 5 ஆம் நூற்றாண்டின் சிகிரியா கல்வெட்டுகள் ஆரம்பகால சிங்களவர்களை இன்னும் முறையான மொழியை உருவாக்கவில்லை என்பதை சித்தரிக்கிறது. இதனால் கி.பி 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள மொழி இருந்ததற்கான ஆதாரம் இல்லை. பல்லவர் கால கிரந்த எழுத்துக்களுடன் பிராமி எழுத்துக்களும் கலந்ததால் சிங்கள எழுத்துமுறை தமிழ் வட்டெழுத்து வடிவில் உருவானது.

ராஜவளிய, பூஜாவளிய போன்ற சிங்கள இலக்கியங்கள் கி.பி 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

தமிழர்கள் இத்தீவில் வெகுகாலமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை முன்னைய தமிழ்ச் சங்க காலம் மற்றும் இரண்டாம் சங்க காலம் (முதல் சங்கம் மற்றும் இடை சங்கம்) கடந்த சங்க கால (கடை சங்கம்) இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என உரைத்த கனியன் பூங்குன்றனார் பற்றி முதன்முதலாக வெளிப்படுத்திய உ. வே சாமிநாதையர் பூங்குன்றனாரை மணிபூங்குன்றனார் என்றும் குறிப்பிடுகின்றார். இதனை இணுவில் வீரமணி ஐயரின் ஆசான் பண்டிதர் ஆறுமுகம் அவர்கள் முல்லைத்தீவு பேராற்றங்கரையின் மணிமலையைச் சேரந்தவர் என்கிறார். அதேபோன்று பல சங்க கால தமிழ்ப்புலவோர் ஈழத்தைச் சேர்ந்தவர்கள் இருந்துள்ளார்கள் ஆனால் தற்போதைய விக்கிபீடியா தவறான தகவல்களை தருகின்றது. முன்னைய சங்க கால இலக்கிய படைப்புகள் கடை சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. தமிழ் இந்த உலகின் ஆரம்பகால மொழிகளில் ஒன்றாக விளங்கிய போதினும் பழங்காலத்திலிருந்தே பாண்டிய, பல்லவ, சோழர் இலங்கையை வெற்றிகொண்டிருந்த அவர்களுடைய தாக்கமும் இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிற அதேவேளை இலங்கையில்




தமிழர்களின் பூர்வீகத் தீவான இலங்கையில், சிங்களவர்கள் குடியேறுவதை காட்டும் இலங்கை அரசின் தபால் தலை

1956-இல் “விஜயனின் வருகை” என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை அன்றைய சிங்கள இனவாத அரசு வெளியீட்டது. தமிழ் அரசி கரையில் வீற்றிருக்க, விஜயனின் தலைமையிலான சிங்களவர்கள் தங்களது “சிங்க உருவம்” பொறித்த கொடியுடன் கப்பலில் கரை ஒதுங்க வருகின்றனர்.

சிங்களர்கள் வந்தேறிகளாக இலங்கை கரையில் ஒதுங்கும் உண்மையை உலகிற்கு சொல்லும் பொருட்டு அந்த தபால் தலை இருந்தது. இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த சிங்கள தலைவர்கள் இத் தபால் தலைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். “விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. தவிரவும், விஜயன் வந்தபோதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக்கொண்டது போலாகி விடும். எனவே, இந்தத் தபால் தலையை வாபஸ் பெற வேண்டும்” என்று கூறினார்கள்

அதுகாறும் நாங்கள்தான் இத் தீவின் பூர்வ குடிகள் என்று முழங்கிவந்த சிங்கள பேரினவாத அரசு, சுதாரித்துக் கொண்டு இத் தபால் தலையை திரும்ப பெற்றுக் கொண்டது. அதற்குள் இத் தபால் தலை உலகம் முழுவதும் பரவி விட்டது.

தமிழர்கள் 3,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தீவில் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் ஏற்கப்பட வேண்டியதே. பௌத்தம் சிங்களவர்களுடையது என்றும் இந்து மதம் தமிழர்களுடையது என்றும் குறிப்பிடும் தற்போதைய போக்கு பிழையானது. ஒரு நாட்டிற்குள் மதங்கள் புகுத்தப்படும் போது குறிப்பிட்ட இனம் மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று அறிமுகப்படுத்தப்படுவதில்லை. இத்தீவில் பௌத்தம் புகுத்தப்பட்டபோது சிங்களவர்கள் யாரும் இருக்கவில்லை. இதனால் தமிழ் மன்னன் தேவநம்பிய தீசன் புத்த மதத்திற்கு மாறினார்.

பாளி இலக்கியங்களிலும் பிராமிக் கல்வெட்டுகளிலும் தமிழ் பௌத்தர்கள் இருந்ததற்கான கணிசமான சான்றுகள் உள்ளன. தமிழ் மன்னர்கள் பௌத்தம் மற்றும் பௌத்தநெறிகளை ஆதரித்த போது அவர்களுக்கு புத்த தாசன் மற்றும் புத்ததேவன் என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன.

15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு வரை பாளி இலக்கியத்தின் படி தமிழ் பௌத்தர்கள் இருந்தனர். வட இலங்கையில் உள்ள நயினாதீவு கல்வெட்டுகள் தமிழ் பௌத்தர்களைக் குறிக்கின்றன. பேராசிரியர் சுனில் ஆரியரத்ன தனது “தெமல பௌத்தயோ”வில் தமிழ் பௌத்தர்களைக் குறிப்பிடுகிறார்.

தமிழ் நாட்டில் பக்தி வழிபாட்டு முறை தோன்றுவதற்கு முன்பே வடக்கு மற்றும் கிழக்குக்கு வெளியிலும் தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. பாளி இலக்கியம் மற்றும் சில கல்வெட்டுகள் அநுராதபுரத்தில் தமிழர்களின் இருப்பு மற்றும் செல்வாக்கு பற்றி குறிப்பிடுகின்றன. இந்நிகழ்வு றொபர்ட் நொக்ஸ் கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்டு தப்பியோடி அநுராதபுரம் வந்தபோது அநுராதபுரத்தில் சிங்கள மொழி தெரிந்தவர்களை காணமுடியவில்லை என்ற கூற்றிலிருந்து மிகப்பெரிய ஒரு விடயத்தை நாம் கண்டறிய முடியும் அதாவது பண்டைய புராதன பௌத்த தலங்கள் அமைந்திருந்த அங்குள்ள மக்களுக்கு சிங்கள மொழி தெரிந்திருக்கவில்லை என்பதிலிருந்து அங்கே அமைந்திருக்கும் பௌத்த தலங்கள் அனைத்தும் தமிழ்ப் பௌத்தமான மகாயான பௌத்தத்தைச் சேர்ந்தவை என்பதே அவ்வரிய உண்மையாகும் இவ்வுண்மை பல விடயங்களை அறிந்துகொள்ள கால்கோளாகின்றது.

- பிரதீபா சிவானந்தம்
நன்றி: முகநூல் - ஈழத்து வரலாறும் தொல்லியலும்

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**
**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**



# ஆற்றலின் வடிவம் அண்ணன்
# அவன் வளர்ப்பினில் அனலாய் தங்கை

அவலங்கள் சூழ்ந்ததோர் வாழ்வு
முடிவிலியாகுமோ என்றஞ்சி ஏங்கி
நொந்தவர் முன்னே – வீரம்
கொள் எனச் சொன்னதோர் வேங்கை.
பெண்மையில் மென்மையை
மட்டுமே கண்டவர் – அவள்
வன்மையின் வடிவம்
என்பதுணர்ந்தார்.
ஒன்றாகி பத்தாகி நூறாகி
பெண்கள் படையான போது
ஆளுமை வீச்சின் அர்த்தம் புரிந்தார்
ஒரு நூலோடையாய்
ஓடிய பெண்மை
காட்டாறாகி பாய்ந்தது கண்டார்.
தடைகள் தாண்டி
தலைவிதி மாற்றி
தாயகம் நோக்கிய பயணத்தில்
பெண்கள் வீரியம் கண்டு
வழிகள் விழித்தார்
பேதமை பெண்மையின்
இயல்பெனச் சொன்னவர்
வெட்கத்தில் இங்கே
தலைகள் குனிந்தார்.
நேற்றெம் எல்லைகள்,
கவர்ந்த பகைவனும்
கடல்வழி தாண்டி
பூமாலை ஏந்தி
வந்த எதிரியும்
கலங்கிட பெண்மை
வீறு கொண்டெழுந்தது.
வென்று பார் நீ என
சொல்லி எரித்தது.
எங்களின் தேசம்
எங்களுக்கானதே
எவன் அதை தொடினும்
எரிமலை வெடிக்கும்
புயலோடு பூகம்ப
அழிவுகள் செய்யும்
என்பதே பெண்மையின்
கூவலாய் ஒலித்தது.
வேரொடு பகை விழும் நினைவில்
முன்னணியாகி மாலதி நடந்தாள்
முதல் விதையாகி முன்னுரையானாள்.
இவள் வழி இங்கே
படையணி நகருது
பகைவனின் பாசறை
இருப்பிடம் மீதெலாம்
எங்களின் செங்கொடி
விண்தொட நிமிருது.

குறிப்பு: முதற் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி
நினைவாக [10.10.1987]

–சுதந்திரப்பறவை

# முன்னணி குளவிக் கூட்டுக்குக் கல்லெறிகின்றதா?

23.09.2023



திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வாகன ஊர்தி தாக்கப்பட்டிருக்கிறது. திலீபனின் படத்தை ஏந்திய அந்த ஊர்தி கடந்த ஆண்டும் அந்த வழியால் சென்றிருக்கிறது. இது இரண்டாவது தடவை. அது தாக்கப்பட்ட இடம் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் அபகரிக்கப்பட்ட தமிழ் நிலம். கடந்த ஆண்டு அந்த ஊர்தி குறிவைக்கப்படவில்லை. இந்தமுறை தான் அது குறிவைக்கப்பட்டிருக்கிறது.அந்த ஊர்தியை குறிவைத்து அசம்பாவிதங்கள் நடக்கலாம் என்பது ஏற்கனவே மட்டக்களப்பில் உணர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு தாக்குதலை முன்னணி எதிர்பார்க்கவில்லை என்பது காணொளிகளைப் பார்க்கும் பொழுது தெரிகிறது. தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தேவையான ஆளணிகளோடு அவர்கள் வரவில்லை என்பதும் தெரிகிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எனப்படுகிறவர் தனியன் அல்ல. அவர் ஒரு சமூகம். அவருக்கு வாக்களித்த மக்களின் பிரதிநிதி. ஆனால் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சிலரோடு நிற்கிறார். அதுவும் தாக்கியவர்களுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கும். போலீசார் தாக்குதலைத் தடுக்கவேண்டும் என்ற வேகத்தோடு செயல்படவில்லை. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் ஊடகவியலாளர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த ஊடகவியலாளர்களில் சிலர் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரைப் பாதுகாக்க முற்பட்டிருக்கிறார்கள். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மத்தியில் பெண்கள் காணப்படுகிறார்கள். அதை ஒரு சமூகத்தின் தாக்குதலாகக் காட்ட வேண்டும் என்று நன்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

முன்னணி கடந்த சில மாதங்களாக தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. தமிழ் எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாக அக்கட்சி மேலெழுந்து வருகிறது. குறிப்பாக நிலப்பறிப்பு, விகாரைகளைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அக்கட்சி தீவிரமாக எதிர்ப்பை காட்டி வருகிறது. எனவே அக்கட்சிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் விதத்தில் அச்சுறுத்தலைக் கொடுப்பதே அத்தாக்குதலின் நோக்கமாக இருக்கலாம். ஏற்கனவே கஜேந்திரகுமாரைக் கைது செய்து பின் வெளியில் விட்டமையும் அவருடைய கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமையும் அந்த நோக்கத்தோடுதான். கொழும்பு வீட்டை முற்றுகையிட முற்பட்டமை. கஜேந்திரக்குமாரை விடவும் அவருடைய தாயாருக்கு அச்சுறுத்தலானது. ஏற்கனவே கணவனைப் பறிகொடுத்தவர். அவரைப் பொறுத்தவரை அது தான் அவருடைய வசிப்பிடம். அங்கே அவருக்கு நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் அவருடைய மகனுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம். எனவே திருகோணமலையில் நடந்த தாக்குதலானது 2009க்குப் பின் தமிழ் எதிர்ப்பு அரசியலுக்கு இருக்கக்கூடிய வரையறைகளை உணர்த்தும் நோக்கிலானது என்று சொல்லலாம்.

ஒருபுறம் அது முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானது. இன்னொருபுறம் அதன்மூலம் முன்னணியை ஓரளவுக்கு



பலப்படுத்தும் உள்நோக்கமும் இருக்கலாம். தமிழ்த் தேசியப் பரப்பில் வெளிப்படையாக இந்திய எதிர்ப்பை முன்னெடுக்கும் கட்சி அது. அக்கட்சியை குறிப்பிடத்தக்க அளவுக்கு பலப்படுத்தினால், தமிழ்மக்கள் மத்தியிலேயே இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதன்மூலம் அரசாங்கத்தின் வேலை இலகுவாகிவிடும் என்ற உள்நோக்கமும் அத்தாக்குதலுக்கு இருக்கக்கூடும்.

அந்த ஊர்தி அந்த வழியால் போனதால் சிங்கள மக்கள் ஆத்திரமூட்டப்பட்டார்கள் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. பொதுவாக எல்லா எதிர்ப்பு அரசியற் களங்களிலும் இந்த வாதம் முன்வைக்கப்படுவதுண்டு. ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் கொரில்லாத் தாக்குதல்கள் நடந்த போதும் இந்த வாதம் முன்வைக்கப்பட்டது. குளவிக் கூட்டுக்குக் கல்லெறிகிறார்கள். அதனால் குளவிகள் கலைந்து அப்பகுதியில் இருக்கும் சாதாரண மக்களைக் கொட்டும் என்றும் விளக்கம் தரப்பட்டது. எதிர்ப்பு அரசியலின் பண்பே அத்தகையதுதான். எதிர்ப்பு கூர்மையடையும் பொழுது அதற்கு எதிரான ஒடுக்குமுறையும் கூர்மை அடையும். ஒடுக்கும் தரப்பு அதன் மூலம் தன்னை அம்பலப்படுத்தும். அதனால் ஒடுக்கப்படும் தரப்பு மேலும் அரசியல் மயப்படுத்தப்படும். ஒடுக்குமுறைக்கு எதிராக அணி திரளும். உலகமெங்கிலும் எதிர்ப்பு அரசியல் அப்படித்தான் வளர்ந்திருக்கிறது.

திருமலைச் சம்பவம் முன்னணியின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும். அதேசமயம் அது திருகோணமலையில் இளம் தலைமுறையினர் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தக் கூடியது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரு தலைமுறை அரசியல் நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதி ஏன் சிங்கள பௌத்தத்தை எதிர்க்க வேண்டும் என்று கேட்கத் தொடங்கிவிட்டது. இன்னொரு பகுதி ஏன் பொது எதிரி என்று அழைக்க வேண்டும் என்றும் கேட்க தொடங்கிவிட்டது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் திருமலைச் சம்பவமானது ஒடுக்கு முறைக்கு எதிரான விழிப்பை அதிகப்படுத்தக் கூடியது. சம்பவத்தின் பின் அங்குள்ள இளையோரின் சமூகவலைத்தளச் செயற்பாடுகளில் அதைக் காணக் கூடியதாக இருப்பதாக ஒரு சமூகச் செயற்பாட்டாளர் சொன்னார். சம்பவத்துக்கு முன் திலீபன் யார் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லக்கூடிய பலரும் இப்பொழுது திலீபனைத் தேடி வாசிக்கிறார்கள் என்றுமவர் சொன்னார். அதுமட்டுமல்ல. சம்பவத்தின் பின் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் முன்னணியுடன் தமது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற மணிவண்ணன் உட்பட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முன்னணிக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத அரசியல்வாதிகளும் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள். நாட்டுக்கு வெளியே தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் உட்பட பலரும் கண்டித்திருக்கிறார்கள்.

ஒடுக்குமுறை என்று வரும்பொழுது தமிழ்மக்கள் இனமாகத் திரள்வார்கள் என்பதனை இச்சம்பவத்தின் பின்னரான நிலமைகள் காட்டுகின்றன. இங்கேதான் முன்னணி கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இருக்கின்றது.

காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் ஏதோ ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஆகக் கூடிய பட்சம் பெருந்திரளாகத் திரண்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகளால் அவர்களை அவ்வாறு திரட்ட முடியவில்லை என்பதுதான் கடந்த 14 ஆண்டு காலத் துயரம். அவ்வாறு தமிழ்க் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் ஒப்பீட்டளவில் ஒன்றாகத் திரட்டிய ஆகப்பிந்திய சம்பவமாக திருமலைத் தாக்குதலை கூறலாம்.

திருமலையில் முன்னணி தாக்கப்பட்ட இடம் எதுவென்று பார்த்தால் அது திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு பகுதிதான். கடந்த பல தசாப்தகால தமிழ் அரசியலால் அப்பகுதியை மீட்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, இப்பொழுது அங்கே வைத்து ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். கிழக்கில் தொடங்கிய நிலப்பறிப்பு திருகோணமலையில், அம்பாறையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வெற்றி பெற்றுவிட்டது. அது வடக்குக்கும் படர்ந்து வருகிறது. அதை எதிர்த்த காரணத்தால் முன்னணி தாக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட போது திருமலை யாழ் பெருஞ்சாலையில் முன்னணி ஒற்றைக் கட்சியாகத்தான் நின்றது. அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மிகச் சில ஆதரவாளர்களோடு காணப்பட்டார். அந்த ஊர்தி சில வாகனங்களோடுதான் நகர்ந்து சென்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட வாகனப் பேரணி அல்ல. தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் ஈட்டி முனையாகக் காணப்படும் ஒரு கட்சி மிகச் சிலரோடு ஒரு தாக்குதலை எதிர்கொண்டமை என்பது எதைக் காட்டுகின்றது? அது தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமா? அல்லது அந்தக் கட்சியின் பலவீனமா?

இதே திலீபனின் நாளில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 2020ல் எல்லாக் கட்சிகளும் இணைந்து எதிர்ப்பைக் காட்டின. அப்பொழுது போலீசார் நீதிமன்றத் தடை உத்தரவின் மூலம் அந்த எதிர்ப்பு நடவடிக்கையை முறியடிக்க முயற்சித்தார்கள். ஆனால் அங்கே ஒன்றுபட்டு நின்றதால் போலீசார் அந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதை இங்கு எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளோடு இணைந்து ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் சிறுவர் சித்திரக் கதை எழுத வரவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் தமிழ் மக்கள் மத்தியில் புலப்பெயர்வு அதிகரித்து வரும் ஓர் அரசியல் சூழலில், தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியல் எனப்படுவது இவ்வாறு மக்கள் மயப்படாத சிறு திரள் நடவடிக்கையாகச் சுருங்கி விட்டதை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு நெடுஞ்சாலையில் வைத்துத் தாக்கப்படுவதை, அவரைச் சூழ்ந்து மிகச் சில ஆதரவாளர்களே நிற்பதை, சிங்களபௌத்த அரசியலும் வெளியுலகமும் எப்படிப் பார்க்கும்?

நன்றி: நிலாந்தன்

# தடைகள் தகரும் தமிழீழம் மலரும்

## பாகம் 01 மற்றும் பாகம் 02




தடைகள் தகரும் தமிழீழம் மலரும் –பாகம் ஒன்று நூலானது, தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள பலாலி சிறீலங்கா வான்படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதைனையும், தடைகள் தகரும் தமிழீழம் மலரும் – பாகம் இரண்டு நூலானது தமிழீழ நாட்டின் யாழ். மாவட்டத்திலுள்ள அளவெட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலையும் இயம்பி நிற்கின்றன.

இத்தாக்குதல்களில் பங்குபற்றி மீண்டும் தளம் திரும்பி, நீண்ட நெடுங்காலமாகக் கரும்புலி அணியில் பயணித்த சி. செ. புலிக்குட்டி அவர்களால் இந்நூல்கள் எழுதப்பட்டன.

காலத்தின் தேவை கருதியும், தமிழீழப் போராட்ட வரலாறுகள் தலைமுறை தலைமுறையாகத் தமிழ் மக்களின் கைகளில் வாழ வேண்டும் என்பதற்காகவும் மிகக் கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்நூல்கள் எம்மால் வெளியீடு செய்யப்படுகின்றன.

அண்மையில் பல நாடுகளில் இந்நூல்கள் வெளியீடு செய்யப்பட்டு இப்போது கனடா மண்ணிலும் வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீரம் செறிந்த வரலாறுகளையும், உயர் ஈகம் செறிந்த வரலாறுகளையும் தமிழ் மக்களாகிய நீங்கள் அனைவரும் படித்து அறிதல் வேண்டும். இந்நூல்களை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும், நூல்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

நன்றி
அன்புடன் நிர்வாகம்.


**பங்களிப்பு $30**

**தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி**

tttamileelammalarum@gmail.com

# Berlin தீர்ப்பாயம் தீர்ப்புக்கள் 25.09.2023 அன்று [அமர்வு -03] வெளியிடப்பட்டுள்ளது.

”ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலையில் அமெரிக்க வகிபாகம் என்ன” என்பதைக்கண்டறிவதற்கான இத்தீர்ப்பாயத்தில் 6 குற்றங்களில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இதனைச் சுருக்கமாக ஒவ்வொரு தீர்ப்பாக விவரிக்கிறேன்.




**குற்றம் – 1 :** தமிழீழ அரசிற்கும் (70 வீதமான நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்தவேளை) சிறீலங்கா அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையைச் சிறுமைப்படுத்தி, அமைதி நோக்கிய நகர்வைச்சிதைத்து, அமைதி நிலையிலிருந்து போர் மூலோபாயத்தை நோக்கிய நகர்வுகளைத் தூண்டி தமிழீழ விடுதலைப்புலிகளைச் சிதைக்கத் திட்டமிட்டமை.

**தீர்ப்பிற்கான மேற்கோள்:** 1950 ஆம் ஆண்டின் Nürenberg நீதிமையம் விவரித்த “அமைதிக்கெதிரான குற்றங்களாகக்” கருதப்படுபவை

* சமாதான அல்லது அமைதி உடன்படிக்கைகளைச் சிதைத்தல், போரைத் தூண்டுதல், போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள உதவுதல் ஆகியன அமைதிக்கெதிரான குற்றங்களாகும்.

அதன் அடிப்படையில் அமெரிக்கா நிகழ்த்திய சமாதானத்திற்கெதிரான முதற்குற்றமாக நீதிபதிகளால் ஆய்வுசெய்யப்பட்டு, ஒருமித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்பு :

புரிந்துணர்வு ஒப்பந்தம் இத்தீவில் கைச்சாத்திடப்பட்ட வேளை இத்தீவில் முறைப்படுத்தப்பட்ட இரு நாடுகளுக்குரிய நிர்வாக அலகுகள் இருந்திருக்கின்றன. சிறீலங்கா மற்றும் தமிழீழமே (de facto state) அவையாகும்.

சிங்களப்பகுதியில் சிங்களரால் தேர்ந்தெடுக்கப்பட்ட UNP கட்சியும், தமிழீழப்பகுதியில் தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியாக TNA வும் இருந்தன.

2002 இல் முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடந்துமுடிந்த மறுகணமே, Hawai தீவுகளில் தரித்திருந்த USPACOM என்றழைக்கப்படுகின்ற அமெரிக்காவின் ஆசியப்பிராந்தியத்திற்கான இராணுவ ஆய்வுக் குழுவொன்று 30.09 - 02.10.2002 காலப்பகுதியில் தமிழர் தலைநகரமான திருகோணமலையில் தரித்திருந்தது. To conduct of study on the future conduct of the war (எதிர்காலப் போர் ஒன்றுக்கான கற்கை) என்ற பெயரில் அவர்கள் தமது தலைமைக்குச் சமர்ப்பித்த ஆய்வின் முக்கிய பகுதி கீழே.

“இத்தீவின் மிகமுக்கிய துறைமுகமாக திருகோணமலையே சிறீலங்கா கடற்படைக்கு உதவுகிறது. இதன் தென்பகுதியை தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வசம் வைத்திருக்கிறார்கள். இதன்மூலம் இப்பிராந்தியத்தில் நடமாடும் எந்தக்கப்பல் மீதும் அவர்களால் தற்கொலைத்தாக்குதல் அல்லது எறிகணை வீச்சை நிகழ்த்தமுடியும். இதனைப் பாதுகாக்கவேண்டிய கடற்படையாக சிறீலங்காக் கடற்படை இருந்தும், இப்பிரதேசத்தைப் பாதுகாக்க இயலாத நிலையில் உள்ளனர்..”

இந்த அறிக்கைக்கு முன்னமேயே, இதனை இயல்பாகச் சித்தரிக்கும் வகையில், USPACOM உடனடியாக நடவடிக்கையைத் தூண்டுகிறது. இப்பிரதேசத்தைப் பாதுகாக்கும் விதமான போருக்கு சிறீலங்காவின் கடற்படையை அணியமாக்கும் வகையில், 05.08 - 24.08.2002 அமெரிக்காவின் Navy Seal எனப்படும் பல்வகைத் தாக்குதற்பிரிவின் பயிற்சிகள் சிறீலங்கா இராணுவத்திற்கு தெற்குப்பகுதியில் வைத்து வழங்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்த முதல் நாடாக அமெரிக்கா (1997) இருக்கிறது. இணைப்பயிற்சிகள் (Join combined exchange training) என்றபெயரில் சிறீலங்காவுக்கான இராணுவப் பயிற்சிகளை அமெரிக்கா நீண்டகாலமாகச் செய்துவந்தபோதும், தமிழீழ விடுதலைப்புலிகளின் வேகமான வளர்ச்சியும் அதன் உச்சமாக அமெரிக்காவால் உறுதிசெய்யப்பட்ட இராணுவத்தளமான ஆனையிறவைப் தமிழீழ விடுதலைப்புலிகள் வீழ்த்தியமையும், அதன்பிறகு கட்டுநாயக்கவில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலாலும் சிறீலங்காவின் உளவியல் மற்றும் பொருளாதாரம் சீரழிந்துபோகிறது.

2007 இல் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்ட ஐரோப்பியத்தடையின் பிறகாக, 2007 இல் அமெரிக்காவிற்கும் சிறீலங்காவிற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, Okinawa தீவுகளில் நிலைகொண்டிருந்த 1000 அமெரிக்கக் கடற்படை வீரர்கள் சிறீலங்காவிற்கு அனுப்பிவைக்கப்படனர். (கடற்புலிகளின் போக்குவரத்தையும் தாக்குதலையும் முறியடிக்கும் திட்டமிடல்)

**(09.03.2002 சிறீலங்காவிற்கான அமெரிக்கத்தூதுவர்** **Ashly wills :** மேற்கொள்ளப்படும் அனைத்து உடன்படிக்கைகளும், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்தே மேற்கொள்ளப்படுவதற்கான “அடிப்படைக்காரணங்களை” நான் இத்தீவில் ஏற்றுக்கொள்கிறேன்)

அமெரிக்க மற்றும் பிரித்தானிய அரசுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதித்த தடையானது தமிழீழ விடுதலைப்புலிகளது வலுச்சமநிலையை உடைத்தது மட்டுமன்றி ஓர் இனஅழிப்புப் போருக்கு வித்திட்டது. அதேவேளே சிறீலங்கா ஆயுதங்களைக் குவிக்க உதவியது.

(சீனா, இஸ்ரேல், இந்தியா, உக்ரேன், பாகிஸ்தான், செக்கோசிலோவாக்கியா ஆகிய நாடுகள் முறையே; சிறியவகை ஆயுதங்கள், வேகப்படகுகள், ஆயுத/கடன்உதவிகள், 10,000 உந்துகணைகள் ஆகியவற்றைக் குவித்தன. (மூலம்: SIRPI )

(மேலதிகமான அமெரிக்காவின் தூண்டல்கள், மூலவிளக்கங்கள் என தீர்ப்பில் விளக்கப்பட்டன, இப்பதிவு நீண்டுவிடும் என்பதால் அவற்றைத் தவிர்த்திருக்கிறேன். அவை அச்சில் வெளிவரும்)

இந்த அடிப்படைகளில்படி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சிதைத்து இனப்படுகொலையைத் தூண்டியதில் அமெரிக்காவின் பங்கு உறுதிசெய்யப்படுகிறது.

- Anna Esther Cecena
(நீதிபதி மற்றும் பேராசிரியர்)

*In Loving memory of*

# Deron Camillus



**AUG 4, 2003** **SEPT 22, 2023**

# செல்வன் டெரன் கமிலஸ்



உங்கள் நினைவுகளை
எங்கள் உளம் தாங்கி
ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவன் மலரடி
அருள் வேண்டி
வணங்குகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார்,
உறவினர், நண்பர்கள்
அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு
அன்புடன்
கேட்டுக்கொள்கின்றோம்.

BALACHANDRAN SPORTS CLUB SINCE 2005

**Balachandran Sports Club**

**பாலச்சந்திரன் விளையாட்டு கழகம்**

# ஜரிஷ் பொபிசான்ட்ஸின் உண்ணா விரதப்போராட்டம்! அகிம்சையின் உச்சந் தொட்ட தியாக தீபம் திலீபன்!

18.09.2023

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.






## ஜரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்:

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர். அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்!



பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாட்களில் முடிவுக்கு வந்தது, ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.








'ரொபேர்ட் ஜெரார்ட் சான்ட்ஸ்' (Robert Gerard Sands), 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 - மே 5, 1981), ஜரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த போராளியும், ஐக்கிய இராசசியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ். ஜரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பை ஆரம்பித்தனர். இவர் உண்ணாநோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## தமிழரின் உரிமைகளுக்காக திலீபன்:




அன்று ஜரிஷ் மக்களின் எழுச்சிக்கு அகிம்சை ரீதியில் குரல் கொடுத்தது போல, தமிழரின் உரிமைகளுக்காக, மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்,

சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப்பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக காவல் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும், என்ற ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்டம்பர் 15ம் திகதி நல்லைக் கந்தனின் முன்றலில் தனது உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தது இந்திய இலங்கை ஒப்பந்தம். தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை, தமிழர் நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை மிக வேகமாக தொடர்வதற்கு வழி வகுத்தமையால், மகாத்மா காந்தி இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையைக் கையில் எடுத்து, அகிம்சையின் அடையாளமாக உலகிற்கு முன் நிமிர்ந்தார் தியாக தீபம் திலீபன்.

**ஜரீஸின்**
**திலீபன்**
**பொபி**
**சான்ட்ஸ்**

தங்களை அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும், சிறையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிறுத்தவேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து பொபிசான்ட்ஸ் அவரது தோழர்கள் உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணா விரதம் இருந்த நிலையிலேயே ஜரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement ) சார்பில் நின்று தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

பொபி சான்ட்ஸ், அயர்லாந்தை ஆக்கிரமித்து வைத்திருந்த




பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த ஒரு ஐரிஸ் சாதாரண போராளி. பிரித்தானியர்களின் அதிகாரத்திற்கு எதிராக அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடிக் கொண்டிருந்த ஐரிஸ் குடியரசு இராணுவத்தில் (IRA) தன்னை இணைத்துக் கொண்ட போது அவருக்கு வயது 18.

ஐரிஷ் விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்த வுடனேயே ஏகாதிபத்திய அரசு சிறைப்படுத்தியது. சட்ட விரோத மாக துப்பாக்கி பயன்படுத்தியது, பெருவாரியான ஆயுதங்களை பதுக்கிவைத்தது, வெடிகுண்டு வழக்கு என தொடர்ச்சியாக சிறையிலடைத்தது.

சிறையில் அரசியல் கைதிகள் குற்றவாளிகளை போல நடத் தப்பட்டனர், அவர்களது தார்மீக உரிமைகள் மறுக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்ச்சியாக ஆளாக்கப் பட்டனர்.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபி சான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம் மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொபிசான்ட்ஸின் மரணம் விடுதலைக்காக உலகமெங்கும் போராடி வரும் போராளிகளின் மனநிலையை பிரதிபலிக்கும். எங்கள் மீதான பழிவாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற அவரின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒருநாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது.

## விண்ணிலிருந்து விடுதலையை பார்ப்பேன்!

மரணத்தின் தறுவாயில், விண்ணிலிருந்து பார்ப்பேன் விடுதலையை என்ற தியாக தீபம் திலீபனின் வார்த்தைகள் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை உத்வேகப்படுத்தியது.

“கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக்கூடாது. நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக்கூடாது. இறக்கும் வரை எந்தவித மான சிகிச்சையும் அளிக்கக்கூடாது” என்பதை உறுதிப்படுத்தி பன்னிரு நாட்களுக்கு நீராகாரம் இன்றி தனது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து



என் தோழர்களுடன் சேர்ந்து நமது இலட்சியத்துக்காக உழைப் பேன் என்று கூறிய தியாக தீபம் திலீபன் அணைந்து பல ஆண்டுகள் கடந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது.


1987ம் ஆண்டில் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் தற்போது தாயகத்தில் இடம்பெறுகிற அரசியல் சூழ்நிலையிலும் அவசியமான மற்றும் முக்கியமான கோரிக்கைகளாக உள்ளன.

வடகிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியான நில அபகரிப்பும் மற்றும் இராணுவ மையமாக்குதலும் இன்று வரை இடம் பெற்று கொண்டு வருகிறது. அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறை களில் வழக்கு இன்றி அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

திலீபனின் போராட்டத்தின் முக்கிய காரணிகள் இன்றும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.


திலீபனின் போராட்டம் வரலாறு மட்டும் அல்ல, இன்று நடை பெறுகின்ற தாயக நிலவரத்தில் அவசிய தேவையாகவும் அமைகின்றது. தமிழ் மக்களுக்காக போராடிய திலீபனின் விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது.

நன்றி: நவீனன்




AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,
சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca




அவளுக்கு அழுகைதான் வந்தது.

அதற்கான காரணம் சொன்னால் அனைவரும் சிரிப்பார்கள்.

ஆம், அவள் நீண்ட காலத்தின் பின் விடுமுறையில் வந்திருந்தாள். சண்டைக் காலங்களில் அவள் எங்கே நின்றாள் என்றே தெரியாது. தமது மகள் இறந்திருக்கலாம். இவர்கள் அதனை மறைக்கின்றார்கள் என்று குடும்பத்தவர்கள் ஒரு முறை தீர்மானமெடுத்து அவளுக்கு உரிய தொடர்பக முகாமிற்குள் சென்று ஒரு ஆர்ப்பாட்டமே நடத்தியிருந்தார்கள். அதனை அவளது தோழிகள் அவளுக்குச் சொல்லிச் சிரித்திருக்கின்றார்கள். இப்பொழுது யுத்த நிறுத்தம் என்பதால் சற்று ஓய்வாக இருப்தனால் அனைவரையும் போல அவளும் விடுமுறையில் வந்திருக்கின்றாள். அவ்வாறு விடுமுறையில் வந்திருக்கும் தங்களது குடும்பத்தினரும் உறவினர்களும் உணவின் மூலம் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களது பாசம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவளது உணவுப்பையில் இடம் இருக்கவில்லை. வேண்டாம் என்று சொன்னாலும் அவர்கள் விடுவதாயில்லை. அதுதான் அவளது அழுகைக்கான காரணம்.

இந்த நேரம்தான் நல்ல உவட்டுக்குள் கட்டி நிற்கும் படகில் ஆசை வந்தது. இப்போது எப்படியாவது சிரமப்பட்டு அதிலே ஏறினால்ப்போதும் இந்த வயிற்றுக்கோளாறு இலகுவாய்த் தீர்ந்து போகும்.

இயலாக் கட்டத்தில் அவள் தங்களுக்கேயுரிய பாசையில் அம்மாவைப் பார்த்து முறைத்தபடி கேட்டாள், “எனக்கென்ன இரப்பையா, உரப்பையா?”

அம்மா ஒரு கணம் நிலைகுலைந்தாள்.

“உனக்கெண்டு செய்யிறது பிள்ளை”

அம்மாவின் கையில் இருந்த உணவைப் பார்த்து விட்டுத் தூரத்தே வெறித்த அவளது கண்களில் ஆபிரிக்க நாடுகளில் எலும்பும் தோலுமாய் ஏக்கப்பார்வையுடன் உணவுக்காயத் தவமிருக்கும் சிறுவர்களல்ல, எங்களது தேசத்திலேயே பசியுடன் பாடசாலைக்கு வந்து மயங்கி விழம் குழந்தைகள் வந்து நின்றார்கள்.

“எப்போது இந்த உணவு நிலை சமப்படும்?”

என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டவள், “தமிழீழத்திதானே எதுவுமே சீராயமைய முடியும்”

என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

எப்போதாவது உணவு சமிபாடு அடையாத பிரச்சினை வந்தால் மிதமிஞ்சிய சூட்டில் தேநீர் குடிப்பாள், அல்லது மருத்துவப் போராளிக்குத் தெரியாமல் இரண்டு “டையின்” எடுத்துச் சாப்பிடுவாள். இப்போது இரண்டு அல்ல, பாதி “டையின்” கூடச் சாப்பிடுவதற்கு இடமில்லை.

உணவுத் தட்டை உள்ளே வைத்து விட்டு அம்மா அவளருகில் வந்து அமர்ந்தாள். வேறெவரும் வீட்டில் இல்லை. ஆறுதலாக ஏதும் கதைக்க அம்மா நினைத்திருக்கக்கூடும். அவள் அம்மாவின் மடியில் சாய்ந்தாள். தாயின் மடிதான் உடல் நோய்க்கும், உள நோய்க்கும் உலகிலேயே தலைசிறந்த மருந்து என்று அப்போது தோன்றியது. அம்மா மெதுவாக அவளைத் தடவிக் கொடுத்தாள். அப்போதுதான் அவளது கண்களில் அது பட்டிருக்கவேண்டும்.

“இது என்ன பிள்ளை காயம்?”

அது தீப்பற்றி எரிந்த தோழியைக் காப்பாற்றப் போய் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் விடுமுறை முடிந்து போக விடமாட்டார்கள். ஆகவே அவள் அம்மாவைச் சிரித்துச் சாமாளித்தாள்.

அம்மா தீவிரமாயும் அப்பாவித்தனமாயும் கேட்டாள்.

“நீ ஏன் பிள்ளை இயக்த்துக்கு போனனி,”

அவள் நிதானமாயச் சொன்னாள்.

“நீங்கள் விட்ட பிழையாலதானம்மா”

அம்மா புரியாலம் நெற்றி சுருக்கினாள்.

“நீங்களே அப்பாவோ கூட எங்களை அடிச்சு வளக்கேல்லே. அப்பிடி வளர்ந்த என்னை ஆரோ ஊரம் பேரும் தெரியாத ஒருத்தன் வந்து அதிகாரம் செய்யிறதை நான் விரும்பேல்ல. என்னை நானே தீர்மானிச்சுக்கொள்ளுற வாழ்க்கையைத்தான் விரும்பினன். அதாலதான் போனனான்.”

அம்மா பெருமூச்சு விட்டாள்.

“இனியென்ன சண்டை முடிஞ்சுதுதானே பிள்ளை விட்டிட்டு வாவன்?”

“வந்து என்ன செய்யிறது?”

“அண்ணாவுக்கு அடுத்த வருசம் “சிற்றிசன்” கிடைக்குமாம். அவன் உன்னை எடுக்கிறானாம். இல்லாட்டா சித்தப்பா எடுப்பார்தானே பிள்ளை. மாமாவும் தான் எடுப்பன் எண்டு கதைச்சவர்.”

அவளது சிந்தனை வேறு திசையில் ஓடிற்று. சித்தாவிற்கு ஐந்து பிள்ளைகள். அவர் மூன்று பிள்ளைகளை போராட அனுப்பலாம். மாமாவிற்கு நான்கு பிள்ளைகள் அவரும் இருவரைத் தரலாம். இனி எதற்கு? தனியே சுதந்திரம் கிடைத்தால் போதுமா? நாட்டை யார் அபிவிருத்தி செய்வது? ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு, கிராமம் தோறும் பாடசாலை, வைத்திய சாலை என்று கட்டுமானப் பணிகளை யார் செய்வது? நிர்வாகத்தை யார் கவனிப்பது? என்று கேட்பார்கள்.

“நீ ஒண்டும் பேசாமல் இரு பிள்ளை, நான் படுறபாடு உனக்கென்ன தெரியும்? பிள்ளை வளக்கத் தெரியேல்லை. எண்டு எல்லாரும் என்னைத்தான் பேசுகினம்”

ஓ! பெற்றோர்களால் சரியாக வளர்க்கப்படாத பிள்ளைகள்தான் போராடப் போகின்றார்களா? அவர்களால்தான் இவ்வளவு சாதனைகளையும் படைத்து புதியதோர் சரித்திரத்தை எழுத முடிகின்றதா? அப்படியானால் பெற்றோர்களே தயவு செய்து எந்தப் பிள்ளையையும் சரியாக வளர்க்காதீர்கள்.

அவளது மனம் கெஞ்சியது. அம்மாவின்து விழிகள் ஊற்றெடுத்துப் பெருகின. அவளுக்கு ஏனோ சின்ன வயதில் படித்த நல்ல மேய்ப்பன் கதை ஞாபகத்தில் வந்தது. அந்த மேய்ப்பனிடம் நூறு ஆடுகள் இருந்தனவாம். அவ்வற்றில் ஒன்று வழி தவறிப் போய் விட்டதாம். அவன் எஞ்சியிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு விட்டு அந்த ஒன்றைத்தேடித் காடு மேடெல்லாம் அலைந்து கண்டு பிடித்தானாம்.

அம்மாவும் கூட அப்படித்தான் இருக்க விரும்புகிறாளா? தன்னுடன் இருக்கும் இரண்டு பிள்ளைகளை விடவும் என்னை ஏன் அம்மாவின் மனம் அதிகமாய் நாடுகின்றது?

ஓ! என் இனிய அன்னையே, நான் திசை தெரியாமல் வழி தவறிய ஆட்டுக்குட்டி இல்லை. எனக்குரிய சரியான வழியில் போய்க்கொண்டிருக்கின்ற ஆறறிவுள்ள உங்கள் பிள்ளை.

அவள் புன்னகையுடன் தாயின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைச் சுண்டிவிட்டாள்.

அவளைப் பார்க்க உறவினர்கள் வந்தார்கள். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த விட்டு அவர்கள் புறப்பட்ட பொழுது அவர்களது உந்துருளி செயற்பட மறுத்தது. அவளும், அம்மாவும் மட்டும்தான்.

வீட்டிலிருந்தார்கள். ஆகவே அவளே அதற்கு எண்ணை அடைக்கிறது என்று கண்டு பிடித்து “பில்ரரைக்” கழற்றித் துப்பரவு செய்து கொடுத்தாள். அவர்கள் பெரிதாக வியந்தார்கள்.

அவர்களது வியப்பை மெல்லிய முறுவலுடன் ரசித்த படியே மனசுக்குள் கேட்டாள், “எங்களது பிள்ளைகள் நடுக்கடலில் வைத்தே “கியர் பொக்ஸ்” மாற்றுவார்கள் தெரியுமா உங்



களுக்கு?"

அம்மாவிற்கு ஏதாவது உதவி செய்ய அவள் முயன்ற போதெல்லாம் அம்மா தடுத்து விட்டாள். அவள் காரணம் கேட்டபோது.

"உந்த உடம்பு என்னத்துக்காகும்? சும்மாயிரு" என்றாள் அம்மா. அவள் வாய்விட்டுக் கண்ணீர் வரும் வரையும் சிரித்தபடியே பார்வையால் சொன்னாள்.

"ஒவ்வொரு நாளும் முதுகு கொடுத்துப் படகு தள்ளுற உடம்பம்மா இது"

இரவில் வீட்டிற்குள் வேர்த்துக் கொட்டியது. அவள் முற்றத்து மாமரத்தின் கீழிருந்த காட்டுத் தடிக் கட்டிலில் சுவாத்தியமாகத் தூங்க விரும்பினாள். அப்பா கூடப் பூச்சி, புழுவிற்கு பயத்தில் வெளியே தூங்குவதில்லையாம் என்று அம்மா மறுத்து விட்டாள். எல்லோரும் தூங்கிய பின் அவள் சத்தம் போடாமல் வெளியில் வந்து நிம்மதியாகத் தூங்கினாள்.

சமையலறையே உலகம் என்று பழகியிருந்த அம்மாவை ஒரு மாற்றத்திற்காக வெளியே அழைத்துப் போனாள். இரணைமடு அணைக்கட்டால் பயணித்து போது அம்மா இறுக்கிப் பிடித்த பிடியில் அன்று முழுவதும் தோள் வலித்த படியேயிருந்தது. அதனை விடவும் "அம்மா உனக்கு இவ்வளவு பயமா?" என்று நினைத்து மனசு வலித்தது.

துயிலுமில்லம் கூட்டிப்போய் தனது தோழர்கள், தோழிகள் ஒவ்வொருவரையும் காட்டி அவர்கள் எப்படியெல்லாம் எரிந்தும், சிதைந்தும், கரைந்தும் இந்த நாட்டிற்காயச் செத்தார்கள் என்று சொன்னபோது அம்மா வழி நெடுகவும் அழுது கொண்டே வர எல்லோரும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

அவளைப் போலவே விடுமுறையில் நின்ற அவளது தோழி ஒருத்தி பொழுது போகவில்லையாம் என்று அவளிடம் வந்தாள். இருவரும் சேர்ந்து வீட்டையே தலைகீழாக்கி விட்டு மரத்தில் ஏறி அமர்ந்து மாங்காய் சாப்பிட்டபடி கடற்கரை இப்போது எந்தச் சீரில் இருக்கும் என்று பேசிக்கொண்டார்கள்.

"புளி மாங்காய் பிள்ளை, காய்ச்சல் வரும்" மரத்தால் அவர்களை இறக்குவதற்காக அம்மா பொய் சொன்னாள்.

அவளது தோழி சிரித்தபடியே சொன்னாள். "தனது அம்மாவும் தன்னை நீண்ட நேரம் தண்ணீருக்குள் நிற்க வேண்டாம், காய்ச்சல் வரும் என்று பேசினாவாம்." இருவரும் சிரித்து சிரிப்பில் புரைக்கேறி தண்ணீர் குடிக்க இறங்கினார்கள்.

"துவக்கு உன்னைத் தூக்கும் போல கிடக்கு" அவளது தோழியைப் பார்த்து பெரியப்பா கேலியாகச் சொன்னார்.

இதே இந்தச் சின்னப் பெண்தான் படகில் மண்மூட்டை வைத்து ஏறி நின்று கனரக ஆயுதத்தை இயக்கி எதிரிக் கலங்களை வெளுத்து வாங்குகிறாள் என்பது தெரிய வந்தால் பெரியப்பாவின் முகம் எப்படிப் பேயறைந்தது போலாகும் என்று நினைத்து அவள் அடக்க முடியாமல் சிரித்தார். அது புரியாமல் தோழி அவளை முறைத்தாள்.

அவள் விடுமுறை முடிந்து புறப்படுவதற்கு முதல் நாளிரவு ஆறாம் பிறை நிலவு கீழிறங்கிக் கொண்டிருக்க கண்சிமிட்டும் நட்சத்திரங்களிடம் கதை கேட்டபடி சந்தோஷமாய்ப் படுத்திருந்த அவளருகில் என்றுமில்லாதவாறு அம்மா வந்து படுத்தாள்.

முதன் முதலாய் ஓய்வாய்ப் படுத்தபடியே வானத்து வைரங்களைத் தரிசித்த அம்மா வியந்து போனாள்.

"எவ்வளவு வடிவாயிருக்கு"

"வடிவு மட்டுமில்லையம்மா, செயற்கை வழிகாட்டும்கருவிகள் செயலிழக்கையில் எமது நிலையான வழிகாட்டிகளாக இருப்பவை இவைதான்" என்று அவள் சொன்னது நிச்சயம் அம்மாவிற்குக் கேட்டிருக்காது.

மாமரத்தின் சலசலப்பின் தாலாட்டில் அவள் விரைவாகத் தூங்கிப் போய்விட்டாள். அம்மாவிற்கு அது புது அனுபவம். அவள், பிறந்து வளர்ந்தது நாற்சார வீட்டில். இடம்பெயர்ந்து அவலப்பட்டபோம் இப்படி வானத்தைப் பார்த்து ரசிக்கும் அனுபவமோ, மனநிலையோ இருந்ததில்லை. அம்மா முதன் முதலாக உணர்ந்து கொண்டாள்.

"வாழ்க்கையும், இயற்கையும் மிகவும் அழகானவை. அவற்றில் அனுபவிக்க வேண்டிய பலவற்றை எங்களது தலைமுறை இழந்து விட்டது"

மெதுவாய்த் திரும்பி மகளைப் பார்த்தாள். கடல் நீரில் ஊறி, கடற்காற்றில் காய்ந்து, வெயிலால் பதனிடப்பட்டு வலிமை பெற்ற உடலுடனும், தலைவரின் வளர்ப்பில் வைரம் பெற்ற மனத்துடனும் அவள் ஆனந்தமாகக் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அம்மாவிற்கு அழுகை வந்தது. காரணம் புரியாமல் சத்தமின்றி அம்மா நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தாள்.

விடுமுறை முடிந்து அவள் புறப்படத் தயரரானாள். உறவினர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

"போகத்தான் போறியோ பிள்ளை?"

"வீட்டிட்டு வா பிள்ளை"

"போய் விலத்துப் போறன் எண்டு சொல்லு"

"நாங்கள் அங்கால போகேக்கை கூட்டிக் கொண்டு போறம். நீ வா"

என்று அவளை விக்கிரகமாய் நினைத்து அனைவரும் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள்.

அவள் பிரயாணப் பையைக் கையில் எடுக்கவும் அதுவரையும் பேசாமல் இருந்த பெரியப்பா இப்போது வாய் திறந்தார்.

"நீ போக வேண்டாம் நில், நான் மிச்சம் பார்த்துக் கொள்ளுறன்"

அவள் இப்படியொன்றை எதிர்பார்க்கவில்லை. அவர்களது உறவினர்கள் அனைவரின் மத்தியிலும் பெரியப்பாவின் சொல்லுக்கு மறு பேச்சுக் கிடையாது. அவர் மீது அனைவரும் அதிக பாசம் வைத்திருந்தார்கள். அவரும் அப்படித்தான். யாருக்காகவும் உயிரைக் கூட கொடுக்கத் தயங்கமாட்டார்.

அவள் தவித்துப் போய் பெரியப்பாவைப் பார்த்தாள். படகில் ஏனைய அனைவரும் காயமும் வீரச்சாவும் அடைந்துவிட ஒரே ஒரு இயந்திரத்துடன் எதிரிப் படைகுகளுக்குள்ளால் தனியே படகைக் கொண்டு வந்துபோது கூட அவள் இப்படிக் கலங்கவில்லை.

தனது பேச்சிற்கு மறுபேச்சு இல்லை என்பதால் பெரியப்பா மேலே எதுவும் பேசவில்லை. எல்லோரும் அவளது பதிலுக்காய்க் காத்திருக்க ஒரு கடுமையான அமைதி அங்கே நிலவியது. தனக்காகத் தானேதான் கதைக்க வேண்டிய கட்டாய நிலையில் அவள் வாய் திறந்து போது…

"அவள் போகட்டும் விடுங்கோ"

அவளால் தனது காதுகளையே நம்பமுடியவில்லை. பிரயாணப் பைகளை ஏறிந்து விட்டு ஓடி வந்து அந்தக் குரலிற்குரியவளைக் கட்டிக் கொண்டாள்.

தான் இழந்துவிட்ட சுதந்திரங்களையும் சந்தோஷங்களையும் தனது குஞ்சாவது அனுபவிக்கட்டும் என்று தாய்க் குருவி நினைத்தது போலும்.

அந்த இறுக்கமான அணைப்பில் மகள் தாயக்கு நன்றி சொன்னாள். தாய் மகளுக்குத் தன் மனப்பூர்வமான ஆசியைத் தெரிவித்தாள். இருவரும் சந்தோஷக் கண்ணீருடன் பிரிந்தார்கள்.

முகம் கொள்ளா மகிழ்வுடன் அவள் முகாம் திரும்பினாள். அவளைக் கண்டு ஓடிவந்து ஆர்ப்பாட்டம் செய்த தோழிகளைச் சமாளித்து விட்டு கடற்கரைக்குப் போனாள். நீண்ட நாள் பிரிந்து இருந்துவிட்டது போலிருந்தது, ஓடிப்போய் நீரில் கால் வைத்தாள். அம்மாவின் அருகாமையாய் அது குளிர்ந்தது. கடற்காற்று அம்மாவின் மென்மையுடன் தலை கோதியது. தூரத்தில் அலைகள் அம்மாவின் சிரிப்பைப் போல நுரைகளுடன் கரை சேர்ந்தன. எங்குமே அம்மா நிறைந்திருப்பதாய்ப் பட்டது. கடலும் ஒரு தாய்தானே.

கரையோரமாக எங்கோ போய்விட்டு வந்து கொண்டிருந்த பொறுப்பாளர் அவளைக் கண்டு கூப்பிட்டார்.


"ஓமம்மா"

சொல்லி விட்டு நாக்கைக் கடித்தாள் அவள். நல்லவேளை, பக்கத்தில் யாருமில்லை. கடலின் இரைச்சலில் பொறுப்பாளருக்கும் சரியாக விளங்கியிருக்க வாய்ப்பில்லை.

-சுதந்திரப்பறைவள் - 2002 ஐப்பசி, கார்த்திகை


உலக வணிகம் ULAGA VANIKAM

# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# தீயினில் எரியாத தீபங்களே!



காற்றும் ஒருகணம் வீச மறந்தது
கடலும் ஒருநொடி அமைதியாய் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தது

தீயினில் எரியாத தீபங்களே –எம்
தேசத்தில் நிலையான வேதங்களே
மண்ணினில் விதையான முத்துக்களே –நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் –புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்

கடலினில் கடல்புறா பயணங்கள் போனது
சிறிலங்கா இராணுவம் பொறிவைக்க லானது
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின்படி நஞ்சை குடித்தபின் சாய்ந்தனர்

இளமையில் சருகாகிக் போனவரே –எம்
இதயத்தில் உருவான கோவில்களே

அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பழகன் றெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார்
ஆகிய வேங்கைள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர்
மக்களுக்காக கடல் சென்றீரே –மண
மாலைகள் வாட முன்னர் போனீரே

எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
இந்திய அரசது ஏன்துணை போனது
இடியுடன் பெருமழை ஏன் உருவானது
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம் –நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்

# சனல் நாலு திறந்திருக்கும் வாய்ப்புக்கள்!

16.09, 2023

சனல் நாலு வெளியிட்ட வீடியோவை முதலில் அதிகமாக பரவலாக்கியதும் பரப்பியதும் சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைத்தளக் கணக்குகள் தான். அந்த ஆவணப் படத்தில் பிள்ளையானுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதனால், சாணக்கியனுக்கு ஆதரவான தரப்புகள் அதை வேகமாகவும் அதிகரித்த அளவிலும் பரப்பினார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சாணக்கியன் போன்ற தரப்புக்களிடம் பலமான சமூக வலைத் தள பிரச்சாரகக் கட்டமைப்புக்கள் உண்டு. சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைதளக் கட்டமைப்புக் கூடாகத்தான் பிள்ளையானுக்கு எதிரான அசாத் மௌலானாவின் சாட்சியம் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.




அந்த வீடியோவானது, ரணிலைப் பலப்படுத்தும் மேற்கத்தய நிகழ்ச்சி நிரலின் பிரதிபலிப்பு எனலாம். அதேசமயம் அதில் தமிழ் மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் உண்டு. இலங்கை அரசுக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக் கும் குற்றச்சாட்டுக்கள் அந்த வீடியோவில் உண்டு. தமிழ்மக்கள் ஏன் பரிகார நீதியைக் கேட்கின்றார்கள் என்பதற்குத் தேவை யான தர்க்கபூர்வமான சான்றுகளை அந்த வீடியோ வெளிப் படுத்துகின்றது. அந்த வீடியோவில் கூறப்படும் தகவல்கள் உண்மையா இல்லையா என்பதனை விசாரிப்பதற்கு அனைத் துலக விசாரணை வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் கேட்கிறார். முஸ்லிம்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கேட்கிறார். குண்டுவெடிப்பின் போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரி கேட்கிறார். முன்னாள் படைத் தளபதியும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சரத் பொன்சேகா கேட்கிறார்.

அப்படி ஒரு விசாரணை நடக்கலாம் நடக்காமல் விடலாம். ஆனால் பொறுப்புமிக்க பதவிகளில் இருந்தவர்களும் இருப்பவர் களும் அவ்வாறு கேட்பது என்பது இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக்கூறும் தன்மையை கேள்விக்கு உட் படுத்துகின்றது. அது தமிழ்மக்களுக்குச் சாதகமானது. தமிழ் மக்கள் வேறு காரணங்களுக்காக அதாவது இனப்படு கொலைக்கு எதிரான நீதியை நிலைநாட்ட அனுத்துலக விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள். பேராயர் மல்கம் ரஞ்சித் அப்படிக் கேட்கமாட்டார். ஆனாலும் தமிழ்மக்கள் ஏன் உள்நாட்டு விசாரணையை நம்பவில்லை என்ற கேள்விக்கான விடை பேராயரின் கோரிக்கைக்குட் பொதிந்து கிடக்கின்றது.

எனவே சனல் நாலு வெளியிட்ட வீடியோவானது இலங்கையில் மேற்கு நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலானது என்பது அதன் ஒரு பரிமாணம். இன்னொரு பரிமாணம் அது தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டத்திற்குப் பலம் சேர்க் கின்றது என்பது.

எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, சனல் நாலு வீடியோ மட்டுமல்ல, இந்தப் பூமியிலே இலங்கை அரசாங்கத் துக்கு எதிராக அல்லது இலங்கைத்தீவின் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக வெவ்வேறு நாடுகள், அனைத் துலக நிறுவனங்கள் முன்னெடுக்கும் வெவ்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகள் அனைத்துமே ஏதோ ஒருவிதத்தில் ஈழத் தமிழர்கள் கெட்டித்தனமாகக் கையாளவேண்டிய வாய்ப்புகள் தான். அவ்வாறான வாய்ப்புகளை வழங்கும் மேற்கத்திய மற்றும் பிராந்திய அளவிலான நகர்வுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

முதலாவதாக, அமெரிக்க கண்டத்தில் அங்குள்ள இரண்டு பெரிய நாடுகளாகிய அமெரிக்காவும் கனடாவும் இலங்கை அர சாங்கத்துக்கு எதிராகவும் அதன் படைப்பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் நிர்ணயகரமான நகர்வுகளை முன்னெடுத்திருக் கின்றன. இலங்கைத் தீவின் இப்போதுள்ள படைத் தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கிறது. அதுபோலவே முன்னாள் கடற்படை தளபதி ஒருவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர கடந்த மார்ச் மாதம் அமெரிக் காவில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி போர்க் குற்றங் களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு






வழக்குத் தொடுக்க முடியும். அவ்வாறு மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடுக்கத் தேவையான வாய்ப்புகளை அந்தச் சட்டம் அதிகப்படுத்தியிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவதாக, கனடாவில் இனப்படுகொலை தொடர்பில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தவிர, மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக இந்த ஆண்டு மார்ச் மாதம் கனடா தடைகளை விதித்திருக்கின்றது. அதன்படி அவர்கள் அந்த நாட்டில் தமது பினாமிகளின் ஊடாகக்கூட முதலீடுகளைச் செய்ய முடியாது.

கனடாவின் மேற்கண்ட நடவடிக்கைகள் அங்குள்ள பலமான தமிழ் புலம்பெயர் சமூகத்தின் வாக்குகளைக் கவரும் நோக்கிலானவை என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அவை அவற்றின் விளைவுகளைக் கருதிக்கூறின் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பவை.


மூன்றாவது நகர்வு, ஐநாவின் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம். இது கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தின் பிரகாரம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கி வருகிறது. அங்கே சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக கையாளப்படத் தக்கவை. அண்மையில் தொடங்கிய ஐநா கூட்டத் தொடரில் மனித உரிமைகள் உதவி ஆணையாளர் அந்த அலுவலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அடையாளம் காணப்பட்ட பத்து நபர்களைப் பற்றிய விபரங்களை உறுப்பு நாடுகள் கேட்பதாகவும் குறிப்பிடுகிறார். ஏற்கனவே அமெரிக்காவும் கனடாவும் குறிப்பிட்ட சில படை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கும் ஒரு பின்னணியில், மேலும் பத்து பேர் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது.

அந்த அலுவலகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களில் தமிழ்த் தரப்பு மனித உரிமை மீறல்களும் தொடர்பான தரவுகளும் இருக்கலாம். ஏனெனில் ஐநா அதைத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து தொகுக்கவில்லை. சீன விரிவாக்கத்தின் கருவிகளாகக் காணப்படும் ராஜபக்ச சகோதரர்களை எப்பொழுதும் சுற்றி வளைத்து வைத்திருக்கும் ராஜதந்திர உள்நோக்கங்கள் ஐநா தீர்மானங்களில் உண்டு. ஆனாலும் தமிழ் நோக்கு நிலையில் இருந்து இலங்கைத்தீவின் அரச கட்டமைப்பும் அரசியல் பாரம்பரியமும் பொறுப்புக்கூறலுக்கு உகந்தவை அல்ல என்பதனை நிரூபிப்பதற்கு அவை உதவும்.

நான்காவது நகர்வு, இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் ராமேஸ்வரத்தில் வைத்துக் கூறிய கருத்துக்கள். இலங்கைத்தீவில் இடம் பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். தனது ருவிற்றர் பக்கத்தில் இனப்படுகொலை என்று தமிழில் எழுதிருந்தார். தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளின் வாக்கு வங்கிக்குள் இருந்து ஈழ ஆதரவாளர்களைப் பிரித்து எடுப்பதற்கான ஓர் உத்தியாகத்தான் அமித் ஷா அப்படிச் சொன்னார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் ஓர் உள்துறை அமைச்சர். அவர் அவ்வாறு கூறியிருப்பதை ஈழத் தமிழர்கள் பொருத்தமான விதங்களில் கையாளலாம். ஏற்கனவே 40 ஆண்டுகளுக்கு முன் 1983இல், அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்திய நாடாளுமன்றத்தில் வைத்து "இலங்கையில் நடப்பது இனப்படுகொலையேயன்றி வேறு எதுவுமில்லை"என்று கூறினார். அடுத்த ஆண்டு அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சவான் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிராக நடப்பவற்றில் "இனப்படுகொலையின் கூறுகள் உண்டு" என்று கூறினார். இப்பொழுது அமித் ஷா கூறியிருக்கிறார்.




அமித்ஷா கூறியிருப்பது பெருமளவுக்கு உள்நாட்டுத் தேர்தல் தேவைகளுக்கானதாக இருக்கலாம். ஆனால் அதை ஈழத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து வெற்றிகரமாகக் கையாள வேண்டும். அதற்குரிய உபாயங்களை ஈழத்தமிழர்கள் வகுத்துக்கொள்ள வேண்டும்.




இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கனடாவோ அமெரிக்காவோ அல்லது இந்திய உள்துறை அமைச்சரோ அல்லது ஐ.நாவோ அல்லது ஏனைய உலகப் பொது நிறுவனங்களோ சனல் நாலோ, தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து முடிவுகளை எடுக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது; அம்புலிமாமாக் கதை போன்றது. அரசியல் என்பது நலன்சார் உறவுகளின் இடையூடாட்டம் தான். அங்கே அறநெறி, நீதி நியாயம் போன்றவை இரண்டாம்பட்சம். உலக நாடுகளும் உலகப் பொது நிறுவனங்களும் உலகளாவிய ஊடக நிறுவனங்களும் தங்கள் தங்கள் நலன்சார் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். தமது அரசியல், பொருளாதார, இராணுவ இலக்குகளை முன்வைத்தே எந்தவோர் அரசும் வெளிவிவகார முடிவுகளை எடுக்கும்.

ஆனால் இலங்கை சம்பந்தப்பட்ட அவர்களுடைய நகர்வுகள் ஈழத்தமிழர்கள் தமக்குச் சாதகமாகக் கையாளத்தக்கவைகளாக இருக்குமானால், அவற்றைப் பொருத்தமான விதத்தில் பொருத்தமான வேளைகளில், வெற்றிகரமாகக் கையாண்டு நீதிக்கான தமது போராட்டத்துக்கு எப்படி அணி சேர்க்கலாம் என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த மே 18ஆம் திகதியன்று கனேடியப் பிரதமர் தன்னுடைய உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அப்பதிவை எத்தனை இலட்சம் தமிழ்மக்கள் திரும்பத்திரும்ப ரீ ருவீற் பண்ணினார்கள்? என்று ஓர் அரசியற் செயற்பாட்டாளர் கேட்டார். அங்கேதான் தெரிகிறது தமிழ் மக்களின் இலத்திரனியல் வலையமைப்புகளின் பலவீனம். கனேடியப் பிரதமரின் கருத்துக்கு இலங்கை உத்தியோகபூர்வமாக எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதாவது அதை இலங்கை அரசுக் கட்டமைப்பு எதிர்கின்றது. அப்படியென்றால் அதைத் தமிழ் மக்கள் எப்படிக் கையாண்டிருக்க வேண்டும்? கனேடியப் பிரதமரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்துக்கு சென்று அவர் அங்கே பதிவிட்டிருப்பதை திரும்பத் திரும்ப இலட்சக்கணத்தில் கோடிக்கணக்கில் திரும்பத் திரும்ப ரீ ருவிற் பண்ணியிருக்க வேண்டும். அது அவருக்கு உற்சாக மூட்டும். தமிழ்மக்கள் கனடாவோடு தமது சகோதரத்துவத்தை, வாஞ்சையைத் தெரிவிப்பதற்கு அது ஓர் அருமையான சந்தர்ப்பமாக இருந்தது.

அப்படிதான் அமித்ஷா தனது ருவிற்றர் பக்கத்தில் தமிழில் இனப்படுகொலை என்று பிரசுரித்திருந்ததை தமிழர்கள் தமக்குச் சாதகமாகப் பரப்பியிருந்திருக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க்கட்சிகள் அல்லது தமிழ் அமைப்புகள் அல்லது செயற்பாட்டாளர்கள் அதை அவ்வாறு கையாண்டன?


அதுதான் பிரச்சினையே. மேற்சொன்ன வெளியுறவு வாய்ப்புக்களை வெற்றிகரமாகக் கையாளத் தேவையான ஒன்றிணைந்த கட்டமைப்புக்கள் தமிழ் மக்களிடம் இல்லை. கட்சிகளை அல்லது அரசியல் வாதிகளின் தனிப்பட்ட வாக்கு வங்கிகளைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு இலத்திரனியல் கட்டமைப்புக்கள் உண்டு. ஆனால் தேசத்தைக் கட்டி யெழுப்பும் கட்டமைப்புக்கள் குறைவு. அவ்வாறான ஒன்றிணைந்த கட்டமைப்புக்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில், ஈழத்தமிழர்கள் வெறுவாய் சப்பிக்கொண்டு, வீர வசனம் பேசிக்கொண்டு வெளியாருக்காகக் காத்திருக்கிறார்கள் ?

நன்றி: நிலாந்தன்

முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி நினைவும் 10.10.2023

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்

10 அக்டோபர்



2ம் லெப்.
**கஸ்தூரி**

வீரவேங்கை
**ரஞ்சினி**

வீரவேங்கை
**தயா**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்